# வெறுந்தாள்

ரா.கீ



## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# வெறுந்தாள்

டாக்டர். ரா. சீனிவாசன்,
எம்.ஏ.,எம்.லிட்.,பி.எச்டி.,

அணியகம்
5, செல்லம்மாள் தெரு,
செனாய் நகர், சென்னை - 600 030.

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 1978 |
| மறுபதிப்பு | : | ஆகஸ்ட்டு, 1998 |
| நூல் பெயர் | : | வெறுந்தாள் |
| ஆசிரியர் | : | ரா. சீனிவாசன் |
| பொருள் | : | நாவல் |
| பதிப்பகம் | : | அணியகம்<br>5, செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர்,<br>சென்னை - 600 030. |
| தாள் | : | மேப் லித்தோ 13.6 kg. |
| அளவு | : | Crown 1 / 8 |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 112 |
| விலை | : | ரூ.25/- |
| ஒளியச்சு | : | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை - 600 030. |
| அச்சகம் | : | நெல்சன் பிரிண்டிங்<br>சென்னை - 600 029. |

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| கம்பராமாயணம் | (உரைநடை) | ரூ.50 |
| மாபாரதம் | ,, | ரூ.50 |
| சீவக சிந்தாமணி | ,, | ரூ.35 |
| திருவிளையாடற் புராணம் | ,, | ரூ.40 |
| குப்பைமேடு | (சிறுகதைகள்) | ரூ.25 |
| படித்தவள் | ,, | ரூ.25 |
| பரிசு மழை | ,, | ரூ.25 |
| வழுக்கு நிலம் | ,, | ரூ.30 |
| அணியும் மணியும் | (கட்டுரை) | ரூ.30 |
| திருக்குறள் செய்திகள் | (தொகுப்புரை) | ரூ.40 |
| திருக்குறள் மூலம் | | ரூ.20 |
| நாலடியார் செய்திகள் | ,, | ரூ.20 |
| மொழியியல் | | ரூ.50 |
| தொல்காப்பியமும் நன்னூலும் | | ரூ.60 |
| திருப்பாவை விளக்கவுரை | | ரூ.20 |
| திவ்விய பிரபந்த சாரம் | | ரூ.15 |
| சொல்லின் செல்வன் | (நாடகம்) | ரூ.25 |
| தெய்வத் திருமகன் | (புதுக் கவிதை) | ரூ.25 |
| திரௌபதி சூள் உரை | ,, | ரூ.30 |
| தமிழ் இலக்கிய வரலாறு | | ரூ.20 |
| சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும் | | ரூ.50 |
| மணிமேகலை மூலமும் திறனாய்வும் | | ரூ.50 |
| சிலம்பின் கதை | (உரைநடையாக்கம்) | ரூ.50 |
| நவீன் தெனாலிராமன் | (நகைச்சுவைக் கதைகள்) | ரூ.25 |

# முன்னுரை

இது எழுத்தில் ஒரு புதிய முயற்சி; இதில் சில பாத்திரங்கள், உரையாடல்கள் இடம் பெறுகின்றன. பாத்திரங்களின் உரையாடல்கள் இக்கதையை இயக்குகின்றன. நாடகப் பாங்கு இதன் சிறப்புப் பகுதி.

கதை சொல்பவன் தலைமைப் பாத்திரம்; அவன் பத்திரிகை ஆசிரியனாக இருப்பதால் கதைகளைத் தேர்ந் தெடுக்கும் பொறுப்பு ஏற்படுகிறது. பிரசுரிக்கத் தகுதி அற்ற கதைகள் அவன் வீட்டில் குப்பையாகக் குவிந்து கிடக்கின்றன. அவற்றுள் ஒன்று 'வெறுந்தாள்' என்ற கதை : மற்றும் சில கதைகள் இவர்கள் விமர்சனம் செய்கிறார்கள்.

சுறுசுறுப்பாக இயங்கும் சரசு அவள் ஒரு விதவை. மறுமணம் செய்து கொள்கிறாள். இலக்கிய ஆர்வம் மிக்கவள்; வானம்பாடி என்ற கவிஞன் புதுக்கவிதைகள் இயற்றுகிறான். இவர்கள் ஓர் இலக்கிய வட்டம் அமைக்கிறார்கள். இலக்கிய விமர்சனம் இவர்கள் உரையாடல்களாக அமைகின்றன.

கதாசிரியன் மனைவி ரசிகத்தன்மை அற்றவள். இந்தக் கூட்டத்தை அவள் அறவே வெறுக்கிறாள். மாற்றத்துக்கு இப்பாத்திரம் இடம் பெறுகிறது. இறுதியில் அவளே தலைமை பெறுகிறாள்.

உயர்ந்த தத்துவம் பேசுகிறார்கள். வாழ்க்கை அவற்றை மாற்றி விடுகிறது. இப்படித் தத்துவம் பேசுகிறவர்கள் பலரும் சராசரி மனிதர்களே. வாய்ப்புகள் வரும்போது அவர்கள் மாறி விடுகிறார்கள். கொள்கைகள் அவற்றை மறந்து செயல்படு கிறார்கள். வாழ்க்கை ஓட்டத்தில் அவர்களும் வேகமாக ஓடுகிறார்கள்; அவ்வளவுதான். அவர்கள் இலக்கிய ரசனை, சிந்தனைகள் இவை அவர்களைவிட்டு நீங்குகின்றன. இதைக் காட்டுவது இக்குறு நாவல்.

ரா. சீனிவாசன்

# பதிப்புரை

எழுத்து என்பது புதிய பரிமாணம் கொண்டு இயங்குவது; சமுதாய விமரிசனம் புதுக்கவிதையாகிறது. இப்புதுக் கவிதை நடை உரை நடைக்கும் உரியது ஆகிறது.

'தெய்வத் திருமகன்', 'திரௌபதி சூள் உரை' இவை இரண்டும் என் எழுத்தில் உதயமாகிய புதுக்கவிதைப் படைப்புகள்.

இவற்றிற்கு முன்னோடியாக என் உரைநடை நூல்கள் புதுக்கவிதைத் தாக்கம் பெற்றிருக்கின்றன என்பதை ஒரு சில விமரிசகர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். அது இக்காலம் உருவாக்கித் தந்த உரைநடை; கவிதை உரைநடையிலும் இடம் பெற இயலும்; இது பலர் நடையிலும் காணப்படும் தனிக்கூறு.

இந்நடைஇயல் என் படைப்புகளில் தனித் தன்மை பெறுகிறது.

மற்றும் 'சமுதாயச் சிந்தனைகள்' நாவல் வடிவம் பெறுவது இதன் தனிச் சிறப்பு; கதை அதற்கு ஒரு கருவியே தவிரத் தலைமை பெறுவது இல்லை. பாத்திரங்களின் உரையாடல்கள் சிந்தனை களை வெளிப்படுத்துவதற்குத் துணை செய்கின்றன; அதற்கு நாடகப் பாங்கு துணை செய்கிறது.

இன்று கல்வி கண் திறக்கலாம்; ஒளி காட்டலாம்; ஆனால் வாழ வழி காட்டுவதில் வெற்றி பெறவில்லை; அதைப் பற்றிய சிந்தனைகள் மற்றும் தனி மனித மேம்பாடுகள், குடும்பப் பாச உறவுகள் இவற்றைக் கடந்து மனிதன் தன் சுற்றுச் சூழல்கள் பற்றியும் சிந்திக்க வேண்டும்;

அது புதிய சமுதாயப்படைப்புக்கு வித்தாகும்; இதை இச்சித்திரம் வலியுறுத்துகிறது.

இது பலராலும் பாராட்டப்பட்டு விமரிசனம் செய்யப்பட்டுப் பேசப்பட்ட நூல்; இது இன்றும் தன் உள்ளடக்கத்தை வெளிப்படுத்தும் தகுதி பெற்றுள்ளது; இன்று இதன் செய்திகள் பயன் உள்ளவை என்பதால் மறுபதிப்புக் காண்கிறது.

ஒரு சில நூல்கள் காலத்தால் மங்கிவிட வாய்ப்பு உள்ளது; அதன் உள்ளடக்கமும் அதற்குக் காரணம் ஆகிறது. இந்நூல் சிந்தனைகள் இன்றும் வாழ்வுக்கு ஒளி காட்டும் நிலையில் உள்ளன.

எழுதும்போது வெறுந்தாள்தான்; அச்சிடப்பட்ட பிறகும் வெறுந்தாள் என்பது முரண்தொடையாகும்; நூல் வெறுந்தாள் அன்று; செறிவு மிக்கது; அறிவு மிக்கது; தேடல் முயற்சியில் இது வெற்றி காண்கிறது.

இது எழுப்பும் வினா; கொள்கை எழுத்துக்கு வேண்டுமா வேண்டாமா என்பது; 'கொள்கை இல்லாதவன் எழுத்து வெறுந்தாள்' என்று இது கூறுகிறது; அது ஏற்கத் தக்கதா இல்லையா என்பது சிந்திக்கத் தக்கது; அதுவே இந்நாவலின் கருப்பொருள்.

**- ரா. சீனிவாசன்**

''வெறுந்தாள் என்ன விடைத்தாள்தான் தரட்டுமே அது வினாத்தாளுக்கு விடைத்தாள் ஆகுமேயன்றி அது பசித்தாளுக்குச் சோறு போடுமா?இதில் கேட்கப்படுகின்ற கேள்வி இது. விடைதர முடியுமா? சிந்தித்துப் பாருங்கள். கொள்கை இல்லாதவர் எழுத்து வெறுந்தாள் தான். அது எப்படி? இரண்டுக்கும் விடை காண முயல்வதே இந் நாவல்.

# வெறுந்தாள்

## [1]

வாழ்க்கை இதற்கு அர்த்தம் பொருள் என்ன என்பதே விளங்கவில்லை. நான் படிக்கும்பொழுது தமிழாசிரியர்கள் பாட்டுச் சொல்லிப் பதவுரை, விளக்கவுரை இலக்கணம் எல்லாம் சொன்னார்கள். அது எனக்கு விளங்கியது. ஆனால் இந்த வாழ்க்கையின் அர்த்தம்தான் தெரியவில்லை.

அன்று சரசுவதி என்னிடம் நிரம்ப நேரம் பேசினாள். அவள் எதை எதையோ பேசினாள். அவள் ஒரு இலக்கியப் பைத்தியம். நாவல் சிறுகதை என்றால் உயிர். ''எனக்கு வாழ்க்கையிலே நிம்மதி இல்லை; சில சமயம் பொழுது போவதே கஷ்டமாக இருக்கிறது'' என்று சொல்கிறாள்.

அவள் ஒரு விதவை, ஆனால் அவள் அதற்காகக் கவலைப்பட்ட நாட்கள் சிலதான். அவளிடம் அழகு அபரிமிதமாக இருந்தது. அதனால் அவளால் விதவை யாகவே காலம் கடத்த முடியாமல் போய்விட்டது. அப்படி அவளை விதவையாக விட்டுவைப்பது சமூகத்துக்கு ஒரு அபாயம் என்பதை உணர்ந்து அவளை மற்றொருவர் அது தான் இப்பொழுதைய கணவர் மணம் செய்து கொண்டார்.

அவளே சொல்கிறாள் ''நான் விதவையாகவே காலம் கடத்த முடியுமா? நீங்கள் எண்ணிப்பாருங்கள்'' என்று கேட்கிறாள்.

நான் எப்படிச் சொல்வது? மரியாதைக்காக ''ஏன் முடியாது?'' என்று கேள்வியைக் கேட்டு வைத்தேன்.

"மற்றவர்களால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது. எப்படியாவது அவர்கள் தங்கள் சிற்றின்பத்துக்கு இழுத்துச் சுவை காண விரும்புவார்கள். நான் மறுப்பேன்; அவர்கள் வேதனை அடைவார்கள். என்னமோ நான் அப்படிப் பிறந்துவிட்டேன்".

"நான் விதவை என்று அந்த மனுஷனிடமும் சொன்னேன்."

"No matter. அதை நான் பொருட்படுத்தவில்லை. அவன் அதிருஷ்டக்காரன் இல்லை என்று என் மாஜி கணவனைப்பற்றிப் பேசினார்."

"நான் தீர்மானமாகச் சொன்னேன். வாழ்க்கையில் விடுதலை என்பதை அவர் போனபிறகுதான் உணர்ந்தேன்; ஆண்களே வெறும் 'போர்'. எப்பொழுதும் அவர் என் அழகைப் பாராட்டுவார். என்னென்னமோ பேசுவார், அந்த உளறல்களைக் கேட்டுச் சலித்து விட்டது. அவசியமில்லாமல் என்னைக் கட்டிப் பிடித்து திடீர் என்று பைத்தியம் பிடித்தது போல நடந்து கொள்வார்; எங்கேயும் போக விடாமல் தடுத்துவிடுவார். சே! Horrible ஏன்டா பெண்ணாகப் பிறந்தோம் என்று ஆகிவிடும்" என்று என் பழைய வாழ்க்கையை எடுத்துச் சொன்னேன்.

"அதிலே இருந்து விடுதலை பெற்றேன்." மறுபடியும் நீங்களும் அதைத்தானே செய்யப் போகிறீர்கள் என்று மறுத்தேன். அவரால் பதில் சொல்ல முடியவில்லை. அவருக்கு விளங்கவில்லை. "எல்லாக் கணவன்மாரும் செய்வதைத்தான் நானும் செய்ய முடியும். வேறு என்ன எதிர்பார்க்கிறாய்" என்று கேட்டார்.

"என்னை மனிதனாக வாழவிடு, சுருக்கமாகச் சொன்னால் நீ மிருகமாகாதே என்று சொன்னேன்."

அவளுக்கு அந்த இரண்டாம் மணத்தில் விருப்பம் இல்லை. என்றாலும் அவள் தனித்து வாழ முடியாது என்பதை உணர்ந்காள்.

“சிறு பிள்ளைகளுக்கு விளையாட்டு அவசியம். எனக்கும் அதைப் போன்ற விளையாட்டுத் தேவைப் பட்டது. அதற்காகத்தான் இந்த இரண்டாம் மணம் செய்து கொண்டேன்” என்றாள் அவள்.

“ஆக உனக்கு வாழ்க்கை ஒரு விளையாட்டு” என்றேன்.

“வாழ்க்கையே ஒரு விளையாட்டாக இருக்கிறதே தவிர அதற்கு ஏதாவது அர்த்தம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.”

“இருக்கிறது. நீ மற்றொருவனை மகிழச் செய்கிறாயே அதுதான் உன் வாழ்க்கைக்கு அர்த்தம்”.

“நான் அவரிடத்தில் அந்த மகிழ்ச்சியைக் காண முடியவில்லையே” என்றாள்.

“இரண்டு பேரும் சடுகுடு விளையாடினால் அது ஆட்டம். இல்லாவிட்டால் அது வெறும் ஒட்டம்தான்” என்றேன்.

வாழ்க்கை ஒரு சிலருக்கு ஆட்டமாக இருக்கிறது. சிலருக்கு ஒட்டமாக இருக்கிறது என்பதை அப்பொழுது உணர முடிந்தது.

“எப்படியோ ஒடிக்கொண்டிருக்கிறது” என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். அது இப்பொழுது நினைவுக்கு வந்தது.

“பிடிக்காவிட்டால் நீ ஒப்புக் கொண்டிருக்கக் கூடாது” என்றேன்.

“அது அவசியம் என்று பட்டது. பல இளைஞர் களைப் பாழ்படுத்துவதை விட ஓர் இளைஞனை அழிப்பது நல்லது தானே. நான் இரண்டாவது மணம் செய்துகொள்ளா விட்டால் எனக்காக ஏங்கிப் பெருமுச்சு விடும் இளைஞர்கள்

கெட்டு அழிவார்கள்; நானும் சிலசமயம் அவர்கள் அழிவுக்குத் துணையாகிவிடுவேன். அதைவிட கௌரவ மாக அந்த ஒரு மனிதனை அழிப்பது நல்லதுதானே''.

அவள் சொல்லியது எனக்குப் புதிதாக இருந்தது.

''பின் என்ன? திருமணம் என்பதற்கு வேறு அர்த்தம் என்ன இருக்கிறது. ஓர் ஆடவனின் அகம்பாவத்தையும் ஆணவத்தையும் அழிக்க இதைவிட வேறு எந்த மருந்தும் கிடையாது. கலியாணம் ஆனவுடன் பெட்டியில் அடங்கிய பாம்பாகி விடுகிறான்'' என்று அவள் பேச ஆரம்பித்தாள்.

அவள் பேச்சுத்திறனை என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. நாவலும் கதையும் படித்து அவள் நா இப்படிப் புரண்டு விட்டது என்பதைத் தெரிந்து கொண்டேன்.

''இதோ பாரு! எனக்குப் பொழுது போக வேண்டும். அதுதான் பிரச்சினை'' என்றாள்.

''அதற்குத்தான் கலியாணம் பண்ணிக் கொண் டாயே''.

''அதிலே அவருக்குத்தான் பொழுது போகிறது; எனக்கு அதனால் தான் பொழுது போகவில்லை.''

இது முரண்பட்ட கருத்தாக இருந்தது.

அவருக்கு அதிலே பொழுது போகிறது. ''சரசு! நான் இந்தக் காதலிலே என்னை அப்படியே மறந்து விடுகிறேன். உன் நினைவில் என்னை அழித்துக் கொள்கிறேன்.'' இப்படித்தான் அவர் அடிக்கடிக் கூறுகிறார்.

''நல்லதுதானே''

''போர், பழைய காலத்து நாவல் 'டைலாக்கு' போல இருக்கிறது.''

"அப்ப என்னதான் சொல்கிறாய்?"

"அவசரப்பட்டுக் கலியாணம் செய்து கொண்டேன். விதவைக்கு வாழ்வு கிடைப்பது அரிது என்று நினைத்துக் கொண்டேன்; சந்தர்ப்பத்தை விடக்கூடாது என்பதற்காகத் தான் அந்த மனுஷரை என் கணவன் என்று ஏற்றுக் கொண்டேன்".

"So you regret for this - அதற்காக வருத்தப்படு கிறாயா?"

"அதுவும் சொல்லத் தெரியவில்லை, எனக்கு ஒரு பசி இருக்கிறது."

எனக்கு என்னமோ மாதிரி இருந்தது. அவள் எந்தப் பசியைப் பற்றிப் பேசப் போகிறாள்? தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பசிக்கு என்ன உணவு தேவைப் படுமோ என்று அஞ்சினேன்.

"நீ காண்டேகர் நாவல் படித்திருக்கிறாயா?" என்று கேட்டாள்.

இவளுக்கு என்ன காண்டேகரிடத்து ஒரு மோகம் என்று நினைக்கத் தொடங்கினேன்.

"பசி மூன்று வகைப்படும்; ஒன்று வயிற்றுப் பசி; மற்றொன்று காதல் பசி; மூன்றாவது தெய்வீகப் பசி" என்று விளக்கினாள்.

"நீ எந்தப் பசியில் இருக்கிறாய்?"

"நான் அறிவுப் பசியில் இருக்கிறேன். அதை அவர் சொல்ல மறந்து விட்டார். மனிதனுக்கு இந்த நான்காவது பசிதான் அதிகமாக இருக்கிறது" என்று சொன்னாள்.

"அதற்கு ஏதாவது கல்லூரியில் போய்ச் சேர்ந்து விடலாமே. இப்பொழுதுதான் மாலைக் கல்லூரி நடத்து கிறார்களே."

"சரிதான், அது கல்விப் பசியைத் தீர்க்க; அறிவுப் பசிக்கு ஆகாது."

அவள் ஒரு நாவல் பாத்திரமாகக் காணப்பட்டாள். சாதாரண மனுஷியாகக் காணப்படவில்லை. அவள் சொல்லுகிறாள் "மனிதர்களுக்குப் பேசுவதில்தான் சுவை இருக்கிறது. அது சமமான அறிவும் போக்கும் உடையவர்களோடு பேசுவதில்தான் இன்பம் இருக்கிறது. அதற்குத் தான் 'ரசனை' என்று பெயர். ரசனை இல்லாத மனிதரை மணந்து கொண்டேன். அவர் டாக்டர்" என்று சொன்னாள்.

கிடைக்க முடியாத ஒருவர் அவளுக்குக் கணவனாகக் கிடைத்ததைக் கண்டு நான் பெருவியப்பு அடைந்தேன். "டாக்டரா" என்று மறுபடியும் கேட்டேன்.

"ஆம், ஏன் அதில் என்ன ஆச்சரியம்?"

"கலியாணச் சந்தையில் அவர்களுக்குக் கிராக்கியாயிற்றே."

தவறான கணிப்பு; நோயாளிக்குத்தான் டாக்டர்; வேண்டும். அவர்கள் எல்லாம் மன நோயாளிகள். சமூகத்தில் சில தவறான நம்பிக்கைகள் கவுரவங்கள். இவற்றைதான் மன நோய் என்று சொல்லுகிறேன். டாக்டரை மணந்து கொண்டால்தான் தங்களுக்குக் கவுரவம், மதிப்பு, வாழ்வு என்று தவறாகக் கணக்கிடுகிறார்கள். அவர்களைத் தான் நான் மன நோயாளி என்கிறேன்."

அவர் ஏன் அவளை மணக்க வேண்டும் என்ற கேள்வி என்னுள் எழாமல் இல்லை. அதற்குள் என் நண்பன் 'வானம்பாடி' வந்தான். அவன் தன் பெயரை வானம்பாடி என்று வைத்துக் கொண்டான். எந்த விதகட்டும் இல்லாமல் அவன் பறக்க விரும்பினான். சுதந்திரமாக வாழ முடியும் என்று நினைத்து வந்தான். அவன் சிரிக்கும் போது மிக அழகாக இருந்தது. கன்னத்தில் குழி விழுந்தது. பொதுவாகப் பெண்களுக்குத்தான் இந்தக்

கன்னக்குழிவு அழகு என்று சொல்லுவார்கள். அது அவனுக்கும் அழகாகத்தான் இருந்தது.

"இவர் யார்?" என்று கேட்டாள்.

"நம் வட்டம் தான்" என்று கூறினேன்.

நாங்கள் ஒரு இலக்கிய வட்டம் ஒன்று துவக்கி இருந்தோம். அதில் வானம்பாடி பெரும்பங்கு எற்றான். அந்த வட்டம்தான் சரசுவதியை அங்கு அழைத்தது. அவள் சொன்னாளே அந்த அறிவுப் பசி, அதுதான் அவளை இந்த இடத்திற்கு இழுத்து வந்தது.

எங்கள் வட்டம் மிகச்சிறிய வட்டம்தான். இலக்கிய விமரிசனம் செய்வதில் நாங்கள் ஒன்று பட்டோம். அவ்வப் பொழுது நாங்கள் கூடி விவாதிப்போம். அதில் எங்களுக்கு ஒரு தனி இன்பம் இருந்தது, ஏன் வளர்ச்சியும் ஏற்பட்டது. அவன் புதுக்கவிதைப் பயித்தியம்.

"நீங்கள் புதுக் கவிதையைப் பற்றி என்ன சொல்லு கிறீர்கள்?" என்று என்னைக் கேட்டாள்.

"புது மாப்பிள்ளையைப் பற்றி நீ என்ன நினைக் கிறாய்?" என்று கேட்டேன்.

"அவர் மிடுக்குத் தனி அழகு" என்றாள்.

"எதுவுமே புதுமை என்றால் அழகுதானே" என் றேன்.

"இந்தப் புதுக் கவிதையில் ஏழைகளின் கண்ணீரைப் பற்றிப் பிரமாதப்படுத்துகிறீர்களே, அது எனக்குப் பிடிக்கவில்லை" என்றேன்.

"இந்தச் சமுதாயத்தின் நோய் அது. அதைத்தானே கவிஞன் தொட முடியும்" என்றான் அவன்.

"தொட்டால் என்ன செய்ய முடியும், நம் உணர்வு களை எழுப்பிவிடுவதால் அவர்களுக்கு வாழ்க்கை அளித்து விட முடியுமா?" என்று நான் மேலும் கேட்டேன்.

''இது முதற்படி'' என்றான் அவன்.

அதற்குள் உள்ளே இருந்து என் மனைவி சூடாகக் கொண்டு வந்து வைத்த காப்பி ஆறிக் கிடந்தது. அவள் பார்வை சரசுவதியின் மேல் விழுந்தது. நான் ஒரு பெண்ணோடு பேசுவதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்பதை அவள் மறுபடியும் எங்கள் மீது கவனம் செலுத்தாததிலிருந்து தெரிந்து கொண்டேன். அவளைக் கூப்பிடவும் விரும்பவில்லை. அவள் வாழ்க்கையில் முழு அர்த்தம் இருப்பதை என்னால் உணர முடிந்தது. அவள் எல்லை நாற்புறத்துச் சுவர்கள். அவள் ஆட்சி அந்த வீட்டு அறைகள்; அவற்றைத் துப்புரவு செய்வது; வீட்டை அழகாக வைத்துக் கொள்வது; பெருக்குவது; கூட்டுவது; கழிப்பது. இந்தக் கணக்கில் அவள் வாழ்க்கை சென்று கொண்டிருந்தது. அவளுக்கு என்னைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் கிடையாது.

அவள் தாய் வீட்டில் அவள் அண்ணன்மார் சீட்டு ஆடுவதைப் பார்த்திருக்கிறாள். சில சமயம் குடியும் அங்குக் குடித்தனம் செய்வதைப் பார்த்திருக்கிறாள். அதை அவள் தவறாகவே கருதியது இல்லை.

''சீட்டு ஆடுவதிலே என்ன தவறு இருக்கிறது?'' என்று கேட்டு இருக்கிறாள்.

''அதில் நல்லதும் இல்லை; கெட்டதும் இல்லை'' என்று நான் சொன்னேன்.

''பொழுதுபோக்கு. உங்களைப் போல் இலக்கிய விமரிசனங்களைச் செய்து கொண்டு மண்டையைக் குழப்பிக் கொள்ளத் தேவை இல்லை'' என்றாள்.

நான் சொன்னேன். ''அது என் தொழில். பத்திரிகை ஆசிரியர் பதவியை எப்பொழுது ஏற்றுக் கொண்டேனோ அப்பொழுதே இந்த விமரிசனம் என்னை விடாது'' என்று சொன்னேன்.

நான் ஆரம்பத்திலேயே உங்களுக்குச் சொல்லி இருக்க வேண்டும். நான் ஒரு இலக்கியப் பத்திரிகையில் ஆசிரியராகப் பணி செய்கிறேன் என்பதைச் சொல்ல மறந்துவிட்டேன். அங்கே வருவது எல்லாம் சாதாரண கதைகள். அதாவது அவர்கள் சொந்த வாழ்க்கையில் ரசித்தவற்றை ஒரு வடிவம் கொடுத்துக் கதை என்று அனுப்பிவிடுவார்கள். அது சரி. கதை என்பது வேறு என்ன அவ்வளவுதானே. ஆனால் என்னமோ அதைப் பார்த்துப் பார்த்துச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. நான் எப்பொழுதோ ஒரு தொடர்கதை எழுதி அனுப்பி இருந்தேன். அதில் என் சொந்த அனுபவங்களை வைத்துக் கதை எழுதியிருந்தேன். கலியாணம் ஆவதற்கு முன் ஏற்பட்ட அனுபவங்கள். அதற்கப்புறம் எந்த அனுபவம் கிடைக்கிறது. அவள் எனக்குக் கிடைக்கவில்லை. அதை நினைத்து நினைத்தே அந்தக் கதையை எழுதி முடித்தேன்.

''ஏக்கம்'' என்பதுதான் அந்தக் கதையின் தலைப்பு. அதற்குப் பரிசு கூடக் கொடுத்தார்கள். பரிசு பெற்றுவிட்டதாலேயே நான் ஓர் எழுத்தாளன் என்று எப்படிச் சொல்ல முடியும். ஏதோ ஒரு முறை ஒரு கதை எழுதிவிடலாம். தொடர்ந்து எழுதினால்தானே எழுத்தாளன் என்று கூற முடியும்.

அந்தக் கதைக்கே அந்தப்பத்திரிகை ஆசிரியர் பாராட்டிவிட்டார். ''உங்களைப் போன்ற இளம் எழுத் தாளர்கள் நிறைய எழுத வேண்டும்'' என்று தட்டிக் கொடுத் தார். இப்பொழுது நினைக்கிறேன். அவர் பத்திரிகை. அது ஆரம்பநிலை. அதில் நிலைத்துப் பணி செய்ய ஆள்யாரும் இல்லை. அதற்கு ஒரு ஆள் தேவைப்பட்டது. நான் எழுதிய அந்தக் கதை எப்படியோ கொஞ்சம் சிறப்பாக அமைந்து விட்டது அது உண்மைதானே. எழுத்தாளனுக்கு வேண்டிய அமிசம் என்னிடம் ஒன்றும் இல்லை. பேனா இருந்தது; அதில் மசியும் இருந்தது. கருத்துகள் பஞ்சம். நான் என்ன

செய்ய முடியும். தொடர்ந்து எழுத முடியாது என்பதை உணர்ந்துதான் பேசாமல் பத்திரிகை ஆசிரியனாக மாறி விட்டேன்.

பத்திரிகை ஆசிரியன் ஆவது மிகவும் எளியது என்பதை உணர்ந்து கொண்டேன். பத்திரிகை ஆசிரியர் வேறு, எழுத்தாளன் வேறு என்பதை என்னால் அறிய முடிந்தது. ஒரு கதை எழுதி விட்டதாலேயே நான் ஒரு எழுத்தாளன் எப்படி ஆக முடியும். அதற்கப்புறம் பத்திரிகைத் தொழிலை ஏற்றுக்கொண்ட பிறகு இருக்கிற கற்பனையும் என்னைவிட்டு ஓடிவிட்டது. நிறைய கதை கள் வரும். அவற்றைப் படித்துப் படித்து என் மூளை மழுங்கிவிட்டது என்றுதான் கூறமுடியும்.

அந்த ஒரு கதைக்கு வேண்டிய அனுபவம் அவ்வளவு தான் என் வாழ்க்கையில் தீட்ட முடிந்தது. அதற்குமேல்? என் வாழ்க்கைப் பிரச்சனை சூழ்ந்து கொண் டது. தன் வாழ்க்கைப் பிரச்சனை மட்டும் எழுத்தாளனுக்குக் கதையாக முடியாது என்பதை உணர்ந்தேன். அது சில சமயம் ஆற்றலைத் தரலாம். அதுவே கதையாக அமை யாது. பிறர் பிரச்சனைகளை எடுத்தாளும் போதுதான் எழுத்தாளன் பிரகாசிக்கிறான். அந்த அனுபவம் எனக்கு ஏற்படவில்லை.

அது அவள் மீது தவறு. நான் பத்திரிகை ஆசிரியன் என்பதாலேயே நான் ஒரு பிரபலஸ்தன் என்று கருதி விட்டாள். அதாவது அவள் எழுதும் கதைகள் எப்படி யாவது வெளி வர வேண்டும் என்ற ஆசை; அதற்காகத் தான் அவள் இந்த இலக்கிய வட்டத்தை ஆரம்பித்தாள்.

அவளுக்கு வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்பட வில்லை. அந்த டாக்டர் அவளுக்குப் பிடிக்கவில்லை. நான் எப்படி அவசரப்பட்டு இந்தப் பத்திரிகைத் தொழிலைக் கட்டிக் கொண்டேனோ அதே போல அவளும் அவரைத் தன் ஹீரோவாக ஏற்றுக்கொண்டாள். அவளுக்கு அவர்

ரசனையாகப் படவில்லை. அவர் நோயைப் பற்றித் தான் அதிகமாகப் பேசினார். ''ஒரு கேசு வந்தது. அது ரொம்பவும் 'காம்பிளிகேஷன்'. ஆனால் பீசு பிரமாதம் என்றார்''. அவள் கேட்டுக் கேட்டுச் சலித்து விட்டாள்.

அவள் ஒரு நாள் மனம் விட்டுச் சொன்னாள். ''நான் உங்களைச் சந்தித்திருந்தால் நீங்கள் தான் என் ""Choice" என்று.

இப்பொழுது எனக்குத் தெரிந்தது, என் மனைவி. அதாவது என்னை எந்தக் கற்பனைக்கும் செல்லாதபடி தடுக்கும் 'ரியலிசம்' ஏன் இந்த வட்டத்தை விரும்பவில்லை என்பது தெரிந்தது. அவளுக்காக நான் எப்படி இந்த வட்டத்தை விடமுடியும் அவள் விருப்பத்துக்கு நான் அடிபணிந்து விட்டால் அப்புறம் நான் எப்படி ஒரு பத்திரிகை ஆசிரியர் பதவியிலிருந்து விடுபட முடியும். நான் எழுத்தாளனாக ஆக வேண்டும் என்ற ஆசை என்னை உந்தியது.

எங்கள் பத்திரிகை உலகத்திலே எழுத்தாளனுக்குத் தனி மதிப்புத் தருகிறோம். அவர்கள் படத்தைப் பிரசுரிக் கிறோம். எங்கள் படத்தை நாங்கள் பிரசுரித்துக் கொள்ள முடிவதில்லை. இந்தச் சின்ன ஆசைக்காவது ஒரு எழுத்தாள னாக ஆக வேண்டும் என்ற ஆசை இருந்தது. எப்படி எழுத்தாளன் ஆவது? எதை எழுதுவது. ஒரு முறைதான் காதலைப்பற்றி எழுத முடியும். அதையே எப்படித் திருப்பித் திருப்பி எழுத முடியும். அதை ஒரு முறை எழுதி அதற்குப் பரிசும் பெற்றுவிட்டேன். வேறு எந்தப் பொருளை எடுத்து எழுதுவது. புதுக் கவிஞன் எடுத்துச் சொன்ன ''ஏழையின் கண்ணீர்'' அதை எடுக்க விரும்ப வில்லை. அரசியல்வாதியும் அதைப்பற்றித்தான் பேசு கிறான். அமைச்சர்களும் அவர்களுக்காகத்தான் கண்ணீர் வடிக்கிறார்கள். நல்ல காலம் திரைப்படம் அந்த அளவுக்குப்

போகவில்லை. அதைக் காட்டினால் யார் பார்ப்பார்கள். 'காஸ்ட்யூம்' இருக்காது. எந்த நடிகனையும் முழு ஏழையாக மேக்கப் செய்ய முடியாது. வெயிட்டும் கொழு கொழுப்பும் மிக்கவர்களாக இருக்கிறவர்களை எப்படி அந்தப் பாத்திரங் களாகக் காட்ட முடியும்? துன்பத்தை மறக்க நினைக்கும் திரைப்பட ரசிகர்களுக்கு 'வசந்த மாளிகை'யைக் காட்டி னால் ரசிப்பார்கள். கோடை வெயிலைக் காட்டினால் எப்படிக் காண்பார்கள். 'குளு குளு' தியேட்டர்களில் அந்தப் படம் ஓடாது. இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டே நான் எழுத்தாளனாக உருப்பெறாமல் போய் விட்டேன். பிரபல எழுத்தாளர்களைப் போல மறுபடியும் நான் காந்தீயத்தை வைத்து எழுத முடியாது. அப்படி எழுதுவதால் என்ன பயன்? அரைத்த மாவையே அரைப்ப தாகத் தானே முடியும். இல்லை வள்ளுவர் திருக்குறளுக்கு வடிவு கொடுத்து எழுதலாம் என்றால் அதுவும் பலர் எழுதி முடித்து விட்டார்கள். அதனால்தான் இனி எழுதுவதில்லை; நம்மால் முடியாது என்று விட்டுவிட்டேன். எங்கள் பத்திரிகை மிகவும் சிறிய நிறுவனம்தான். என்னை வெளி நாடுகளுக்கு அனுப்பிப் பயண அனுபவங்களை எழுதச் செய்யும் அளவுக்கு எங்களிடம் வசதியும் இல்லை. என்னாலும் அது முடியாது. ஒரு வட்டத்துக்குள் பழகி விட்ட எனக்கு எப்படி வெளியே போக முடியும்?.

என் மனைவியின் அண்ணன் வீட்டில் ஒரு சீட்டுக் கச்சேரி நடந்து கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன். அதில் இந்த உலகத்தை அடியோடு மறந்து அவர்கள் வெறும் சீட்டுகளில் 'மணிக்' கணக்காகச் செலவு செய் வதைப் பார்த்திருக்கிறேன். அதுதான் அவர்கள் பொழுது போக்கு.

இந்தக் காட்சிதான் என் நினைவில் நிற்கத் தொடங்கியது. எங்கள் பத்திரிகைகளுக்கு வந்த கதைகள் இதைவிட எந்த வகையில் மாற்றம் பெற்றிருக்கின்றன

என்று என்னால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. சீட்டுக் கட்டுகள் குலுக்கிக் குலுக்கிப் போட்ட சீட்டுகள் மாறி மாறி வந்தன. 'ஆகா! ஊகா! சபாஷ்! வெற்றி' இந்தக் குரல்தான் கேட்டிருக்கிறேன். இப்படித்தான் நான் படித்த கதைகள் இருந்தன. சே! இதுதான் இலக்கியம் என்றால் இதைவிட அந்தச் சீட்டுக் கட்டு ஆட்டமே மேல் என்று என்னை அறியாமல் எண்ணத் தொடங்கினேன்.

அந்த ஆறிய காப்பியைக் குடித்தோம். சரசுவதி அவள் சிறுகதைப் பயித்தியம். அவள் ஒரு சிறுகதையைப் படித்தாள். நான் எங்கள் பத்திரிகைகளில் ஒதுக்கிவிட்ட கதைகளை எங்கள் வீட்டில் குப்பையாக வைத்து இருந்தேன். அவள் அந்தக் கதைகளைப் படிப்பதில் தனி ஆர்வம் காட்டினாள். "நீங்கள் தள்ளிவிடுகிற கதைகள்தான் எனக்குப் பிடிக்கும்" என்றாள்.

"ஏன்?"

"ரசனை"

"எப்படி?"

"விதவையின் பார்வை"

"புதுமை?"

"இல்லை"

"புனர் வாழ்வு?"

"ஆம் அதில்தான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அத்தகைய கதைகளைத்தான் எனக்குப் படிக்கப் பிடிக்கும்" என்றாள். இந்தச் சிறு சிறு வாக்கியங்களுக்குப் பின்னால் அவள் நீண்ட வாக்கியம் அர்த்த புஷ்டியாக விளங்கியது.

அவள் சொல்லுகிறாள். விதவைக்குத்தான் பிரச்சனைகள் புரியும். 'புனர் வாழ்வு' என்பது அவளுக்குத்தான் தெரியும் என்றாள்.

"அப்படி என்றால் உனக்கு".

"எனக்கு வாழ்க்கை வெறுக்கவில்லை. அந்தப் புனர் வாழ்விலும் பழைய லட்சியங்களைப் புகுத்துவது எனக்குப் பிடிக்கவில்லை."

"அப்படி என்றால்?"

"மறுபடியும் அதே கொஞ்சல். மறுபடியும் அதே பாட்டு. அதுதான் பிடிக்கவில்லை. ஒரு படி உயர விரும்புகிறேன். அன்பைத் தவிர வேறு எதையும் என் கணவரிடம் எதிர் பார்க்கவில்லை. முதல்நாள் கொஞ்சல். காதல் எல்லாம் பழங்காலத்து இலக்கியத்தின் சாயல். அது மீண்டும் எனக்குப் பிடிக்கவில்லை. டாக்டர் அவர் பார்வை வேறு விதமாக இருக்கும் என்று நினைத்தேன். பரிவும் பாசமும் தலையோங்கும் என்று நினைத்தேன்" என்றாள்.

"உங்கள் வாழ்க்கையையே ஒரு ரசனைப் பொரு ளாக மாற்றினால்".

"அதுதான் என் போக்கு. ரசனை இல்லாத வாழ்வு உப்பு இல்லாத ரசம் போல்" என்றாள்.

"உம்; 'ரசமும் ரசனையும்.' இந்தக் கதையைப் பிரசுரித்து இருக்க வேண்டும்" என்று ஒரு கதையைக் காட்டினேன்.

அந்தப் பிரசுரிக்காத கதையை அவள் எடுத்துக் கொண்டாள். அதைப் படித்துத் தருவதாகச் சொன்னாள்.

☆ ☆ ☆

# [2]

‘இலக்கிய வட்டம்’ எங்கள் வீட்டிலேயே கூடுவது. சில சமயம் அவள் வீட்டுக்கும் செல்வது உண்டு. அவள் கணவர் டாக்டர். ஆதலால் என் மனைவியைப் போல அவரிடம் பொறாமை உணர்வு எழுவது இல்லை. ‘ஹல்லோ’’ என்று என்னை அன்பாகவே அழைத்தார். ஒரு டாக்டருக்கும் பண்பாட்டுச் சிகரமாக விளங்கிய என் மனைவிக்கும் வித்தியாசத்தைக் காண முடிந்தது. அவரும் எங்களோடு இருந்து ‘டீ’ குடிப்பார்; நல்ல தோற்றம்; கையில் சிகரெட்டு ஊதுவத்தி போல எரிந்து கொண் டிருக்கும்.

‘‘என் wife ஒரு பைத்தியம்’’ என்று சிரித்துக் கொண்டே பேசுவார்.

""No அவள் ஒரு Mental patient" என்றார். அதாவது அவர் பார்வையில் அவள் ஒரு மனநோயாளி என்பது அவர் மதிப்பீடு. "She must be carefully treated" என்று சிரித்துக் கொண்டே பேசுவார்.

‘‘வைத்தியர்கள் மனநிலை மாற வேண்டும்’’ என்று அவள் சிரிக்காமல் சொல்லுவாள்.

அப்படி என்றால்

‘‘அவர் பேச்சில் "Fees" என்பது மறையும் பொழுது தான் அவரை நான் மனிதராக மதிப்பிட முடியும்’’ என்றாள்.

‘‘எப்படி?’’ என்றேன்.

‘‘நோயைப்பற்றிப் பேசட்டும், Feesஐப் பற்றிப் பேசக் கூடாது. வக்கீல் வழக்கைப் பற்றிப் பேசட்டும் கிளைண்டைப்’ பற்றிப் பேசக் கூடாது’’ என்றாள்.

அவள் அறிவுப் பசியின் அடிப்படை எனக்கு விளங்கியது. அவள் வாழ்க்கையில் ஏதோ ஒரு லட்சியவெறி ஒளி வீசுவதைக் காண முடிந்தது.

"நீங்கள் இருக்கிறீர்கள். துணிந்து சொல்கிறேன். He has insulted me a number of times" எனறாள் அவரிடம்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. மற்றவர்கள் முன்னால் என் மனைவி ஒரு நாள் கூடக் கண்டித்துப் பேசியது இல்லை. அவர்கள் எல்லாம் போன பிறகுதான் அவள் வீட்டைப் பெருக்க ஆரம்பிப்பாள். இங்கே ஒரு பெரிய மாறுபாட்டைக் கண்டேன்.

"நான் நேரே பேசித் திருத்த விரும்பவில்லை. இரண்டு பேரும் முரண்பட்ட கருத்தைப் பேசினால், நிச்சயமாகச் சண்டை வரும். அதற்காகத்தான் உங்களை முன்னால் வைத்துப் பேசுகிறேன்" என்றாள்.

டாக்டரோ தான் அவள் மனத்தைப் புண்படுத்தியதாக நினைத்துப் பார்த்தது இல்லை. அது அவருக்கு அதிர்ச்சியாக இருந்தது. புதிய சிகரெட்டை வாயில் கொண்டு நெருப்பைப் பற்ற வைத்தார். அதாவது சூடுபிடிக்கும் பேச்சை அவர் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

"பெண்ணுக்கும் Self Respect இருக்கிறது. அதை அவர் எண்ணிப் பார்ப்பதே இல்லை" என்றாள்.

சுய மரியாதை இயக்கத்தைப் பற்றி அவள் பேசுவது போல எனக்குத் தோன்றியது.

நான் அவள் எடுத்துச் சென்ற பிரசுரிக்காத கதையை விமரிசனம் செய்யத்தான் போகிறாள் என்று எதிர் பார்த்தேன்.

"விதவைத்தனம் என்பது ஒரு பாதிப்பே தவிர அது அவளிடத்தில் ஏற்படுகின்ற பருவ மாறுதல் அல்ல" என்று கூறினாள்.

''ஒரு அதிர்ச்சி. அவ்வளவுதான்'' என்று முடித்தாள்.

"Who wants her explanation?" அவள் விளக்கம் யாருக்கு வேண்டும் என்று அவர் கேட்டார்.

''இதை உணராதவர்க்கு எடுத்துச் சொல்ல வேண்டும். This is simply a set back; அதாவது வாழ்வில் ஏற்படுகின்ற ஓர் இழப்பு; அவ்வளவுதான்''.

''யார் இல்லை என்று சொன்னது?''

''அது மறுபடியும் அடைய முடியும். அது அடைந்த பிறகு அவள் விதவை அல்ல''.

"Yes I agree (அதை ஒப்புக் கொள்கிறேன்)''

''அதைத்தான் சொல்ல வந்தேன். எனக்கு மறுவாழ்வு அளித்ததாக அடிக்கடிச் சொல்லிக் காட்டுகிறீர்களே அதைத்தான் வெறுக்கிறேன்''.

எனக்கு உண்மைப் பெண்ணைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படவில்லை. அவள் இரத்த ஓட்டம் நிறைந்த மனிதப் பிறவியாகத் தெரியவில்லை. எழுத் தோட்டம் நிறைந்த காவியப் பாவையாகக் காட்சி அளித்தாள். எழுத்தாளன் படைப்பில்தான் இந்த மாதிரிப் பெண்ணைப் படைக்க முடியும் என்பதை உணர முடிந்தது.

"Oh! I am sorry" என்று கொழு கொழுத்த உச்சரிப்பில் அச்சொற்கள் வெளியாயின "I have patients; எனக்கு நோயாளிகள் காத்துக்கிடக்கிறார்கள்'' என்று சொல்லி வெளியேறினார்.

"He has no patience; அவருக்குப் பொறுமையே இருப்பது இல்லை'' என்று என்னிடம் அவரைப் பற்றி ஒரு சொல்லோவியத்தைத் தந்தாள்.

அவள் எதை நினைத்துக் கொண்டு சொன்னாள் என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

"அடிக்கடி அவருக்குக் கோபம் வருகிறது. irritation (எரிச்சல்) அதிகம். அதாவது முள்ளில் சேலையைப் போட்டால் எடுக்க முடியாமல் அவஸ்தைப்படுவார்களே அதுபோல் அவருக்கும் எனக்கும் பிணைப்பு ஏற்பட்டது. கவர்ச்சி அவர் கண்ணை மயக்கிவிட்டது. சின்னக் குழந்தைக்குப் பொம்மையைக் கண்டால் அது வேண்டும் என்று அடம் பிடிக்கும். பிறகு அதைக் கொஞ்ச நேரத்துக் கெல்லாம் உடைத்தால் தான் திருப்தி" என்றாள்.

வாழ்க்கைப் பிரச்சனையைவிட இலக்கியப் பிரச் சனைதான் எங்களுக்குச் சுவை தந்தது. அந்தச் சிறு கதையைப் படித்தாள். அழகான வாக்கியங்கள். கருத்துக்கு அதில் சொல் இல்லை; உணர்வுக்குத்தான் சொற்கள் இருந்தன. இலக்கியப் படைப்பின் இரகசியம் அப்பொழுது தான் புலப்பட்டது. கருத்துகளை வைத்து இலக்கியம் எழுதிவிட்டதாகக் கூறுபவர் சிலர் உள்ளனர். அதையே பாராட்டிப் பேசும் பைத்தியங்களையும் பார்த்திருக்கிறேன். கருத்து வேறு; சிந்தனை வேறு. கருத்துகள் சொந்தம் அல்ல; இரவல், சிந்தனை சொந்தம், கதைகளில் சிந்தனை இடம் பெறலாம்; கருத்துகள் இடம் பெறுவதால் அதற்கு மதிப்பு இல்லை. அவள் படித்த அந்தக் கதையில் உணர்வு ஓட்டம் இருந்தது. சிந்தனை ஊடுருவிச் சென்றது.

இதை ஏன் ஒதுக்கிவிட்டோம் என்று எண்ணிப் பார்த் தேன். நாங்கள் பத்திரிகை வாசகர்களை மனத்தில் வைத்து எதையும் எடைபோட வேண்டியுள்ளது. இன்றைய வாசகர் கள் யார்? சாதாரண வாசகர்கள். அதாவது பழகிப் போன சம்பிரதாயத்தில் ஊறிப்போன ஒற்றையடிப் பாதைகள்; அல்லது மிக வேகமாகப் பறக்கின்ற விமானப் பயணிகள், அதாவது பழகிய கருத்துகள் இருக்க வேண்டும். இல்லா விட்டால், நம்பமுடியாத கற்பனைகளைக் கொண்டு இயங்க வேண்டும். நடைமுறை வாழ்க்கையை எழுதி வாழ்க்கையை உணரச் செய்யும் முயற்சியை எந்த வாசகன்

விரும்புகிறான்? மிக உயர்ந்த உணர்வுகளை எழுப்ப வேண்டும் அல்லது நரம்புகளைத் தட்டி எழுத்தாளன் வீணை வாசிக்க வேண்டும். அவள் அந்தக் கதையைப் படித்தாள்.

'அவன் ஒரு குருடன்' கதை சோகத்திலே தொடங்கியது. பிறகு மேலும் தொடர்ந்து படித்தாள்.

என் வீட்டு நினைவு வந்தது. "நீ எங்கே போனாய்" என்று கேட்பாள். "ஏன் இவ்வளவு நேரம்" என்று கட்டாயம் கேட்பாள். நாகரிகமாக "நான் கிளப்புக்குப் போனேன்; நண்பர்களோடு அரட்டை அடித்துக் கொண் டிருந்தேன்" என்று எப்படிச் சொல்ல முடியும். அந்த மனோ நிலை எனக்கு இல்லை என்பதை அவள் அறிந்தது தானே. நான் சரசுவதியின் கோயிலில் இலக்கிய விமர்சனம் செய்து கொண்டிருந்தேன் என்றால், அந்த வழிபாட்டை அவள் எப்படி ஏற்றுக் கொள்வாள். கோயிலுக்கு நான் போகமாட்டேன் என்பது அவளுக்குத் தெரியும். அவளுக் காகவே நான் துணையாகப் போவது உண்டு. அதற்குமேல் எனக்கு அங்கே கவர்ச்சி இல்லை என்பதை அவள் அறிந்திருக்கிறாள்.

"உனக்கு என்ன தெரியும்; படித்து இருக்கிறாயே தவிர ஞானம் ஏது?" என்று கேட்டிருக்கிறாள் என் மனைவி ஞானம், அவளுக்கு அந்தப் பெயர் எப்படி வைத்தார்களோ தெரியாது. சுதந்திரமாக வாழ முடியாத வாழ்க்கை உடை யவர்களுக்குச் 'சுதந்திரன்' என்ற பெயர் வைத்தது போல அவளுக்கு அந்தப் பெயர் வைத்தார்கள்.

'சுதந்திரன்' அது மற்றொரு கதை. அவன் பிறக்கும் போதே தந்தையே இழக்கவில்லை. அவனோடு முன் பிறந்தவர்கள் இரண்டு தமக்கைமார்கள். அந்தக் குடும்பம் நிம்மதியாக இருந்தது. அவன் வளர்கிற வரைக்கும் குடும்பச் சொத்து முழுவதும் கரையாமல் இருந்தது. படிப்பு முடி

வதற்கும் சொத்து முடிவதற்கும் சரியாக இருந்தது. இனிக் கடன் வாங்கும் படலத்தில் அவன் குடும்பக் கதை இடம் பெற்றது.

பாவம் அந்தச் சிறுவன் என்ன செய்ய முடியும்? இரண்டு தமக்கையர், ஒரு தாய்; மூன்று பெண்கள், இந்த உலகத்தில் வயிற்றைப் பிறர்க்குக் காட்டாமல் கைகளால் உழைத்துச் சாப்பிட வேண்டும். 'சுவர் இல்லாத சித்திரங் கள்;' அதுதான் மானம் மிக்க வாழ்க்கை. அந்த வாழ்க்கை யைப் படைத்துக் கொடுக்க உதயமாகும் சிற்பியாக அவன் இருந்தான். பிறக்கும் போதே 'அரசுமுடி' அவனுக்குக் காத்துக் கிடந்தது. பட்டம் பெற முயன்றான். அதுவும் முடியாமல் போய்விட்டது. அந்தக் குடும்பத்தின் கனவு, கற்பனை, நம்பிக்கை எல்லாம் கரைந்துவிட்டன. சமுதாயம் அவனுக்கு ஒரு கேள்விக் குறியாக அமைந்துவிட்டது. அது பதில் சொல்லாமல் வெறும் தாளை மடித்துக் கொடுத்தது. 'வெறுந்தாள்' என்ற தலைப்பு அக்கதைக்குப் பொருத்தமாக இருந்தது. இன்னும் அதில் பல விவரங்கள் இருந்தன. பாத்திர வருணனைகள் இருந்தன. அதனால் அது ஒரு கதை என்ற வடிவம் தரப்பட்டிருந்தது.

'வெறும் தாள்' என்ற தலைப்பு உடைய அந்தக் கதை பிரசுரிக்க முடியாத கதையாகத் தள்ளப்பட்டது.

"அதை வாசகர்கள் ரசிக்கமாட்டார்கள்" என்பது அந்த மானேஜரின் முடிவு. அதில் எந்தவிதக் காதலும் இல்லா விட்டால் யார் அதைப் படிக்கப் போகிறார்கள். தமிழ்க் கதை என்றால் அதில் காதல் முக்கியமான இடம் பெற வேண்டும் என்பது மானேஜரின் உத்தரவு.

"அவன் ஏன் காசு கொடுத்துப் பத்திரிகை வாங்கு கிறான். வாழ்க்கையில் பெறமுடியாத காதலை எழுத்தில் பெறத்தான்" என்பார்.

வாசகனைத் திருப்திப்படுத்தும் அமிசம் இருக்க வேண்டும் என்பது மேல் இடத்து உத்தரவு.

மற்றொரு கதை 'ஆசை, அன்பு, பாசம்' என்ற தலைப்பிடப்பட்டிருந்தது. அதாவது இது ஒன்று ஒன்று இல்லாமல் நிலைக்குமா என்ற கருத்தில் அது எழுதப் பட்டிருந்தது. அதை அவள் படித்துக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் 'வெறும்தாள்' என் நினைவை விட்டு அகலவில்லை. இந்தச் சமுதாயம் தேர்வில் தோற்றுவிட்டது; வெறும் தாளைத்தான் காட்டுகிறது. தேர்தல்கள் வரு கின்றன; மாறுகின்றன. ஆள்களை மாற்றுகிறார்கள். ஆனால் பிரச்சனைகளைத் தீர்க்க முடியாத நிலை. அந்த இளைஞன் என்ன செய்ய முடியும்? அவன் கல்லூரியிலும் படித்தான்; படித்துக் கொண்ட நிலையில் அவன் கேட்ட கேள்விதான். எதிர்காலத்தில் தனக்கு நம்பிக்கை இல்லையே என்று எண்ணி எண்ணி அதே கவலையாய் அவன் மனம் மெலிந்துவிட்டது. இரவில் தூக்கமே வருவது இல்லையாம். அதற்கு மேல் கதை தொடர்கிறது. ஒரே பயம் வருகிறது. அலறி எழுகிறான். "வேலை" நாளைக்கு என்ன செய்வது என்ற கேள்வியைக் கேட்கிறான்.

படிப்பிலே சிந்தனை செல்லவில்லை. "காவிரி தென் பெண்ணை பாலாறு; வளம் மிகுந்த நாடு" என்று தமிழகத்தைப்பற்றிக் கவிதைகளைப் படித்தான். ஆனால் ஏன் தன் வாழ்வில் அந்த வளத்தைக் காணமுடிவில்லை என்று எண்ணிப் பார்த்து மயங்கிவிட்டான். அவனுக்குப் படிப்பே ஏறவில்லை.

தேர்வு நாள் வந்தது. அவன் இதுவரை முதல் மார்க்குத்தான் வாங்கி வந்தான். திடீர் என்று அவன் குடும்பத்தில் தந்தை இறந்தார். அவன் மனம் இடியால் தாக்குண்டது. அவன் இதுவரை எல்லோரும் சந்தோஷமாக இருப்பதைப் போலக் கனவு கண்டு கொண்டிருந்தான். தன் வாழ்வுதான் இருண்டு கிடக்கிறது என்று நினைத்தான். முடிவில் அவன் தேர்வில் வெறுந்தாளைத் தான் மடித்துக் கொடுத்தான். சமூகம் வழி காட்ட மறுத்துவிட்டது நீதி

நூல்கள் நிறையக் கற்றிருக்கிறான். "ஈன்றாள் பசி காண் பானாயினும் பழிவரும் செயலைச் செய்யாதே" என்று படித்திருக்கிறான். காந்தி அடிகளின் படம் அவன் தேர்வு எழுதும் அறையில் தொங்கவிடப்பட்டு இருந்தது. அவர் யாரையோ பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது.

இவ்வளவு துன்பம் வந்தபோதும் அவர் முகத்தில் மட்டும் ஏன் சிரிப்புத் தவழ்கிறது. 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற கூறிய வள்ளுவரைப் பார்த்து அவர் சிரிப்பது போல இருந்தது.

அதற்குமேல் அந்தக் கதை என்னைக் கவரவில்லை. வாழ்க்கையின் துன்பச் சித்திரம் ஒரு கதையாகப் பட வில்லை.

"இதில் என்ன கதை இருக்கிறது" என்று வானம்பாடி குறுக்கிட்டான். அவன் இதையே புதுக் கவிதையில் சொன் னான்.

"கண்ணீர் ஏன் உப்புக் கரிக்கிறது என்றால் வாழ்க்கை யில் இனிமை இல்லாததால் தான்" என்பான். இதுதான் புதுக் கவிதை என்பான்.

அவனைப் பார்த்தால் எனக்கு அதிகம் பிடிப்ப தில்லை. முதற் காரணம் அவன் வயதில் சிறியவன்; மற்றொன்று பொருத்தமில்லாத செய்திகளைச் சொல்லி அதைப் புதுக் கவிதை என்பான். விஷயம் இருக்காது. ஏதாவது குதர்க்கமாக எழுதி வைத்துவிட்டு அதைக் கவிதை என்பான்.

அங்கே என்ன பேசுவது என்று தெரியாமல் கொஞ்சம் நேரம் சும்மா இருந்தோம். டாக்டராக இருந்தால் சும்மா ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துப் புகை விடுவார்.

இந்த இலக்கிய விமரிசனங்கள் வெறும் நல்ல பழக்கங்களையே கற்றுக் கொடுத்துவிட்டன.

டாக்டர் இருக்கும் போது அவர் கேட்டார்.

"What do you find in literature? (இலக்கியத்தில் என்ன காண்கிறீர்) அது வெறும் ஏமாற்றம் தானே என்று கேட்டார். நீங்கள் உங்கள் நேரத்தை வீண் பிரச்சனைகளில் செலவு செய்கிறீர்கள். This is my opinion". (இது என் கருத்து) என்றார்.

என்னால் பதில் சொல்ல முடியவில்லை. அவர் போன பின்பு சிந்தித்துப் பார்த்தேன். அவள் அதற்குப் பதில் சொல்லத் தொடங்கினாள். ''அதுதான் அவருக்கும் எனக்கும் வேறுபாடு. வாழ்க்கையின் விமரிசனம் தான் இலக்கியம். நாம் வாழ்ந்து கொண்டே இருக்கிறோம். அதில் எது நல்லது எது கெட்டது என்பதைப் பற்றி ஆராய் கிறோம். நல்லது நினைக்க வேண்டும் என்று நினைக் கிறோம்; இதுதான் இலக்கியம்'' என்று சொன்னாள்.

வானம்பாடி குறுக்கிட்டான். ''இலக்கியம் அப்படி இருந்தால் பரவாயில்லை. அதை வெறும் வாழ்க்கைக் கண்ணாடியாக அமைக்கிறார்கள். உள்ளதை உள்ளபடி வருணிக்கிறார்கள். அழகிய சித்திரம்தான். சித்திரம் ஓவியம் ஆகும்; ஓவியம் சித்திரம் ஆகாது என்றன். ஓவியம் இலக்கியமாகாது. ஓவியம் வேறு; சித்திரம் வேறு'' என்றான்.

அதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. ''வாழ்க்கையை ஒரு சித்திரமாகக் காண முயல்வதுதான் இலக்கியம். சிதைந்து கிடக்கின்ற அழகுகளை ஒருங்கு சேர்த்துக் காண்பதுதான் இலக்கியம். ஒவ்வொன்றிலும் அழகு இருக்கிறது. சாவு ஒன்றில்தான் அழகு இல்லை. அதுகூட இயற்கை இந்த உலகத்தைத் தூய்மைப் படுத்துவதற்குச் செய்யும் முயற்சி. உலர்ந்த சருகுகள் கீழே விழாமல் எப்படி இருக்க முடியும். தீயது அழிய வேண்டும். அழுகல் ஒழிய வேண்டும். இது இயற்கையின் நியதி; சட்டம்; ஒழுங்கு. அதுதான் படைப்பு என்றேன்.

"தீமை ஒழிய வேண்டும். அதைவிட தீமைகள் தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றாள் சரஸ்வதி.

அந்த வீடு அழகான வீடு. சுற்றிலும் ஒரு அழகான தோட்டம் இருந்தது. பங்களா என்று சொல்ல முடியாது. இப்பொழுது எழுகின்ற type வீடுகளில் ஒன்றுதான். 'ஏ' டைப் வீடு என்று சொல்ல முடியாது. "சி" டைப் தான். இப்படித்தானே அங்கே வீடுகளைப் பகுத்துக் காண்கிறார் கள். இன்னும் 'டி' டைப் 'இ' டைப் வரையில் இருந்தது. 'எப்' typeல் இல்லை. 'F' type என்றால் fail என்று தானே அர்த்தம். அந்த அளவு அங்கே வீடுகள் எழவில்லை. அங்கே வாழ்பவர்கள் வீடு 'E' type வரை இருந்தது. தோல்வி என்பதைக் காணாத வீடுகள்தான் அங்கே இருந்தன.

வெறுந்தாள் கதைப் பாத்திரமாக வரும் சுதாவைப் போல் அவர்கள் வாழ்க்கை அமையவில்லை. அவன் வாழ்க்கை 'F' type எனப் பாகுபடுத்திக் காண முடிந்தது. அவன் படிப்பு வேறு; வாழ்க்கை வேறு என்பதை உணர்ந் திருக்க வேண்டும். இனிமேல் படிப்பை நம்பி மனிதன் வாழ முடியாது என்ற நிலைக்கு நாடு வந்துவிட்டது. படிப்பு ஒரு கண்ணா மூச்சு விளையாட்டு. அவ்வளவுதான். கண்களைக் கட்டிவிட்டு யாரையாவது பிடித்துக் கொள் என்று ஓடவிடுவதுதான் இன்றைய படிப்பு முறை. அதிருஷ்டம் தக்க ஒரு ஆளைத் தொடுவது. பெரும்பாலும் தகாத ஆளைத் தொடுவதுதான் அந்த விளையாட்டின் முடிவு என்று எண்ணிப் பார்த்தேன். இதை மனதில் எண்ணிக் கொண்டேன். அந்த உருவகத்தைப் பற்றி மட்டும் விமரி சனப் பொருளாக வைத்தேன்.

வானம்பாடி ஆகா பிரமாதம் என்று கூறினான்! வாழ்க்கை ஒரு கண்ணாமூச்சு விளையாட்டு என்ற பொருள் பற்றி ஒரு கவிதை எழுதித் தருவதாகச் சொன்னான். கவிஞன் கற்பனை எப்படிச் செல்கிறது என்று வியந்தேன்.

'தாஜ்மகாலும் ரொட்டித் துண்டும்' என்ற கவிதை நூலைப் படித்தேன். அந்த உருவகம் எனக்கு நிரம்பவும் பிடித்து இருந்தது. 'தாஜ்மகால் படம்' மாட்டப்பட்டு இருந்தது, அந்த டீக்கடையை அலங்கரித்தது. கவிஞன் அதைப் பார்க்கிறான். மிக அழகாக இருந்தது. கீழே ஒரு ரொட்டித் துண்டு கிடந்தது. அது அவனுக்குக் கிடைக்குமா என்று அவன் கண்கள் ஏங்கின. அது அவனுக்குக் கிடைத்தது. அதைத்தான் அவன் எடுத்துக் கொண்டான்.

இன்னும் பிரமாதமான கருத்துகள் அந்நூலில் இடம் பெற்று இருந்தன. இன்றைய வெய்யிலுக்கு நேற்றைய நிழல் பயன்படாது என்ற கருத்தும் இடம் பெற்று இருந்தது. உருவகம் என்றால் என்ன என்பதை இந்த நூலின் தலைப்பு அழகாக விளக்கியது. பழைய இலக்கியம் பார்க்கப் படிக்க ரசிக்கப் பயன்படுகிறதே தவிர இன்றைய பிரச்சனை களுக்குப் பயன்படவில்லை என்பதை நினைத்துப் பார்த்தேன். அந்த 'வெறும் தாள் கதையில் காந்தியின் படம் வருணனையில் இடம் பெற்று இருந்தது. அவர் சிரித்துக் கொண்டிருந்தார். எதற்காகச் சிரித்தார். இந்தப் பையன் வெறும் தாள் மடித்துக் கொடுத்ததைக் கண்டு இல்லை. அவர் பெயரைச் சொல்லி இன்றைய பிரச்சனைகளைத் தீர்க்க முயல்கிறார்களே அதைப் பார்த்துத்தான் சிரித்து இருக்க வேண்டும். ஒரு தாஜ்மகால்; படத்தையே பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தால் ரொட்டித் துண்டைப்பற்றி யார் நினைப்பது? இன்றைய பிரச்சனை தாஜ்மகால் படத்துக்குக் கண்ணாடி போடுவதல்ல; ரொட்டித் துண்டு களைப் பங்கிட்டுக் கொடுப்பது என்ற எண்ணம் ஒடியது.

இந்த நினைவு அலைகள் அப்பொழுது எழவில்லை; அவர்கள் விட்டுப் பிரிந்த பின்தான் தோன்றின.

அவள் ஒரு உருவகத்தைச் சொன்னாள். வானத்து நிலவைப் பற்றி இந்தப் புலவர்கள் அடிக்கடி சொல்வதைக் கேட்டிருக்கிறாயா? அதன் மாசுதான் உலகத்துக்குத்

தெரியும். அதன் ஒளி தெரியாது என்று கூறுகிறார்கள். சான்றோர்களுக்கு மாசு ஏற்பட்டால் அந்த மாசுதான் மற்றவர்களுக்குத் தெரியும். அதையே பெரிதாகப் பேசு வார்கள். அதைப் போன்றவர் தான் என் கணவர். என் விதவைத் தனத்தை அவர் அப்பொழுது தன்னையும் அறியாமல் குத்திப் பேசுவார். அவரால் வெளிச்சத்தைக் காண முடியவில்லை. குறையைத் தான் காண முடிகிறது என்று சொன்னாள். எனக்கு என்னமோ அந்த நிலையில் அவர்கள் வீட்டில் மாட்டப்பட்டிருந்த பழைய தலைவர்கள் படம் •கவனத்தை இழுத்தது. அவர்களைப் பற்றிய விமரிசனமும் அப்படித்தானே என்று நினைக்கத் தோன்றி யது. அதற்குமேல் சென்றால் அது அரசியல் ஆகிவிடும் என்பதால் அதைப் பற்றி எங்கள் இலக்கிய விமரிசனத்தில் பேச விரும்பவில்லை.

உலகத்தில் ஒரு பொருளைப் பற்றி ஆராயும் பொழுது அதில் குறைகளையும் காணலாம். ஆனால் அது தந்த வெளிச்சத்தைப் பற்றியும் எண்ணிப் பார்க்க வேண்டும். உலகம் வெளிச்சத்தை வைத்து மதிப்பிடுகிறது. சான்றோர்கள் கண்களுக்குக் குறைதான் தெரிகிறது என்று நினைத்துக் கொண்டேன். அந்த டாக்டர் சான்றோர் வகை யில் சேர்க்க வேண்டிய ஒருவர் என்ற எண்ணம் தோன் றியது. இன்றைய அரசியலும் அப்படித்தானே என்று எண்ணாமல் இருக்க முடியவில்லை. பத்திரிகை ஆசிரிய னாகப் பணி செய்ததால் அந்த நினைவோட்டம் என்னிடம் எழுந்தது.

'வாழ்க்கை ஒரு கண்ணாமுச்சி விளையாட்டு' என்பதைப் பற்றித் தானும் ஒரு சிறு கதை எழுதுவதாகச் சொல்லி இருந்தாள். இது திரைப் படத்துக்கு உரிய தலைப்பாக எனக்குத் தெரிந்தது. யாரும் அப்படி இதுவரை எந்தப் படமும் எடுக்கவில்லை. இனிமேல் எடுக்கலாம் என்ற எண்ணம் உண்டாயிற்று.

அதற்குள் நோயாளிகளைக் கவனித்துவிட்டு வந்த டாக்டர் வீடு திரும்பினார். அவர் பார்வை அந்த விளை யாட்டு பொம்மை மேல் சென்றது. உண்மையில் அவள் அழகாக இருந்தாள். அவர் மனநிலை எனக்கு விளங்கியது. விரைவில் எங்கள் பேச்சை முடித்துக் கொண்டு என் ஸ்கூட்டரை மிதித்தேன். பின்னால் வானம்பாடி ஒட்டிக் கொண்டான்.

''இன்றைய பேச்சு உண்மையில் ரொம்பவும் பயன் உடையது'' என்றான் வானம்பாடி. ''கவிதை வானில் பறக்க வேண்டிய நீங்கள் தரையில் நடப்பதும் அவசியம் ஆகிறது'' என்றேன் நான். ''நீங்கள் தந்த உருவகத்திற்கு மிக்க நன்றி'' என்றார்.

''உங்கள் கவிதை வெற்றி பெறாது'' என்றேன்.

''ஏன்?''

''இரவல்''

''எது?''

''கருத்து''

''எந்தக் கருத்து?''

''கண்ணா மூச்சுப் பற்றியது''

''அது வெறும் உருவகம் தானே''

''அதை நீங்களே உருவாக்கி இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அதற்கு உருவகம் என்று பெயர். கவிதை எழுதும் பொழுது உங்களுக்கு அது தோன்றி இருக்க வேண்டும். அதுதான் கலைப்படைப்பு. இது வெறும் சமையல்'' என்றேன். அவர்களும் உங்கள் தலைப்பை எடுத்துக் கொண்டார்கள்.

''அதனால்தான் அவர்கள் வெற்றி பெறுவது இல்லை'' என்றேன்.

"அப்படி என்றால்?"

"அவர்களுக்கு விமரிசனம் தெரியும். படைப்புத் தெரியாது".

"இரண்டுக்கும் வேறுபாடு?"

"உண்டு. படைப்பாளி விமரிசகர் ஆகலாம். விமரிசகர் படைப்பாளி ஆக முடியாது இதுதான் வேறு பாடு" என்று கூறினேன்.

அதற்குள் அவன் வீடு வந்து சேர்ந்தது. அதாவது நாங்கள் அந்த வீட்டை அடைந்தோம்.

"வருகிறேன்" என்றான்.

அவன் மனத்தில் ஒரு சோர்வு காணப்பட்டது. வெறும் சொல்லடுக்களும் சுவை அடுக்குகளும் சந்த ஓசைகளும் கவிதை ஆகாது. உள்ளத்திலே இருந்து கவிதை எழுத வேண்டும். அந்த ஆற்றல் வானம்பாடியிடம் இல்லை.

☆ ☆ ☆

# [3]

"விமரிசனம் வேறு, படைப்பு வேறு" என்ற எண்ணத்தில் எனக்குத் தெளிவு ஏற்பட்டது. படைப்பை விட விமரிசனம் தான் அதிகமாக இருக்கிறது. கட்டின வீட்டுக்குக் கவி சொல்லுகிறவர்கள் மிகுதி. கவி சொல்கிறவர் களா கலி சொல்கிறவர்களா எது சரி தெரியவில்லை. படைப்போ மிகவும் குறைந்துவிட்டது என்ற எண்ணம் தான் எனக்குத் தோன்றியது.

அதைத்தான் இன்று எல்லோரும் பேசுகிறார்கள். நாட்டில் விமரிசனமே அரசியல் என்ற அளவுக்கு அரசியல் தாழ்ந்துவிட்டது. அதுவும் பழமையைப் பற்றிய விமர் சனமே அரசியல்; என்ன பயன்? விமர்சனங்களைத் தான் விசாரணைகள் என்று வடிவம் கொடுக்கிறார்கள். நல்லது வாழ வேண்டும் கெட்டது ஒழிய வேண்டும்; இதுதான் இலக்கியத்தின் அடிப்படை. ஆனால் எது நல்லது எது தீயது என்று அடுக்கிக் கூறுவது இலக்கியம் ஆகாது. அது வெறும் அட்டவணை தான்.

எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இலக்கிய விமரி சனத்தை அரசியல் விசாரணையோடு ஒத்திட்டுப் பார்ப்பது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. விமரிசனம் வேண்டும் தான். அதோடு இலக்கியம் நிற்பது நல்லது அல்ல. வாழ்க் கைக்கு எது நல்லது என்று காட்ட வேண்டும். அதைப் படைத்துத் தர வேண்டும். அரசியல் இன்னும் இந்த அடிப் படையில் இயங்கவில்லை என்பதை உணர முடிந்தது.

பழைய இலக்கியங்களின் விமரிசனம் காலட்சேபம் போன்றது. வீண் பொழுது போக்குகள். இன்றைய இலக்கி யத்தைப் பற்றி விமரிசனம் செய்யட்டும். அது வரவேற்கத் தக்கதுதான். புதிய படைப்புகளில் பிழைகள் செய்யாமல்

இருக்க உதவும். அதை வரவேற்கலாம். இன்னும் பாண்டி யனின் ஆட்சிக் கொடுமையைப் பற்றி விமரிசித்து என்ன பயன்? அதற்குத்தான் அவன் தன் உயிரைப் பரிசாகத் தந்தானே. அறம் பழி வாங்கிவிட்டதே. மறுபடியும் அவனைப் பற்றி விமரிசித்துக் கொண்டு இருப்பது வீண் பொழுது போக்குதான்.

மக்கள் தரும் வாக்குரிமை மனிதர்களைத் தண்டிக்க அல்ல; முறைமை மாற்ற. பழையதை மக்கள் விமரிசனம் செய்து முடித்துவிட்டார்கள், அதன் விளைவுதானே ஆட்சி மாற்றம். மறுபடியும் தொடர்ந்து விமரிசனங்கள் செய்து கொண்டே இருந்தால் எப்பொழுது படைப்புத் தொடங்கு வது. ரொட்டித் துண்டுகளை எப்பொழுது பங்கிட்டுக் கொடுப்பது; இந்த நினைவுகள் வானம்பாடியோடு பேசிய பேச்சால் நிகழ்ந்த எதிரொலிகள்.

தெருவில் யாரோ சிலர் ஒழிக என்றும், வாழ்க என்றும் கத்திக்கொண்டு இருந்தார்கள். அந்தக் கோஷங்கள் கடல் அலைகள் போல் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தன. அரசியல் அலைகளில் எழும் கொந் தளிப்பு அதன் ஓசை இது என்று நினைத்தேன். ‘அலையோசை’ என்ற நாவல் கல்கி எழுதியது. அது யாரை எப்படி நினைத்து எழுதி னாரோ தெரியவில்லை. அந்த அலையோசை இன்னும் அடங்கவில்லை. மக்கள் எழுப்பும் குரல் கோஷங்களால் இந்த ஓசையைக் கேட்க முடிந்தது. அலையோசை ஒரு சரித்திர நாவல் என்றால் அவர் காலத்து நிகழ்ச்சிகளை விமரிசனம் செய்தது தானே அந்த நாவல். அது வரலாற்று நாவல்; அதாவது நாட்டில் நடந்து போன போராட்டத்தை எழுத்தோவியமாகத் தருகிறது. அது தேசியப் போராட் டத்தைப் பதிவு செய்த மகா உன்னதமான நாவல்.

இந்த எண்ணங்களில் அடுத்த வாரம் பிரசுரிக்க வேண்டிய கதைகளைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தேன். மறுபடியும் ஏன் அந்த ‘வெறுந்தாளை’ இந்த வாரக்

கதையாகப் பிரசுரிக்கக் கூடாது என்று எண்ணத் தொடங்கினேன்.

அதற்குள் என் வீட்டு 'ரியலிசம்' என்னைத் தட்டி எழுப்பினாள்.

"இதோ பாரு! இனிமேல் அவள் நம்ம வீட்டுக்கு வரக்கூடாது".

"யார்?"

"அதுதான் அந்த சச்சு"

"சச்சு"

"ஆமாம். அவள்தான்"

அந்தப் பெயரை எங்கோ திரைப்பட உலகில் கேட்டு இருக்கிறேன். எழுத்துலகில் யார் அந்தச் சச்சு? எனக்கு விளங்கவில்லை.

"யார் அந்தச் சச்சு?" என்று தைரியமாகவே கேட்டேன்.

"அதுதான், அந்த சரசுவதி, எப்பொழுதும் ஏடும் கையுமாக வருகிறாளே".

"கலைமகள்; அப்படித்தான் இருப்பாள்"

"எல்லோரும் கலைமகள் ஆகிவிட முடியுமா?"

"அப்படி ஒரு பத்திரிகை வருகிறதே தெரியுமா உனக்கு?"

"தெரியும். யாரோ சில பேர் படிக்கிறார்கள்."

"ஏன் அதைப் பல பேர் படிக்கவில்லை?"

"கலையை ரசிப்பவர்கள் சில பேர்தான் இருக்க முடியும்".

''மற்ற பத்திரிகைகள்?''

''இப்போ துணுக்குகளுக்குத்தான் காலம்; கலைக் கல்ல'' என்று என் அனுபவத்தைக் கொண்டு சொன்னேன்.

''அது சரி, யாருக்கு இப்ப பொறுமை இருக்குது?''

''அது உனக்கு இல்லை. அது எனக்குத் தெரியும். அதன் அர்த்தம் எனக்குத் தெரியும்.''

''எங்கள் பொறுமையைச் சோதிக்கிற வரையும் எழுதினால் யாரால் படிக்க முடியும்'' என்று கேட்டாள்.

சாதாரண சராசரி வாசகர்களுள் ஒருவராக என் மனைவியை மதித்தேன். ஆனால் அவள் ஒரு நாள் கூட துணுக்கைப் படிக்கமாட்டாள். அதுவும் எனக்குத் தெரியும். அவள் சீரியஸ் டைப். அவளுக்கு தமாஷே பிடிக்காது.

''அதைப் பற்றித்தான் நினைக்கிறேன். கதையைப் போட்டு இந்த வாரத்துப் பத்திரிகையை ஒட்டலாமா இல்லே துணுக்குகளே வைத்து நிரப்பலாமா. அதுதான் யோசிக் கிறேன்'' என்றேன் என்றாள்.

''ஐயோ துணுக்கரசே? பல்கலைக் கழகத்தில் ஒப் பாரியைப் பற்றி ஆராய்ச்சி. தெருக்கூத்தைப் பற்றி ஒரு சொற்பொழிவு. இதுதான் இன்றைய துணுக்கு.

''சில பேர் ரொம்பவும் எளிமையாக விளம்பரம் ஆகிவிடுகிறார்கள்; தெரியுமா? ஒரு பிரபல இலக்கியவாதி இருக்கிறார். ஆனால் அவருக்கு அதிகம் பேசத் தெரியாது. அவர் திடீரென்று யாரைப் பற்றியாவது அபூர்வ செய்தி யைச் சொல்லுவார். 'அமெரிக்காவிலே இந்திய இட்டலிக்கு அமோக வரவேற்பு' என்று எங்காவது சொல்லி வைப்பார். உடனே அவருக்கு ஒரு போட்டோ. அவர் பேசிய இந்த அபூர்வ செய்திக்கு விளம்பரம். அவர் ஒரு பேராசிரியர். இப்படி எளிதாக விளம்பரத்துக்கு ஆளாகிற எழுத்

தாளர்களும் இருக்கிறார்கள் என்பதை அவள் எடுத்துச் சொன்னாள்.

"உடனே அதுக்குப் போட்டியாக இன்னொருவர் கிளம்புவார். 'வை.மு.கோ. சட்னி. இல்லாமலே இட்டலி சாப்பிடுவார். அதை நேரில் பார்த்தேன் இதை வெளி யிட்டவர் முருகவேள். அவருக்கு ஒரு பட்டம்.

"இதுதானே நம் துணுக்குகள்" என்று அவற்றுள் ஒன்று இரண்டு படித்துத் தன் விமரிசனத்தைத் தந்தாள்.

"பெண்கள் பகுதி என்று ஒரு சில பத்திரிகைகள் ஒதுக்கி இருக்கிறார்கள். சமையலிலே இருந்து ஆசனம் செய்வது வரை எழுதுகிறார்கள்."

"அதுதான் எழுதுவார்கள். பத்திரிகை என்றால் அது சும்மா பொழுது போக்குதானே" என்று என் அபிப் பிராயத்தை அவளிடம் சொன்னேன்.

"ஆமாம் நீங்கள் என்ன எழுதப் போகிறீர்கள்?"

அதாவது 'விமரிசனம்' என்ற பகுதியைத் தொடங் கலாமா என்று பார்க்கிறேன்.

"அதற்கும் இந்தச் சச்சுவுக்கும் என்ன சம்பந்தம்?"

"அவள் எங்கள் பத்திரிகையின் சந்தாதார். அதாவது அவள் கட்டுகிற காசுதான் வடிகட்டி நமக்குச் சம்பளமாக வருகிறது. இப்படிப்பல சந்தாதார்கள் சேர்ந்துதான் எங்கள் பத்திரிகை நடக்கிறது."

"பிரபல பத்திரிகைகள் தானாகக் கடைகளில் விற் பனையாகிறதே".

"அவை எல்லாம் வளர்ச்சி பெற்ற பத்திரிகைகள்; நாங்கள் எல்லாம் சும்மா ஓடினால் போதும்; அவ்வளவு தான்".

"நீங்களும் ஏன் அப்படி அதைப் பிரபலப்படுத்தக் கூடாது?".

“அதைத்தான் யோசிக்கிறேன். ஒரு பத்திரிகை என்பது எழுத்தாளர்களை ஒட்டித்தான். நல்ல எழுத்தாளர் கள் எழுத முன் வராததால் தான் இந்தத் துணுக்குகளைக் கட்டிக் கொண்டு அழ வேண்டி இருக்கிறது”.

“அது இல்லை. அவர்கள் எழுதுவதற்கு நிறைய விஷயம் இல்லை. இதுதான் இந்த நாட்டுப் பஞ்சம்”.

“எழுத்துப் பஞ்சம்” என்ற பேச்சு எங்கள் ஆபீசில் கேட்டு இருக்கிறேன். “விஷயம் பஞ்சம்” என்ற சொல்லை அவள் வாயால்தான் கேட்கிறேன்.

”அது சரி. புது அம்சம் என்று சொல்லி எதைச் சேர்க்க நினைக்கிறீர்கள்?”

“அதற்குத்தான் இந்த இலக்கிய வட்டம் அவர்கள் தான் அதற்குக் குழு உறுப்பினர்கள். இனி இந்த நாட்டில் நடக்கும் கிளர்ச்சிகள், அரசியல் போக்குகள், திரைப் படங்கள், நாடகங்கள், வெளியிடப்படும் நாவல்கள் புதிய நூல்கள் இவற்றைப் பற்றி விமரிசனம் செய்வது”.

“சச்சு எதற்கு?”

“அவள் சிறந்த விமரிசகி”.

“நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். அவள் தன் கணவனை விமரிசனம் செய்கிறாள். அது எனக்குப் பிடிக்கவில்லை”. அவள் ஏன் சரசுவதியை வெறுக்கிறாள் என்பதற்கு அப்பொழுதான் காரணம் தெரிந்தது.

“இலக்கியத்தை ரசிக்கலாம். விமரிக்கலாம் கணவனை ரசிக்கலாம் ஆனால் விமரிசிக்கக் கூடாது. இது அவள் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி” என்றாள்.

“அது அவள் உரிமை”

“அது அவ்வளவு பெருமை தருவது அல்ல.”

“படித்தவள்”

"கதை"

"வாழ்க்கையையும் படித்து இருக்கிறாள்."

"அவள் விதவை; அதனால் அது அவளுக்கு அறுத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் அவள் தன் கணவனை விமரிசிக்கிறாள்."

"நீ என்னை நேரில் விமரிசிக்கிறாய். அவள் மறை வாகச் செய்கிறாள். அதுதான் வேறுபாடு" என்றேன்.

"பின்னதுக்குப் புறங்கூறுதல் என்று பெயர்".

"அதுதான் நாகரிகம். முன்னால் பேசிக் கண்டிப்பதை விட மறைவாகப் பேசித் தீர்த்துக் கொள்வது நல்லது தானே"

அவளுக்கு ஒருத்தி தன் கணவனைக் குறை கூறுவது பிடிக்கவில்லை.

"குறை இருந்தால் சொல்லித்தானே ஆகவேண்டும்".

"அதை உங்கள் இலக்கியத்தில் வைத்துக் கொள்ளுங் கள். குடும்பத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது".

"வாழ்க்கைக்கு உதவாதது இலக்கியத்துக்கு மட்டும் எப்படிப் பயன்படும்?"

"அப்பொழுது விமரிசனம் செய்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும்"

"பத்திரிகையின் புதிய அம்சம் அதுதானே."

"இப்பொழுது சினிமாவிலே வரும் பாடல்களை விமரிசனம் செய்கிறார்களே பார்த்திருக்கிறாயா?"

"பார்த்திருக்கிறேன்; சில திரை விமரிசகர்கள் மார்க்குப் போடுகிறார்கள்".

"அதைப் பற்றி என்ன சொல்லுகிறாய்?"

"அவர் எப்பொழுதாவது வாத்தியாராக இருந் திருப்பார்"

"அது சரி; அது நல்லதா கெட்டதா?"

"பின் நோக்கிச் செல்லுகிறோம் என்றுதான் கூற வேண்டும். காரண காரியத்தோடு சொல்லி விளக்க வேண் டிய செய்தியைக் கணக்கில் காட்டுவது சுவையைக் குறைக்கிறது".

"இது புதுமை தானே?"

"வெற்றி தோல்வியைப் பற்றி யார் இவர்களைக் கேட்டார்கள்? படம் விமரிசனம் செய்யப்பட வேண்டும் மார்க்குப் போட இது என்ன தேர்வா என்ன?"

"தேர்வா என்ன?" என்ற கேள்வி என்னைச் சிந்திக்க வைத்தது. அந்த வெறுந்தாள் கதைப் பாத்திரம் சுதா ஏன் தேர்வில் தோல்வி அடைந்தான்? அவனுக்கு எதிர் காலத்தைப் பற்றிய அச்சம் எழுந்துவிட்டது. பழமையைப் பற்றிச் செய்யும் விமரிசனம் போலவே, எதிர்வைப் பற்றி அஞ்சுவதும் வீண் என்று பட்டது. நிகழ்காலம் என்ன பாலா ஓடுகிறது. எதிர்வைப் பற்றி அஞ்ச. அவன் அச்சம் நியாயம் தான். நாட்டிலே தக்க திட்டங்கள் தீட்டப்படவில்லை.

இளைஞர்களைச் சமூக சேவை செய்ய அனுப்பு கிறார்கள். முதலில் அவர்களுக்குச் சேவை செய்ய இந்தச் சமூகம் முன் வரட்டும்; அவர்கள் அச்சத்தைப் போக்கி நம்பிக்கை ஊட்ட எந்தத் திட்டம் உருவாகி இருக்கிறது?

வைத்தியப் படிப்பே இன்று நம்பிக்கை தரவில்லை. ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் இதுவரை மணச்சந்தையை நம்பிக் கொண்டு இருந்தார்கள். இந்த வேலை நிறுத்தத்துக்குப் பிறகு அதுவும் மூடப்பட்டுவிடும். அவர்களுக்குத்தான் வேலை உறுதி என்ற நம்பிக்கை இருந்தது. அதுவும் இல்லை என்பதை

அவர்கள் வெளிப்படுத்திவிட்டார்கள். இனி மணச்சந்தை யிலும் அவர்களுக்கு மவுசு குறையத்தான் போகிறது. அவர்கள் கதியே இந்த நிலை என்றால், 'கலை' என்ற பேரால் பட்டம் வாங்கும் சுதாவுக்கு மட்டும் என்ன எதிர் காலம் இருக்கிறது? அவன் கையில் பெறப்போகும் சர்ட்டிபிகேட்டும் வெறும் தாள்தானே? அழகாகப் படம் போட்டு வைக்கலாம். அதாவது அதற்காக உழைத்து வீண் படுத்திய நாட்களை எண்ணிப் பார்க்க உதவும். சில வீடு களில் கருப்பு அங்கி அணிந்து பட்ட விழாப்படம் எடுத்து வைக்கிறார்கள். இனி அந்த உடை வெறும் 'ஒரு நாள் வேஷம்' தான் என்ற உணர்வைத் தவிர வேறு எதை நினைவூட்டப் போகிறது?

அந்தக் கதை எழுதியவன் மாணவர்களோடு நெருங் கிய ஒருவனாகத்தான் இருக்கவேண்டும். கல்லூரி வாழ்வில் ஒரு அவல உணர்வை எழுப்பும் கதையாகத் தீட்டினானே அதைப் பாராட்ட வேண்டியது. 'ஒரு பிறவிக்குருடன்' என்ற கதை எழுப்பிய சோகத்தைவிட இதுதான் மிக்க சோகத்தை எழுப்புகிறது. அவன் பிறவிக் குருடன்; இவன் வாழ்க்கைக் குருடன். படிப்பில் வெற்றி பெறாததால் அவன் வாழ்வில் ஒளியைக் காண முடியவில்லை. ஒளியைக் காணாதவன் குருடன் தானே. அந்த ஒரு குருடன் என்ற கதையைவிட இது மேலாகப் பட்டது. அந்தக் கதையை வெளியிடுவதால் என்ன பயன்? சாதாரண உணர்வைத் தான் எழுப்புமே தவிர எந்தப் பிரச்சனையையும் இது எழுப்பாது.

நான் நினைத்துப் பார்க்கிறேன். உழைப்பின் அடித் தளத்தில் கல்வியைப் பற்றி எண்ணாத கருமான் மகன் இப்படிக் கலங்கி இருப்பானா! இரும்பை அடித்து நீட்டி வளைப்பானே தவிரத் தோல்வி என்று ஒப்பாரி வைத்து இருக்கமாட்டான். என்ன செய்வது என்ற ஒப்பாரியின் ஒலம் அந்த இளைஞன் எழுப்பினான். அதுதான் வெறுந் தாள்.

வெறுந்தாள் என்ன விடைத்தாளையே தரட்டுமே. அது வினாத்தாளுக்கு விடையாகுமே தவிரப் 'பசித் தாளுக்கு' அது சோறு போடுமா? பசித்தாள் பசித்தாள்தான்; 'ஈன்றான் பசி காண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை.' இந்தக் கட்டுப்பாடு பயங்கரமானது; திருடக்கூடாது; அள்ளக் கூடாது; பிறரிடம் கொள்ளக் கூடாது. ஒப்புக் கொள்கிறேன். வாழ்க்கையை எள்ளக் கூடாது என்று எப்படிச் சொல்ல முடியும். எள்ளினால் தான் வாழ்க்கையின் பள்ளம் இந்தச் சமூகத்துக்குத் தெரியும். மேடுகளைப் பார்த்துப் பழகிவிட்ட இந்தச் சமுதாயம், அதன் கேடுகளை எப்பொழுது எண்ணப் போகிறது. அதை எண்ணிப்பார்க்கும் காலம் நெருங்கிவிட்டது. இனித் தனி மனிதனைப் பற்றி விமரிசனம் கண்ணுக்குத் தெரியட்டும். தனி மனிதனைப் புகழ்வது எவ்வளவு கெடுதியோ அப்படித்தான் தனிமனிதரை இகழ்ந்து கொண்டு இருப்பது. சமுதாயச் சிந்தனையை மாற்றுவதற்குத்தான் இந்தக் காந்தீய வழிபாடும் தனி மனிதரின் நிந்தனையும், இரண்டு பக்கமும் மக்களைத் திருப்பிவிட்டால் சமுதாயத்தைப் பற்றிய எண்ணம் விமரிசனம் எதுவும் தோன்றாது. அரசியல்வாதி நிம்மதியாகக் காலம் கடத்த முடியும். வந்தனையும் நிந்தனையும் திசை திருப்பும் வழிகள் என்று நினைத்துக் கொண்டேன். இவற்றை வெளியே சொன்னால் தானே இது அரசியல்; உள்ளே நினைத்துக் கொள்ளக் கூடவா எனக்கு உரிமை இல்லை.

பகிரங்கமாக எங்கள் பத்திரிகையில் இதை எழுத முடியுமா? எழுதுவதற்கு இது என்ன அரசியல் பத்திரி கையா என்று எங்கள் உரிமையாளர் கேட்பார். அதாவது எங்களுக்கு உரிமை தர மறுக்கும் பத்திரிகையின் சொந்தக் காரர் கேட்பார். 'குடும்பப் பத்திரிகை' அளவில் நிறுத்திக் கொண்டால் போதும். அரசியல் எழுதி அம்பதாயிரம் ஓடு வதைவிட அரிசி இயல் எழுதி ஐயாயிரம் ஓடினால் போதும் என்பார். அதாவது அரிசி இயல் என்பது குடும்பத்தைப்

பற்றி எழுதுவது போதும் என்கிறார், குடும்பப் பத்திரிகை' என்றுதானே நாங்கள் விளம்பரப் படுத்துகிறோம். இதுவரை 'சமூகப் பத்திரிகை' என்று வெளியிட யாரும் முன்வர வில்லை.

இன்னும் சமூக உணர்வு இந்த நாட்டில் வளரவில்லை. அந்தச் சமூக உணர்வு வளரும் பொழுதுதான் அரசியல் திருந்தும். அது மக்களுக்கு உண்மையில் பயன்படும் என்று எண்ணத் தொடங்கினேன்.

இன்னும் எந்தக் கதையைப் பிரசுரிப்பது என்று என்னால் முடிவு செய்ய முடியவில்லை. 'பிறவிக் குருடன்' சிறந்த கதையா, 'வெறுந்தாள்' சிறந்த கதையா என்று என்னால் முடிவு செய்ய முடியவில்லை.

எதிர்பார்த்த விதமே சரசுவதி அன்று மாலை எங்கள் வீட்டுக்கு வந்தாள். எங்கள் வீட்டு முன்னறை எனக்காகவே ஒதுக்கப்பட்டு இருந்தது. நான் பாதி எழுத்தாளன்; பாதி பத்திரிகை ஆசிரியன் அல்லவா. அதனால் எனக்குத் தனி அறை வேண்டியிருந்தது. வக்கீல் வீடுகளில் இப்படி முன் புறம் கிளைண்டுகளுக்காகவே விடப்பட்டிருக்கும். அவர் களை மருட்டுவதற்காகவே பொன்னொளிர் மேனியை உடைய புத்தகங்கள் அடுக்கப்பட்டு இருக்கும். எனக்குக் கூட அதைப்பற்றி ரொம்பநாள் தெரியாது. இதை எல்லாம் இவர்கள் படித்துத்தானே வக்கீல் ஆகி இருப்பார்கள் என்று நினைத்ததுண்டு. பின்னால்தான் தெரிந்தது. அவை புரட்டிப் பார்ப்பதற்கு; விவரங்கள் தீர்ப்புகள் முன் நிகழ்ச்சிகள் விளக்கங்கள் விவாதங்கள் இவற்றை 'லாஜர்னல்கள்' என்று சொல்லுகிறார்கள். அது அந்த அறைக்குத் தனி அழகு. புட்டிகள், மாத்திரைகள், மருந்து விளம்பரங்கள் இதெல் லாம் டாக்டர் வீட்டுக்கு அழகு. பிரசவ மருத்துவ இல்லமாக இருந்தால் குழந்தைகளின் படங்களை மாட்டி வைக்கிறார் கள். வாத்தியார்களாக இருந்தால் பையன்கள் கட்டுரைப் புத்தகங்களும் விடைத்தாள்களும் சிதறிக் கிடக்கும். வியா

பாரியாக இருந்தால் எந்த அடையாளமும் தெரியாது. சோபாக்கள்தான் அழகாக இருக்கும்; என்னைப் போல அரைப் பத்திரிகை ஆசிரியர் வீட்டில் பிரசுரமாகாத கதைகளும் அரைகுறையாக எழுதிப் போட்ட குப்பைகளும் தான் இருக்கும். பத்திரிகை ஆசிரியன் என்பதால் பரபரப்பும் வருவார் போவாரும் இருப்பார்கள். எழுத்தாளன் என்பதால் அதற்கு வேண்டிய தனிமையும் கிடைத்தது.

நான் ஒரு காலத்தில் எழுத்தாளனாக இருந்தபோது என்னைப் பலர் கேள்விகள் கேட்டார்கள். ஆச்சரியமாக இருக்கும். நீங்கள் எப்படி எழுதுகிறீர்கள் என்று கேட் பார்கள்.

''பேனாவினாதான் எழுதுகிறேன்'' என்பேன்.

''அதைக் கேட்கவில்லை, எப்படி உங்களுக்கு எழுத வருகிறது?'' என்பார்கள்.

''வெறுந்தாள் என் முன்னால் இருக்கிறது. எழுதத் தொடங்குவேன். பிறகு எழுத்துத் தன்னால் வரும்'' என்பேன்.

இப்படி அவசியமில்லாத கேள்விகள் எல்லாம் கேட் பார்கள்.

''இந்தப் பாத்திரங்கள் எல்லாம் உண்மையான பாத் திரங்களா?'' இப்படி ஒரு கேள்வி.

''உண்மையைச் சொல்லுகிற பாத்திரங்கள்தான்'' என்பேன். வேறு என்ன சொல்ல முடியும்?

''சம்பவங்கள்?''

''அதுதான் கற்பனை'' என்று பத்திரிகைகளில் குறிப் பிடுகிறோமே'' என்பேன்.

''இந்தக் கற்பனை எப்படி உதயமாகிறது?''

"அதற்கு என்னால் அப்பொழுது பதில் சொல்ல முடியவில்லை. நான் அரை குறை எழுத்தாளன் தானே? நான் எப்படிப் பதில் சொல்ல முடியும்?

"எழுதுவதற்கு எங்காவது போய் உட்கார்ந்து விடு வீர்களா?"

"உட்கார்ந்துதான் எழுத முடியும்"

"இல்லை ஊட்டி, கொடைக்கானல்".

"அப்புறம் டியூட்டி என்ன ஆவது?"

"இல்லை அப்படித்தான் சிலர் எழுதியதாகச் சொல்லு கிறார்கள். இரண்டு மூன்று மாதம் ஓய்வு எடுத்துக்கொண்டு எங்காவது போய் உட்கார்ந்து எழுதுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்".

"இருந்த இடத்திலேயே எழுதலாமே"

"இல்லை அடிக்கடி வந்து தொந்தரவுப்படுத்திக் கொண்டிருக்க மாட்டார்களா?"

"தொந்தரவுகளை எழுதுவதுதானே கதை! பிறர்படும் துன்பங்களை எழுதும் எழுத்தாளன் ஏன் ஓடித் தனிமை யைத் தேடவேண்டும்".

"இல்லை தனியாக ஒரு கதையை சிருஷ்டி செய் கிறார்களே எப்படி முடிகிறது?"

அதற்கும் என்னால் பதில் சொல்ல முடிவதில்லை.

அதே பழைய கேள்வியைக் கேட்டுக்கொண்டுதான் அன்று சரசுவதி பேச்சைத் தொடங்கினாள்.

"சிருஷ்டி என்பது தனிமையில் படைப்பது அல்ல" என்றேன்.

அவள் சிரித்தாள்.

"தொடக்கத்தில் சமுதாயத் தொடர்பு இருக்க வேண்டும். கரு அங்கே இருந்துதான் எடுக்கப்படுகிறது. பிறகு அது தாயின் வயிற்றில் உருப்பெறுகிறது" என்று நான் சொல்ல நினைத்தேன். இவ்வாறு பேசுவது ரொம்பவும் அற்பத்தனமாக இருந்தது.

"கண்ணாமூச்சு என்ன ஆயிற்று" என்று கேட்டேன்.

"அது எப்பொழுதும் விளையாட முடியாது"

"அப்படி என்றால்?"

"அன்று கேட்பதற்கு நன்றாக இருந்தது; நினைப்பதற்கு நன்றாக இல்லை" என்றாள்.

"ஏன் கதை ஓடவில்லையா?"

"வெறும்தாள் தான் மிச்சம்" என்றாள்.

அந்தச் சிறு கதையின் தலைப்பு என்னைக் கவர்ந்தது.

வெற்றுத் தாளுக்கும் வெறும்தாளுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா என்று எண்ணிப்பார்த்தேன். வெற்றுத்தாள் வேறு; வெறும்தாள் வேறு என்று மட்டும் விளங்கியது. ஆனால் வித்தியாசம் தெரியவில்லை. அதை ஏன் எண்ணிக் குழப்பிக் கொள்ளவேண்டும். அதைப்பற்றி எண்ணுவதை விட்டுவிட்டேன்.

"ஏன் நீங்கள் எழுதவில்லையா?"

"எழுத முடியவில்லை" என்று அதே சமயத்தில் வானம்பாடியும் சொல்லிக் கொண்டு வந்தான்.

புதுக் கவிதையில் இந்தத் தலைப்பு இடம் பெறாது; பெற முடியாது. என்று அடித்துப் பேசினான்.

"ஏன் உருவகம் பொருத்தமாக இல்லையா?"

"இந்தக் கருத்துக்கும் காயமே இது பொய்யடா என்பதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? மனிதனுக்குச் செயல் தன்மையை இழக்கச் செய்யும் கருத்தை நாங்கள்

புதுக் கவிதைக்காரர்கள் புகுத்த மாட்டோம்; என்னால் அதை ஒப்புக்கொள்ள முடியவில்லை.''

''நீங்கள் காயமே இது பொய்யடா என்பதால் இது பொய்யாவதில்லை. அது மெய் என்று சொல்லி விட்டால் உடனே அது மெய் ஆகிவிடுவது இல்லை. இதுதான் உண்மை. மனிதன் கொள்ளும் உணர்வுதான் அதற்குக் காரணம். அந்த நிலையில் அது படுகிறது; அதனால் அந்த உணர்வுதான் அடிப்படையே தவிரச் செய்தி அல்ல. அதே போலத்தான் எந்தச் செய்தியும்'' என்றேன்.

''அதைச் சொல்லவில்லை. அத்தகைய சித்தாந்தங்கள் இந்த நாட்டில் தோன்றி மனிதனின் சுய சிந்தனையையும் செயலாற்றலையும் குறைத்துவிட்டிருக்கிறது. அதை எதிர்ப் பதுதான் இன்றைய புதுக் கவிதையின் சித்தாந்தம்'' என்று அவன் தன் கருத்தைக் கூறினான்.

சரசு இந்த வாதத்தில் அவள் ஈடுபடவில்லை. 'ஆசை அன்பு, பாசம்' என்ற கதையில் அவள் ஆழ்ந்து கிடந்தாள். தன் கணவன் தன் மீது கொண்டது ஆசையா அன்பா பாசமா என்று தெரியாமல் அவள் திகைத்துக் கொண் டிருந்தாள். ஆசை முதற்படி; அன்பு இரண்டாம்படி; பாசம் மூன்றாவது நிலை என்று அந்தக் கதை அவளுக்கு உணர்த்தியது.

இவ்வளவு அழகாக இந்தத் தத்துவத்தை அக்கதை உணர்த்தியதைப் படித்துப் படித்து வியந்தாள். தன் கணவன் முதற்படியில் இருக்கிறான் என்பதை அவள் உணரத் தொடங்கினாள். தான் இரண்டாவது படியில் இருப்பது போன்ற உணர்வு அவளுக்கு இருந்தது.

மூன்றாவது படியில்தான் வித்தியாசம் ஏற்படுகிறது. தன் பாசம் எங்கோ சென்றுவிட்டது போன்ற உணர்வு அவளுக்கு ஏற்பட்டது.

"அவள் ஒரு பெண்' ஆச்சரியமாக இருந்தது அந்தக் கதையின் தொடக்கம். அவள் வேறு என்னவாக இருக்க முடியும்? என்றாலும் அதையும் ரசிக்க முடியாமல் இல்லை. அவளுக்குக் 'காதல்' என்றால் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை; யாரைக் கேட்டாலும் அதற்கு விளக்கம் சொல்லத் தெரியவில்லை"

சட்டென்று படிப்பதை அவள் நிறுத்தினாள்.

"ஏன் அவளுக்குத் தெரியவில்லை என்று எழுதி இருக்கிறது. யாருக்குத்தான் தெரியும்" என்று சரசு கேட்டாள்.

"ஒருவர் இல்லாமல் மற்றவர் வாழமுடியாது" என்றான் வானம்பாடி.

"உண்மைதான். நான் அவரை வெறுத்தாலும் அவர் இல்லாமல் நான் வாழ முடியாது; அப்பொழுது அவரிடம் காதல் இருக்கிறது என்று தனக்குள் சொல்லிக் கொள்ளாமல் வெளிப்படையாகச் சொன்னார். அவர் வெளிப்படையாகச் சொன்னதால்தான் எனக்குத் தெரிந்தது. வேறு எப்படி எனக்குத் தெரிய முடியும்?"

அதற்கு மேலும் கதையைப் படித்தாள்.

"அதனால் யாரையாவது காதலிப்பது என்று தீர் மானித்தாள்".

இது ஒரு நகைச் சுவைக் கதையாக இருந்தது. பிறகு போகப் போகச் சீரியசாகப் போய்விட்டது. அவள் உண் மையிலேயே ஒரு ஆளிடம் காதல் கொண்டு விட்டாள். சும்மா அதைப் பரிட்சித்துப் பார்க்க வேண்டும் என்று நினைத்தாள். அது நிஜ வாழ்க்கையாகவே ஆகிவிட்டது.

இதைப் படிக்கும் போது எனக்குப் பழைய பாரதக் கதை கவனத்துக்கு வந்தது. குந்திதேவி துருவாச முனிவர் ஒரு மந்திரத்தைக் கற்றுத்தந்தாராம். அந்த மந்திரத்தை

உபதேசித்து நீ யாரை நினைக்கிறாயோ அவன் உன் ஆம்படையானாக வந்து நிற்பான். ஆம்படையான் என்றால் அடுத்த கதை குழந்தைதானே. அவன் உனக்குக் குழந்தை வரம் தருவான் என்று உபதேசித்தாராம்.

'அது உண்மையா பொய்யா என்று பரிட்சித்துப் பார்க்க விரும்பினாளாம். யாரும் இல்லாத நேரத்தில் தனிமையில் அதை மந்திரித்தாளாம். சூரிய மந்திரத்தைச் சொன்னாளாம்; சூரியனே நேரில் ஒரு அழகிய யுவனாக வந்து நின்றானாம். அவன் ஒளி அவள் கண்களைக் கவர்ந்தது. அவன் உடனே அவளை டெம்பரரியாகக் காதல் கொண்டு ஒரு காதல் மகனையும் தந்து சென்றுவிட்டானாம். இது பழைய கதை.

அதேபோல அந்த 'அவள் ஒரு பெண்' கதை சென்றது. அவள் ஒருவனைக் காதலித்துவிட்டாள். அந்தக் காதல் மூன்று நிலைகளைப் பெற்று இருந்தன என்று தெரிந்து கொண்டாளாம். ஆசை, அன்பு, பாசம். இந்தப் பாசம் என்ற நிலையில் அவள் நின்று விட்டாளாம்.

அதற்கப்புறம் அவளுக்கு அதுவே பிரச்சனையாகி விட்டது. அப்புறம் பிரிவு என்பதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லையாம். எப்படியாவது அவனைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் முக்கியமாகச் சிரிக்க வேண்டும் என்ற ஆசை வருமாம். அப்பொழுதுதான் அவள் ஆசை என்பது என்ன என்பதைத் தெரிந்து கொண் டாள். ஆசை என்பதற்கு அதற்கு முன்னால் அவளுக்கு அர்த்தம் தெரியாமல் இருந்தது. அந்த ஆசை நிறை வேறியதும் இரண்டு பேரும் இணைபிரியாமல் பழகினார் களாம். அதை என்ன என்று சொல்வதென்றே தெரிய வில்லையாம் அப்பொழுது அவள் உள்ளம் மலர்ச்சி பெற்றதாம் அதைத்தான் அவள் அன்பு என்று பேசத் தொடங்கினாளாம். பிறகு ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாமல் வேதனைப்பட்டார்களாம். அதுதான் பாசம்

என்று உணர்ந்தாளாம். மொத்தமாக அதைத்தான் எல்லாரும் காதல் என்று பேசுவதாக அறிந்தாளாம்.

அவள் ஒரு பெண் என்று தொடங்கிய கதை காதலுக்கு அழகான விளக்கம் தந்தது. அதைச் சொல்லிச் சொல்லி மூவரும் சிரித்துக் கொண்டோம். கதையென்றால் இப்படித்தான் இருக்க வேண்டும். எளிய கதை எவ்வளவு பெரிய தத்துவத்தை உணர்த்தியது என்று வாயாரப் புகழ்ந்தோம்.

'அவள் ஏன் சிரித்தாள்' என்ற தலைப்பில் ஒரு புதுக்கவிதை வந்திருந்தது. அதை வானம்பாடி படித்துக் காட்டினான்.

"முத்துப் போல் பல்லழகி;

அந்த அழகிக்குப் பல்லே இல்லை;

எல்லாம் முத்துக்கள் தான்".

என்று பாடப்பட்டிருந்தது.

"பெண்ணென்றால் சிரிக்கவேண்டும்;

இல்லாவிட்டால் அவள் எப்படிப் பெண் ணாவாள்?

பேயும்தான் சிரிக்கும்; ஆனால் அது கோரச்சிரிப்பு;

இப்போது சிரிக்காவிட்டால் அவள்

எப்போது சிரிக்கப் போகிறாள்?

கிழவியாகிய பிறகா?"

இது அடுத்த கவிதை. இது எனக்குச் சிரிப்பை உண்டு பண்ணியது.

அப்படிச் சிரித்துக் கொண்டே இருக்கும் போது சரஸ்வதியைத் தேடிக்கொண்டு டாக்டரே வந்துவிட்டார். உண்மையில் நாங்கள் ரொம்ப நேரம் பேசிவிட்டோம். "ரியலிசத்தை" மறந்துவிட்டு; அன்று அவ்வளவு சிரிப்பு.

"இவற்றையெல்லாம் ஏன் தள்ளி விட்டீர்கள்?" கேட்டது சரஸ்வதி.

"யார் இதைப் படிக்க முடியும்?"

"படிக்க மாட்டார்களா?"

"உண்மையைச் சொன்னால் பிறகு நீங்கள் கதையே அனுப்ப மாட்டீர்கள். ஒரு நாளைக்கு ஐம்பது கதைகள் தபாலில் வரும். அதை யார் படிப்பது? எப்படிப் படிப்பது? யாராவது சிபாரிசு செய்தால் அப்பொழுதான் ஓரளவு கவனித்துப் பார்க்க முடிகிறது?"

"யாராவது சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் அதைக் கொஞ்சம் கவனிப்போம்".

"வாங்க டாக்டர்!" என்று அவரை வரவேற்றேன்.

"இதுதான் உங்கள் வட்டமா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

என் அறையில் 'ash trary' வைக்கவில்லை. அது இது வரை தேவைப்படவில்லை.

அதனாலேயே அவர் சிகரெட்டைப் பற்ற வைக்க வில்லை. எனக்கு என்ன சொல்வது என்று தெரிய வில்லை. "நீங்கள் சிகரெட்டுப் பிடிக்கலாம்" என்று சொல்ல வாயெடுத்தேன். அதற்குகள் நிறுத்திக் கொண் டேன். அது கெட்ட பழக்கம் என்று சின்ன வயதிலிருந்து கேள்விப் பட்டிருக்கிறேன். அதனால் அதிகம் செலவாகிறது. அத னால்தான் அது எனக்குக் கெட்ட வழக்கமாகத் தென் பட்டது. அவர் ஒரு நாளைக்கு மூன்று 'பாக்கெட்' காலி செய்கிறார். தன்னை ஒரு 'செயின் ஸ்மோக்கர்' என்று சொல்லிக் கொண்டார்.

இது ஏதாவது கவலையால் தான் தொடர்கிறது என்று நினைக்கிறேன். அதை மறக்க இது அவசியமாகிறது.

மனிதனுக்கே மயக்கம் தேவைப்படுகிறது. பித்த நிலையில் சித்தம் இழப்பவர்க்கு 'மார்ப்பியா' தானே கொடுக்கிறார்கள். அதாவது மூளை அதிகம் வேலை செய்யக்கூடாது. அதற்கு ஓய்வு தரவேண்டும். அதற்குத்தான் இந்த 'லாகிரி' வஸ்து தேவைப்படுகிறது. 'லாகிரி' வஸ்துக்களை உபயோகிக் காதீர்கள். எங்கோ யாரோ சொல்லக் கேட்டிருக்கிறேன்.

'புகை பிடிக்கக் கூடாது' என்று பலகை போட்டிருக் கிறார்கள். ஆங்கிலத்தில் 'Smoking Strictly Prohitited' என்று போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் என் கவனத்திற்கு வந்தது.

நான் சின்ன வயதில் சிகரெட்டுப் பிடிக்க முயற்சி செய்தேன். ஒரு 'துண்டு பீடி' யாரோ பிடித்துப் போட்டு இருந்தார்கள். எனக்கு அது எச்சில் என்ற பேதம் தெரியாது. பின்னால்தான் இந்த பேதங்கள் எல்லாம் வளர்ந்துவிட்டன. அதை வாயில் வைத்து இரண்டு இழு இழுத்தேன். சே! ஒன்றுமே இல்லை.

அதற்கப்புறம் நான் பெரியவன் ஆனதும் கலியாணம் ஆனதுக்கப்புறம் என்று நினைக்கிறேன். ஒன்றும்பொழு தும் போகவில்லை. அது மாமியார் வீடு அங்கே எப்படிப் பொழுதுபோகும். வெறும் போர். ஞானம் அவள் தன் வேலையில் கவனம் செலுத்தினாள்.

துளசி ராமாயணம் என்று நினைக்கிறேன். அதைத் துளசிதாசர் எழுதினார். தெரிந்ததுதானே. அவர் எப் பொழுதோ தன் குருவிடம் சரியாக நடந்து கொள்ள வில்லையாம். உடனே அவர் அவருக்கு ஒரு சாபம் தந்தாராம். "நீ போய் மாமனார் வீட்டில் ஒரு மாதம் இருக்க வேண்டும்" என்று சொன்னாராம்.

அவருக்கு ஒன்றும் புரியவில்லையாம். மாமனார் வீட்டுக்குப் போவது நல்லதுதானே. இது என்ன தண் டனை. அதற்காகவே ஒரு கலியாணம் செய்து கொண்

டாராம். இந்தக் காலத்து இளைஞர்கள் போல மாமனார் வீட்டை சொர்க்கம் என்று நினைத்தாராம். அதாவது உழைக்காமல் சாப்பிடுவது. அதைத்தானே சுகம் என்று நினைக்கிறார்கள். அங்கே போனாராம். ஒரு வேலையும் இல்லையாம். வேளைக்குச் சாப்பாடு, சுற்றிச் சுற்றி வருவது அதற்கப்புறம் என்ன செய்வது என்று தெரியவில்லையாம். அதற்கப்புறம் ஒரே வேதனையாம். அப்புறம்தான் தெரிந்ததாம் யார் உலகத்தில் அதிகம் கஷ்டப்படுகிறார்கள் என்று; ஒரு வேலையும் இல்லாமல் சுற்றிச் சுற்றி வருவது தான் ரொம்பக் கஷ்டம் என்று தெரிந்து கொண்டாராம். அதற்கப்புறம் தான் ராமாயணம் எழுதினாராம். இப்படிக் கேள்விப்பட்டிருக்கிறேன். சரியாகத் தெரியாது.

அதே மாதிரி நிலைமைதான் எனக்கு ஏற்பட்டது. ஒன்றும் பொழுது போகவில்லை; நான் ஒன்றும் அப்படி ஒரு பெரிய கவியுமில்லை ஒரு காவியம் எழுத. அப்படி எழுதினால் மட்டும் என்ன பயன்? ராமபிரான் கலியாண குணங்களிலே அப்படியே லயித்துப் போய்விடலாம். அதனால் என்ன பயன்? ஒரு நாளைக்கு எனக்குச் சொல்ல முடியாத கோபம் வருகிறது. இவற்றையெல்லாம் தூக்கிக் கடலில் போட்டுவிடலாமா என்று.

நான் ஒன்றும் பெரியார் கட்சி அல்ல. ராமா யணத்தைக் கொளுத்து என்பதற்கு. என்னமோ மனுஷன் ஏன் கஷ்டப்படுகிறான்? "Too much morality" இது இந்த நாட்டின் வியாதிபோல் தெரிகிறது. சதா ஒழுக்கம் பிரச்சனை தான் சே! மனுஷன் முதல்ல சந்தோஷமாக இருக்கிறது என்பதைக் கத்துக்கணும். கவலைப்படுதல் எப்படி என்று தான் கற்றுக் கொண்டோம். ஏதாவது கஷ்டத்தைப் பற்றி நினைத்துக் கொள்ள வேண்டியது. அல்லது உண்டாக்கிக் கொள்ள வேண்டியது. சதா அதே கவலை; வேண்டியது தான். அதுவே வாழ்க்கைத் தத்துவமாக மாறுகிற அளவுக்கு வாழ்க்கையை நரகமாக்கிக் கொள்வது எனக்குப் பிடிப்ப தில்லை.

இந்த வகையிலே கீழ் மட்டத்து ஜனங்களைப் பார்க்கும்பொழுது நாம் ரொம்ப பொறாமைப்பட வேண்டியது தான். அவர்கள் வாழ்க்கையை லேசாக எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களுக்குக் கஷ்டம் என்றால் இல்லாத கஷ்டம் ஒன்றுதான்.

இப்பொழுது நாட்டில் ஒரு புதிய சூழ்நிலை உருவாகிக் கொண்டு இருக்கிறது. தனிப்பட்டவர்கள் வாழ்வைச் சீர்திருத்துவது என்பது. அதற்கு இனிக் சட்டமே செய்து விடுவார்கள் போல இருக்கிறது. அதாவது தலைமைப் பீடத்தில் இருப்பவர் குடிப்பது இல்லையென்றால் இந்த நாட்டில் ஒருவரும் குடிக்கக் கூடாது. அவர் சிகரெட்டு பிடிப்பதில்லையென்றால் இந்த நாட்டில் யாரும் புகை பிடிக்க கூடாது. குடும்பத் திரைப்படம் எடுக்க வேண்டும் என்று நினைத்தால் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்று பிரச்சாரம். உடனே பெண்கள் அந்தப் படங்களுக்கு வீழ்ந்தடிந்துப் போவார்கள்; ஏன்? அது ஆண்களைத் திருத்தும் படம் என்பதால்.

'சினிமா நடிகர்கள் குடிப்பதில்லை' இப்படி ஒரு சபதம். 'அவர்களுக்குப் பெர்மிட் கிடையாது.' இது ஒரு செய்தி.

இதனால் என்ன ஆகப்போகிறது. மனிதன் இரட்டை வாழ்வு வாழப் போகிறான். ஒழுக்கம் கட்டுப்பாடு என்பதெல்லாம் உள்ளேயிருந்து வரவேண்டும். வெளியே இருந்து திணிக்கப்படுமானால் அவன் இரட்டை வாழ்வு தான் வாழ வேண்டி வரும். ஒழுக்கத்தில் 'Black market' நடக்கும். சே! மனிதன் இனி சந்தோஷமாக வாழ முடியாது.

என்னமோ இந்த மாதிரி எண்ணங்கள் எனக்கு உண்டாயின. ''வாழ்க்கையிலே சந்தோஷம் இருக்க வேண்டும். எது சந்தோஷத்திற்குத் தடையாக இருக்கிறதோ அது சரியானதல்ல என்பதுதான் என் தத்துவம்.

அவசியமில்லாமல் ஏன் கவலைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். அந்தச் சுதா எதிர்காலத்தில் தன் வாழ்க்கை என்ன ஆகப் போகிறதோ என்ற அச்சத்தால் தன்னை அழித்துக் கொண்டான். அதுதானே வெறுந்தாள். வாழ்க்கை அவனுக்கு வெறுந்தாள் ஆகிவிட்டது வெறுந் தாள். வாழ்க்கை அவனுக்கு வெறுந்தாள் ஆகிவிட்டது. அதில் என்ன எழுதுவது என்று தெரியாமல் திகைத்தான்.

மற்றொரு கதை. அவள் ஓர் யுவதி; நல்ல வயது; அவளுக்குக் கலியாணமே ஆகவில்லை; அதுவே அவ ளுக்குக் கவலையாகிவிட்டது; ஆபீஸில் பழகினாள். எத்தனையோ வாய்ப்புகள் கிடைத்தன. ஆண்களோடு சிரித்துக் கூடப் பேசமாட்டாள். அது பெரிய பாவமென்று நினைப்பாள். அதாவது அப்பா கல்யாணம் பண்ணி வைக்கிற ஆம்பளையோடுதான் பேசுவாள். வேறு யாரோடும் பேசமாட்டாள். முஞ்சியை 'உம்' என்று வைத்துக் கொள்வாள். எல்லாரும் அவளை 'உம்மணா முஞ்சி' என்று கூப்பிட்டார்கள். அப்புறம் அவள் முகம் களையிழந்து விட்டது. இருபது வயதில் எப்படி நாற்பதாகக் காட்சியளிக்க முடியும் என்பதற்கு அவள் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினாள். பிறகு அவள் அப்பா கொண்டு வந்த வரன்களெல்லாம் அவள் முஞ்சி சரியாக இல்லை, அவள் முகத்தில் மகிழ்ச்சியே இல்லை, அவள் ஒரு 'சோகை' என்று பெயர் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். சில காலம் சென்றுவிட்டது. இன்னும் அவள் ஆபீசுக்குப் போய்க் கொண்டுதான் இருக்கிறாள். தன்னோடு வேலை செய்கிறவர்கள் எல்லாம் ஏதோ சந்தோஷமாக இருப்பதைப் போலக் காணப்பட்டது. தான்மட்டும் தனித்து விடப் பட்டதைப் போலிருந்தது. அவள் வலிய ஆண்களிடம் சென்று சிரிக்க ஆரம்பித்தாள். அவர்கள் அவளைப் பார்த்துச் சிரித்தார்கள். 'சிரிப்பு' என்பது அந்தக் கதையின் தலைப்பு.

டாக்டர் வந்ததை மறந்து விட்டு நான் இப்படி ஏதோ சிந்தனைகளில் ஆழ்ந்து விட்டேன். அவரை முற்றிலும் மறந்துவிடவில்லை. அவரை உட்கார வைத்துவிட்டுத் தான் என் நினைவுகளை அது போன வழியில் விட்டுவிட்டேன்.

அவர் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் "Can I smoke?" என்று கேட்டார்.

'உங்களால் முடியும்' என்று ஆங்கிலத்தில் சொன்னேன். "You can smoke" என்றேன்.

''உங்கள் இலக்கியத்தில் too much morality! அதைப் பற்றியே பேசுகிறீர்கள். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று மிக வேகமாகச் சொல்லிவிட்டார்.

எனக்கு அது தூக்கி வாரிப் போட்டது. அது புதிய கருத்து என்பதற்காக அல்ல. நான் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரியே அவர் பேசினாரே என்பதற்காக.

''இலக்கியம் வாழ்க்கையை உணர்த்தவில்லை. ஒழுக்கத்தைப் போதிக்கிறது'' என்று அவர் மேலும் பேசினார்.

''அது நல்லது தானே'' என்றேன்.

''நேருவின் சுயசரிதையைப் படித்திருக்கிறாயா'' என்று கேட்டார்.

''எல்லாவற்றையும் எப்படி ஒருவர் படித்து வைக்க முடியும்; பார்த்திருக்கிறேன்'' என்றேன்.

"Religion is a kill joy" ''அதாவது சமயம் சந்தோஷத்தை அழிப்பது'' என்று எழுதியிருக்கிறார்.

''நல்லதுதானே'' என்று அதே பாடத்தை ஒப்புவித்தேன்''.

''உங்களுக்கு இது தான் தெரியும்; என மனைவிக்கும் அதுதான் மன நோய்'' என்றார்.

இவர் எதைப் பார்த்தாலும் நோய் என்ற கண்ணோட் டத்தில் பார்க்கிறார். என்பதைத் தெரிந்து கொண் டேன்.

“இனிமேல் மன நோயாளிகள் தாம் இந்த நாட்டில் அதிகமாகப் போகிறார்கள்” என்று ஒரு புதுச் செய்தியைச் சொன்னார்.

வெறுந்தாள் கதைப் பாத்திரம் மின்னலிட்டு என் நினைவை மீண்டும் தூண்டியது; அவனுக்கு வறுமை ஒருநோய் அல்ல, அதைப் பற்றி எண்ணிக் கவலைப் பட்டது ஒரு மன நோய்தானே என்று என்னையும் அறியாமல் நினைக்கத் தொடங்கினேன்.

மற்றொரு கதை கவனத்திற்கு வந்தது. அவர் ஒரு புராணப்பிரசங்கி. இராமாயணம் பாரதம் இந்தக் கதை களைப் பிரசங்கம் செய்வது அவர் தொழிலாக இருந்தது.

அதிலே சீதை ஒரு கேள்வி கேட்கிறாள். “இராமன் ஓகோ என்று சண்டை போட்டுவிட்டு என்னை மீட்க வருவான். அவனிடத்தில் என் கற்பை எப்படி நிறுவ முடியும். அவன் என்னை எப்படி நம்புவான்” என்று கவலைப்படுகிறாள். இவர் சீதையின் கற்பைப் பற்றிக் கதை காலட்சேபம் செய்வார். இவர் தன்னை சாட்சாத் இராம னாகவே கருதிக் கொண்டு வந்தார். வேறு எந்தப் பெண்ணையும் மனத்தால் கூட நினைப்பது இல்லை. எந்தப் பெண்ணையும் தொட வேண்டும் என்ற ஆசையும் எழுந்ததில்லை. ரொம்பக் கட்டுப்பாடாக வாழ்ந்தார். அதனால் என்ன ஆயிற்று.

அவர் மனைவிக்கு அவர்மேல் ஒரு திகப்பு ஏற்பட்டு விட்டது.

ஒரே மாதிரியான வாழ்க்கையைத்தான் கண்டாள். அவளுக்கு அவர் ரொம்பவும் தொல்லை கொடுத்தார். அவரிடம் இருந்து விடுதலை பெற வேண்டும் என்று நினைத்தாள்; வாய்ப்பே கிடையாது. அவள் கேட்ட

காலட்சேபங்களில் இராமசந்திர மூர்த்தி என்ற பெயரைத் தூக்கத்தில் உளறிக் கொட்டினாள். அந்தப் பெயரை அவள் காலட்சேபத்தில் கேட்டு வைத்திருக்கிறாள். அவள் நெஞ்சில் யாரோ குடிபுகுந்துவிட்டதை அவர் கண்டு பிடித்துவிட்டார். அவள் கற்பில் தவறிவிட்டாள் என்பதை எளிதில் கண்டுபிடித்து விட்டார். 'கற்புடைப் பெண்டிர் நெஞ்சில் பிற ஆடவர் புகார்' என்று எங்கோ படித்து இருக்கிறார். காலட்சேபத்திலும் இவர் பல முறை சொல்லி இருக்கிறார் அவ்வளவு தான்; அவளைக் 'கல்லாகப் போ' என்று சாபம் கொடுத்தார். அது பலிக்கவில்லை. அது எப்படி முடியும்.

'இந்த இருபதாம் நூற்றாண்டு சாப விமோசன காலமாயிற்றே' பெண்களுக்கு சாப விமோசனம். பிறக்கும் புது யுகம் பிறந்துவிட்டது. அவர் சாபம் பலிக்கவில்லை.

"நீ மண்ணாகப் போ" என்று சொன்னார். அவள் கல்லாகவும் மாறவில்லை; மண்ணாகவும் போகவில்லை.

அதிலே இருந்து அவர் அவளிடம் நெருங்குவ தில்லை. அவளுக்கு அதுக்கப்புறம் தான் சந்தோஷம் என்பது என்ன என்று தெரிந்தது.

இப்படி ஒரு கதை படித்த நினைவு வந்தது. ஏன் அந்தக் கதை நினைவுக்கு வந்தது என்று தெரியவில்லை. 'விமோசனம்' என்ற தலைப்பு அந்தக் கதைக்கு பெயர் கொடுக்கப்பட்டிருந்தது.

"இந்த மாதிரிக் கதைகள் இப்பொழுது நிறைய வந்து கொண்டிருக்கின்றன."

"அதைத்தான் சார் நாங்களும் எங்கள் புதுக் கவிதை யில் சொல்லுகிறோம்; சொல்லிக் கொண்டு வருகிறோம்". என்று ஆரம்பித்தார் புதுக் கவிதை வாதி வானம்பாடி.

"இலக்கியம் பழைய ஒழுக்கத் தனி மனிதப் பிரச்சனைகளைப் பேசுவது; சமுதாய வளர்ச்சிக்குத் தடை

என்பதுதான் எங்கள் கொள்கை. இந்தச் சங்கிலிகள் எல்லாம் அறுபட வேண்டும்'' என்று அவன் பேசினான்.

சரசுவதியால் சும்மா இருக்க முடியவில்லை. அவளுக்குத் தன் கணவன் சொன்னது பொருத்தமாகப்பட்டது. ''மனிதன் கொஞ்சம் சுதந்திரமாக வாழ வேண்டும். கட்டுப்பாடாக வாழ்ந்தால் என்ன பயன்'' என்பது அவள் கருத்து.

'இந்தக் காலத்துப் பெண்கள் நிறைய படிக்கிறார்கள். ஆனால் நிறைய பயப்படுகிறார்கள். ஒரு 'boy friend' கூட சினிமாவுக்குப் போவதற்கு அஞ்சுகிறார்கள். 'சோஷியல் ஒபீனியன்' அவ்வளவு தூரம் அமுகிப் போய்விட்டது. 'நட்பு என்பதே இந்த நாட்டில் யாரும் அறியாத ஒன்று மேல் நாட்டில் பேனா நண்பர்கள் இருக்கிறார்கள். அதாவது நாம் நினைப்பதை மற்றவர்களிடம் பகிர்ந்துக் கொள்ள நண்பர்கள் வேண்டும். சிறப்பாகப் பெண்களே தங்களுக்குள் கருத்துப் பரிமாறிக் கொள்வதைவிட ஆண்களோடும் சுதந்திரமாகக் கருத்தைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். அப்பொழுது தான் நாம் அறிவுடையவர்களாக முடியும்'' என்று பேசினார்.

அதற்குள் ஞானம் காப்பியை வேலைக்காரியிடம் கொடுத்து அனுப்பினாள்.

எங்கள் வீட்டில் ஒரு வேலைக்காரி இருந்தாள். அவள் வேலைக்காரியாவதற்கே பிறந்தவள் போல் இருப்பாள். சதா ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பாள். வயது அதிகம்தான் இருந்தாலும் சின்ன பெண் மாதிரி சுறுசுறுப்பாக வேலை செய்வாள். அவள் தான் கொண்டு வந்து வைத்தாள். ஞானத்துக்கு எங்களோடு பேசிப் பழகிப் பழக்கம் இல்லை.

அவள் 'ஜமாவே' வேறு. பட்டுப்புடவை; கலியாண பத்திரிகை வைக்க வரும் அலங்காரங்கள், காது குத்தி மயிர் வாங்குவதிலே இருந்து சுடுகாட்டு எல்லைவரை உள்ள

சம்பிரதாயச் சடங்குகளுக்கு அழைக்க வருவார்கள். அவர் களைப் பாய் போட்டுத் தான் உட்கார வைப்பாள். அவர்கள் குங்குமச் சிமிழ் கையோடு கொண்டு வந்து வைப்பார்கள். இவளும் போகும் பொழுது அவர்களுக்கு நெற்றியில் இட்டுக் கொள்ளச்சொல்லிக் குங்குமம் கொண்டு வந்து வைப்பாள். 'போயிட்டு வர்ரோம்' என்ற குரல்தான் அதிகமாகக் கேட்கும். திரும்ப, ''வந்து விடுங்கள் வராமல் இருந்துவிடப் போகிறீர்கள்'' என்ற குரல்கள் தாம் கேட்கும். ''இப்பொழுது மொழி விலக்கிவிட்டோம். அது ஒரே பேஜார். அவர்களுக்கும் தொல்லை. இதெல்லாம் கவனத் தில் வைத்துக் கொண்டு தான் அதை விலக்கிவிட்டோம்.'' இந்த மாதிரிப் பேச்சுகள் வரும்.

அங்கே கூடச் சீர்திருத்தம் கால் கொள்வதைக் கண்டு நான் ஆச்சரியப்படுவது உண்டு.

நான் உள்ளே சென்றேன். ''டாக்டர்; அவர்தான் சரசுவதியின் கணவர்'' என்றேன்.

''நல்லா இருக்கிறாரே'' என்று தன் அபிப்பிராயத்தை வெளியிட்டாள்.

அதாவது விதவை என்றால் அவளுக்குக் கிடைப்பது ஓட்டை ஒடைசல் செம்பு பித்தளைப் பாத்திரம் அது மாதிரி ஏதாவது இருக்கும் என்று நினைத்தாள். அதுவும் அவள் வாயாலேயே வெளிப்பட்டுவிட்டது.

''அவருக்கு என்ன ஓட்டை; மனுஷன் 'டிப் டாப்பா' நல்லா இருக்கிறார்'' என்று அவள் அவரைப்பற்றி விமரிசித் தாள்.

''அப்படியானால் வருகிறேன்'' என்று அவளும் வந்து உட்கார்ந்து விட்டாள். பொதுவாக யாரும் இல்லாத சமயத்தில் நான் தனியாக இருக்கும் பொழுதுதான் அந்த அறையை எட்டிப் பார்ப்பாள். என் அறை ஒரே குப்பையாக இருக்கும்; தபால்களைக் கிழித்துப் போட்டு

இருப்பேன். ஆபீசில் வரும் கடிதங்களை அங்குப் படிக்க நேரம் இல்லாமல் வீட்டுக்குக் கொண்டு வந்து படிப்பேன். வீட்டில் வரும் கடிதங்களை வீட்டில் நேரமில்லாமல் ஆபீசில் படிப்பேன்.

அன்று அவள் குடும்பப் பெண் என்ற கூடாரத்திலே இருந்து சமூகப்பெண் என்ற பரந்த வெளியில் அடி எடுத்து வைத்தது போன்ற உணர்வு எனக்குப்பட்டது. இது வரை உற்றார் உறவினர் பெற்றார் பெறாதவர் என்ற இந்தச் சுற்றத்தைத்தான் அவள் கண்டிருக்கிறாள். இதைப் போல இலக்கியவாதிகள் அறிஞர்கள் இடையே அவளுக்குப் பேசிப் பழக்கம் இல்லை. டாக்டர் என்றால் அவர் ஒரு மருத்துவர் மருந்து கொடுத்து விட்டுக் காசு வாங்குபவர் என்று மட்டும்தான் நினைத்து வந்தாள். அவருக்கும் ஒரு சமூகம், நண்பர்கள் இருக்கிறார்கள் இருப்பார்கள் என்பதை அவள் எப்படி அறிய முடியும்.

எப்படியோ அவளும் அன்று எங்கள் பேச்சில் கலக்காவிட்டாலும் அந்த வட்டத்தில் அவளும் ஒரு வட்டமாக அமைந்தாள்.

''இவள்தான் என் மனைவி'' என்று அறிமுகப் படுத்தினேன்.

''நீங்கள் சொல்லித்தான் எங்களுக்குத் தெரிய வேண்டுமா?'' என்று சொல்லிச் சிரித்தாள் சரசுவதி.

''இல்லை, மரபு; சம்பிரதாயப்படி அறிமுகம் செய் தேன்'' என்றேன்.

''அவருக்குத் தெரியாது; எனக்குத் தெரியும்'' என் றாள்.

''வானம்பாடி குனிந்த தலையை நிமிர்த்தவில்லை. அது அவன் பழக்கமாக இருந்தது.

சரசுவைக் கூட முகம் பார்த்துப் பேசமாட்டான். சிலருக்கு நேருக்குநேர் முகம் பார்த்துப் பேசும் பழக்கம் இருப்பது இல்லை. எங்கோ கீழே பார்த்துக் கொண்டு பேசுவதைப் பார்க்கிறேன். புதுக்கவிஞருக்குப் பழைய நாணம் அச்சம் குடிகொண்டிருந்ததைக் கவனிக்க முடிந்தது.

பொருந்தாத இடத்தில் அவள் இருப்பது போன்று உணர்ந்தாள். டாக்டரைக் கண்டால் ஒரு மரியாதை அவர் மிகப் பெரியவர் என்பதால்; சரசுவதியைக் கண்டால் வெறுப்பு, அவள் செய்யத்தகாத காரியத்தைச் செய்து விட்டாள் என்று; வானம்பாடி ஒரு வெட்டிப் பேச்சாளன் என்பது அவள் கணிப்பு.

நாங்களும் சடங்குகளுக்கு உள்ளாகி விட்டதைப் போன்ற நிலையில் இருந்தோம். சில சமயம் அந்தப் பேச்சுகளில் சம்பந்தப்பட முடியாதவர்கள் வந்து உட்கார்ந் தால் பேச்சே தொடர முடியாமல் போகிறது. ஒரு பேச்சு என்றால் அதில் அனைவரும் பங்குகொள்ள வேண்டும்; ஒட்ட முடியாதவர்கள் ஒட்டிக் கொண்டிருந்தால் அவர் களை வெட்டித் தள்ளுவதுதான் சரி என்ற எண்ணம் எழுவது இயல்பு. அது கெட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்?

சமுதாயச் சடங்கு என்பது நமக்குப் பிடிக்காதவர்கள் மத்தியில் உட்கார வேண்டும்; பேச வேண்டும் என்பது. எனக்கு ஒன்றும் கஷ்டமாகத் தெரியவில்லை. அவளுக்கு அது ஒரு பெரிய இக்கட்டாக இருந்தது.

டாக்டர் சொன்ன சித்தாந்தம் அவளுக்கு எப்படிப் புரியும். இலக்கியவாதிகள் என்றால் ஒழுக்கப் பிரச்சனை யைப் பற்றித்தான் பேசுவார்கள் என்று பேச்சைத் தொடக்கி வைத்தார்.

எங்களைப் பற்றி இவ்வளவு மட்டமான அபிப் பிராயம் இந்த உலகம் வைத்திருக்கிறது என்பது பற்றி

அப்பொழுதுதான் தெரிந்தது. ஒழுக்கம் அடிப்படை; அதை ஒரு பிரச்சனையாக ஆக்குபவர்கள் இலக்கியவாதிகள் என்பது அவர் வாதம்; அதை வேண்டாம். என்று சொல்ல வில்லை. அதையே எழுதிக் கொண்டு இருந்தால் என்ன பயன்? என்று கேட்டார்.

கலை சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டது. 'ரியலிசம்' கொஞ்சம் நேரம் பேச இடம் கொடுத்தேன்.

'இன்னும் பூவும் பிஞ்சும் ஒன்றும் இல்லையா? என்ற கேள்வியைக் கேட்டாள்.' இதுதான் தொடக்கக் கேள்வி.

அதாவது அவள் அகராதியில் திருமணமானவர்களை அப்படித்தான் அவள் விசாரித்துப் பழக்கம்.

''ஒன்றும் இல்லை. அவசரப் படவில்லை'' என்று சிரித்துக் கொண்டே பேசினார்.

''குடும்பக் கட்டுப்பாடு போல் இருக்கிறது'' என்று சொன்னாள்.

அதாவது என் மனைவி குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டாள். அதைச் சொல்லாமல் சொல்லிக் காட்டி விட்டாள். என் பிள்ளைகளைப் பற்றி இதற்கு முன் உங் களிடம் சொல்லவில்லை; சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

என் மனைவியின் சொற்படி நடக்க வேண்டியவன்; அதனால் அவர்களை கான்வென்டில் படிக்க வைத்தேன். எல்லாம் ஐந்து, மூன்று, ஒன்று அதற்கப்புறம் அவள் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொண்டாள். அதை எல் லாருக்கும் அவள் பிரச்சாரம் செய்வதை ஒரு கொள்கையாக வைத்திருக்கிறாள்.

''இப்ப இருக்கிற விலைவாசிக்கு அதிகம் பெற்றுக் கொள்ளக் கூடாது'' இது அவள் வாழ்க்கைச் சித்தாந்தம்.

அதனால்தான் "என்ன குடும்பக் கட்டுப்பாடா" என்ற கேள்வியைக் கேட்டுவிட்டாள். அவளுக்கு ஒரு ஆச்சரியம் அதாவது விதவைக்கு குழந்தை பிறக்குமா என்பதுதான் அவளுக்கு ஆச்சரியம். விதவைக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதை முதலில் அவளால் நம்ப முடியாது. அடுத்தது அவளுக்குக் குழந்தை பிறக்கும்; பிறந்தால் அவள் நிலை எப்படி உயரும் என்பதைக் காண ஆசை.

அடுத்தது "நீங்கள் இருந்து சாப்பிட்டுப் போக வேண்டும்". இவ்வளவுதான் அவளால் பேச முடிந்தது.

"அதற்கு என்ன இன்னொரு நாளைக்கு வருகிறோம்." அது அவர்கள் தந்த சம்பிரதாயமான பதில்.

அதற்குமேல் அவளால் எங்களோடு இருக்க முடியவில்லை.

அதற்குள் வேலைக்காரி வந்து அவளைக் காப்பாற்றினாள் "பால் எங்கேம்மா வச்சிங்க" என்ற கேள்வியைக் கேட்டுக் கொண்டே வந்து அழைத்தாள்.

"இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிக் கொண்டே வெளியேறினாள். எங்களுக்கு உட்காரத் தாராளமாக இடம் கொடுத்ததைப் போன்ற உணர்வு எழுந்தது.

அப்புறம்தான் எனக்கும் கொஞ்சம் தாராளமாக இருக்க முடிந்தது.

அவரே பேசத் தொடங்கினார். "இது ஒரு பெரிய 'நியூசன்சாகப்' போய்விட்டது. ஒவ்வொருவரும் குழந்தை எங்கே என்று கேட்கிறார்கள்."

"குழந்தை இல்லாமல் சந்தோஷமாக இருக்கமுடியாது என்று மனித மனம் நினைக்கிறது. அப்படிப் பழகி விட்டோம். அதுக்குத்தான் நமக்குச் சமூக உணர்வு ஏற்பட

வேண்டும். சமுகத்தில் பழகிவிட்ட பிறகு நாம் சமுகத்துக் காக வாழ்கிறோம். என்ற எண்ணம் வளர்ந்தால் இந்தக் குடும்ப பந்த பாசங்கள் தாமாக நீங்கிவிடும். மனிதன் அப்பெழுதான் முழு மனிதனாக வாழ முடியும். இப் பொழுது 'அரை மனிதர்களாகத்தான் வாழ்ந்து கொண்டிருக் கிறோம். அதாவது வீட்டு அறையில் வாழும் மனிதர் களாகவே வாழ்ந்து பழகிவிட்டோம். 'Social habits' இருக்க வேண்டும்'' என்று அவர் ஒரு குட்டிப் பிரச்சாரம் செய்தார்.

''நாங்கள் குழந்தைகளுக்காக அவசரப்படவில்லை'' என்று சொல்லி முடித்தார்.

''நாம் அவசரப்படுவதில்லை. குழந்தைகள் அவசரப் பட்டு விடுகின்றன'' என்று வானம்பாடி தன் புதுக் கவிதைப் போக்கில் இக்கருத்தை வெளியிட்டான். அந்தக் கருத்தை நினைத்து நினைத்துப் பார்க்கின்றேன். குழந்தை கள் அவசரப்படுகின்றன இந்த உலகத்தைக் காண வேண்டும் என்று. இந்தக் கருத்துப் புதுமையாக இருந்தது.

''இந்த உலகம் புதுமைக்கு வரவேற்புக் கொடுக்கிறது; பழமைக்குச் சாவுமணி அடிக்கிறது. இதைப் பலர் உணர் வதில்லை'' என்று மேலும் வானம்பாடி வேகமாகப் பேசி னான். ''ஆனால் புதுமை பழமையை வேகமாக அழிப்ப தில்லை; மெல்ல அழிக்கிறது. இதுதான் உண்மை என்றான்.''

அதற்குள் நான், ''பழசில் நல்லது இருந்தால் அதை வாழ்விக்க வேண்டும்'' என்று சமாதானம் கூறினேன்.

☆ ☆ ☆

# [4]

அன்று கூட்டம் கலைந்தது; கூட்டம் ஒத்தி வைக்கப் படவில்லை. மறுபடியும் எப்பொழுது கூடுவது என்பதைப் பற்றி நாங்கள் எண்ணிப் பார்க்கவில்லை. அந்த மாதிரி கூட வேண்டுமென்றால் என் அறையில் தொலைபேசி எனக்கு மிக அருகில் இருந்தது. அதாவது என் மேஜை மேல் இருந்தது. சரசுவதி டாக்டர் மனைவி. டாக்டருக்குத் தானே முதல் இடம் தருகிறார்கள்; தொலைபேசி வைக்க; அவள் திடீர் என்று நினைத்துக் கொண்டால் 'போன்' அவள் ஒலியை எழுப்பும். 'கணீர்' என்று கேட்கும்பொழுது அவள்தான் பேசுவாள் என்று தெரியும். எனக்கு அவளிடம் பேசுவதில் தனி இன்பம். ஏன் என்று தெரியவில்லை. வாய்ப்பு இருந்தால் அவள் என்னைத் தான் மணம் செய்து கொண்டிருப்பேன் என்ற சொற்கள் இன்னும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. என் நெஞ்சு மிகவும் வன்மையான நெஞ்சு. எது நல்லதோ அதைப் பற்றிக் கொள்கிறது. இதையெல்லாம் மனிதனின் பல வீனங்கள் என்று சொல்லுகிறார்கள். அந்தக் கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்தப் பல வீனங்களில் தான் மனிதனே வாழ்கிறான் என்பது என் எண்ணம்.

சமுதாயம் இது தப்பு என்று நினைக்கிறது. அதைப் பொருட்படுத்தாமல் இந்த மாதிரி எண்ணங்கள் தோன்றி னால், அதைத் தொடர்ந்தால் அது எப்படி பலவீனமாகும். சமுதாயத்துக்கு அடிபணிந்தால்தான் பலவீனம்.

ஆரம்பத்தில் அவளைப் பற்றி அறிமுகப்படுத்தியிருந் தேன். அவள் விதவையாக நீடித்து இருக்க வேண்டியது இல்லை. எப்படியும் அவள் தனித்து வாழ முடியாது.

யாராவது அவள் அழகில் மயங்கித்தான் ஆக வேண்டும். சிலர் மேலோட்டமாக எட்டிப் பார்க்கிறார்கள். சிலர் எட்ட நின்று ரசிக்கிறார்கள். நான் அவள் பேச்சில் மயங்குகிறேன். அதைவிட அவள் சிரிப்பில் மயங்குகிறேன்.

"பெண் என்றால் சிரிக்க வேண்டும்;
இல்லாவிட்டால் அவள் எப்படிப் பெண்ணாவாள்?
பேயும் தான் சிரிக்கிறது; அது கோரச் சிரிப்பு;
இப்பொழுது சிரிக்கா விட்டால்
அவள் எப்பொழுது சிரிக்கப் போகிறாள்?
கிழவியாகிய பிறகா?"

அவள் எப்பொழுதும் சிரித்துக் கொண்டுதான் இருப்பாள். என் உள்ளத்தில் அது இனிய கானமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. சிரிப்புக்கு இவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்பது அவளிடம்தான் காண முடிந்தது.

அவள் என் ரசிகை என்கிறாள். உண்மையில் நான் அவள் ரசிகன். இலக்கியம் எங்களை இணைக்கிறது; வாழ்க்கை எங்களைப் பிரிக்கிறது. கற்பனை எங்களை உயர்த்துகிறது. உண்மை எங்களைத் தாழ்த்துகிறது, இப்படி ஒரு உலகம் இருக்கிறது என்பது பலபேருக்குத் தெரியாது.

உறவு என்றால் உடல் உறவு என்றுதான் இந்த உலகம் நினைத்து வந்தது. உணர்வுகளால் ஒன்றாவதும் உறவு என்பதை இதுவரை யாரும் கூறியது இல்லை; நானும் அறிந்தது இல்லை.

"ஆசை, அன்பு, பாசம்" என்ற கதையை அவள் ஏன் ரசித்தாள். அதில் அவள் ஒன்றிவிட்டாள். தன் கணவனை அவள் இந்த மூன்று சொற்களால் அலசிப் பார்த்தாள். அவர் முதற்படியில் இருக்கிறார். என்றும், தான் இரண்டாவது படியில் இருப்பதாகவும் கூறினாள். பாசத்தின் வலையிலும் அவள் சிக்கிக் கிடப்பதாகச் சொல்கிறாள். இம்மூன்றையும்

சேர்த்து அவள் அதைக் காதல் என்று தானே சொன்னாள். அவள் அப்படிச் சொல்லவில்லை. உறவு என்றுதான் சொல்வாள்.

கணவன் மனைவியருக்குள் உறவு இருக்கிறது. ஆனால் அதைக் காதல் என்று கூற முடியாது. மக்களிடத்திலே கொள்வது காதல்; 'கடந்த ஞானியரும் கடப்பரோ மக்கள் மேல் காதல்' என்று யாரோ எங்கோ பாடி இருக்கிறார்கள். தசரதன் கைகேயிடத்துக் கொண்டது உறவு; மகனிடத்தில் கொண்டது காதல்; இராமனைப் பிரிந்துவிட்டு அவனால் வாழ முடியவில்லை. பாசம் என்பது தாயிடத்தில்தான் ஏற்படுகிறது. அன்புமனைவி என்றுதான் கூறுகிறார்கள். பாசமுள்ள மனைவி என்று கூறுவது இல்லை. 'தாய்ப்பாசம்' என்றுதான் கூறுகிறார்கள். அதனால் பெண் பாசம் என்ற நிலையை மகனிடத்தில் தான் காண முடிகிறது. கணவனிடத்தில் காண முடிவதில்லை. அவள் தான் இரண்டாவது நிலையில்தான் இருப்பதாகச் சொன்னாளே தவிர மூன்றாவது நிலையை எட்டிப் பிடித்ததாகக் கூறவில்லை. அவளுக்கு என்னிடம் பாசம் இருந்தது என்பதைக் காண முடிந்தது. அது அவள் என் சமூகக் கொள்கையில் கொண்டிருந்த ஈடுபாடு என்றுதான் நினைக்கிறேன். ஆசையையும் அன்பையையும் தன் கணவனுக்குத் தந்துவிட்டாள். என்றுதான் கூறமுடியும்.

அதே போலத்தான் நான் என் மனைவியிடம் ஆசை வைத்திருக்கிறேன். அன்பும் கொண்டு இருக்கிறேன். "பாசம்" என்பது முழுமையாக வைக்க முடியவில்லை. அவளும் தன் குழந்தைகள் மீதுதான் அந்தப் பாசத்தைக் காட்டுகிறாள். என்னோடு உறவு என்ற எல்லைக்குள் நின்று இந்த உலகத்தைப் பார்க்கிறாள். அந்தச் சின்ன உலகத்தில் இந்த மூன்று நிலைகளையும் காண்கிறாள். இந்த மூன்றாவது நிலையை நான் வெளியே காண்கிறேன். சரசுவதியும் என் னோடு சேர்ந்து அவள் பாசத்தை இலக்கியப் படைப்பில் செலுத்துகிறாள்.

சரசுவதிக்காகவே நான் ஒரு முழு எழுத்தாளன் ஆக வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. ''எழுத்தாளன் ஆக வேண்டுமானால் முதலில் உங்கள் பெயரைக் குறைத்துக் கொள்ள வேண்டும். வாங்கிய கல்லூரிப் பட்டங்களை மறந்துவிட வேண்டும். பத்திரிகை ஆசிரியர் என்பதைப் போடக் கூடாது. நீங்கள் யார் என்பதை உங்கள் எழுத்தில் விளம்பரப்படுத்தக் கூடாது. சுருக்கமாக ஏதாவது புனை பெயர் வைத்துக் கொள்ளச் சொல்கிறாள். அதாவது அதில் உங்கள் ''சொந்தத்துவம்'' இருக்கக் கூடாது'' என்று கூறுகிறாள்.

சிலர் பேராசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எழுதத் தொடங்கினால் அந்த நினைப்பு அவர்களை விட்டு அகலாததால் உலகத்துக்கு உபதேசம் செய்து விடுகிறார் கள். அவசியமில்லாமல் திருக்குறளை ஒப்புவிக்கிறார்கள். இல்லாவிட்டால் தாயுமானவரைக் கூப்பிடுகிறார்கள். அல்லது பழந்தமிழ் இலக்கியக் கோட்பாடுகளைப் புகுத்து கிறார்கள். அல்லது சீர்திருத்தம் என்ற பெயரில் மேனாட்டு ஆசிரியர்களை இழுக்கிறார்கள். ஏன் இவ்வாறு செய்கிறார் கள்? அவர்கள் பேராசிரியர் என்ற நினைப்போடு எழுது வதால் தான். அதை முதலில் மறக்க வேண்டும் என்று கூறுகிறாள்; அதைத்தான் அவர் "too much morality'' என்ற சொல்லால் குறிப்பிட்டார். அதே கருத்தை அவளும் வழி மொழிந்தாள் அவர்கள் வாழ்க்கைப் பிரச்சனைகளில் கருத்து வேறுபட்டாலும் இலக்கியப் பிரச்சனையில் ஒன்றுபட்டு அணுகியது எனக்கு வியப்பாகத்தான் இருந்தது.

இலக்கியம் ஒழுக்கப் பிரச்சனையை வாதிக்கக் கூடாது; ஆனால் அதை வற்புறுத்தலாம். அதுதான் எனக்கு ஏற்பட்ட தெளிவு. அதையே மையமாக வைத்து எதையும் எழுதக் கூடாது. சிந்தனைகள் மிக்கு இடம் பெறவேண்டும். பிறரைச் சிந்திக்கத் தூண்ட வேண்டும். அதுதான் இலக்கியம் என்ற எண்ணம் அவர்களோடு பேசியதிலிருந்து வெளிப் பட்டது.

வாழ்க்கையின் அர்த்தம் என்ன? இதைத்தான் முதலில் தொடங்கினேன். அவளும் எனக்கு மனம் சரியாக இல்லை என்று கூறினாள். அவள் வாழ்க்கையின் அர்த்தத்தை என்னிடம் காண முயற்சித்தாள், நான் அவளிடம் காண முயல்கிறேன். இருவரும் அதன் விடையை இந்தச் சமுதாயத்தைப் பார்த்துக் கேட்கிறோம். அது வெறுந்தாளைக் காட்டுகிறது.

'வெறுந்தாள் என்ன விடைத்தாள் தான் ஆட்டுமே அது வினாத்தாளுக்கு விடைத்தாள் ஆகுமேயன்றிப் பசித்தாளுக்கு உதவுமா' என்ற கேள்வியைத்தான் நானும் கேட்கும் நிலையில் இருக்கிறேன். இந்த நாட்டு மக்களின் 'பசி' என்ன? அந்த வினாவுக்கு நாங்கள் விடை காண முயன்றோம், அதைத் தான் விமரிசனம் என்று அழைத்தோம்! இலக்கிய விமரிசனம் என்ற தலைப்பை அதற்குத் தந்தோம். இந்த வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன? வாழ்வுப் பிரச்சனைக்கு விடை என்ன? இந்த வினாக்களுக்குத் தான் பதில் தேடுகிறோம்.

அவள் என்னிடத்தில் எழுத்து இருக்கிறது என்று நினைக்கிறாள். பரிசு பெற்ற கதை; அதுதான் என் முதல் நாவல். அதைப் படித்துப் பார்த்தாள். அதற்கப்புறம் தான் அவள் என்னை மதிக்கத் தொடங்கினாள்;. என்னைச் சமுதாய எழுத்தாளன் என மதிப்பிடத் தொடங்கினாள்.

நான் பத்திரிகை ஆசிரியனாகப் பணி செய்வதை அவள் ஒப்புக் கொள்ளவில்லை. அதை யார் வேண்டுமானாலும் செய்யலாம். நீங்கள் விமரிசனம் செய்ய வேண்டும் என்றாள். நான் எழுத வேண்டும் என்று சொல்லாமல் விமரிசனம் என்ற தலைப்பில் ஒரு பத்திரிகை தொடங்க வேண்டும் என்று கூறுகிறாள்.

"நான் உங்களோடு பழகுவது ஒரு பத்திரிகை ஆசிரியன் என்ற முறையில் அல்ல; நான் ஒரு ரசிகை;

உங்களிடத்தில் நல்லது இருக்கிறது. அதை ரசிக்கிறேன். நீங்கள் இந்தச் சமுதாயத்துக்குக் கொடுக்க வேண்டியது நிறைய இருக்கிறது. அந்த ஆற்றல் உங்களிடம் இருக்கிறது. அதைத் தட்டி எழுப்பவே உங்களைச் சந்திக்கிறேன். அதற்காகத் தான் இந்த இலக்கிய வட்டம்'' என்று பேசினாள்.

''நான் உண்மையில் அவள் அழகை ரசிக்கவில்லை. அந்த உரிமை எனக்கு இல்லை என்பது தெரியும். அது டாக்டருக்குச் சொந்தம். அந்தப் புற அழகு எனக்கு இப்பொழுது தேவை இல்லை. இந்த உலகத்தை அழகு உடையதாக ஆக்க வேண்டும் என்ற துடிப்பு என்னிடம் இருப்பதை உணர்ந்தாள். அதைத்தான் இதுவரை கலை ஞர்கள், எழுத்தாளர்கள் வற்புறுத்தி வந்தார்கள். எங்கோ படித்திருக்கிறேன். அழகு படுத்தாவிட்டாலும் அசிங்கப் படுத்தாதே என்பது பிரபல எழுத்தாளர் ஒருவருடைய கூற்று என்ற நினைக்கிறேன். அந்த லட்சியம் என்னிடம் இடம் பெறவில்லை. ' உலகை அழுகை ஆக்காதே. அதை மகிழவை' என்பது தான் என் எழுத்தின் ஓட்டம் என்பதை அவள் எனக்கு உணர்த்தினாள்.

'வெறுந்தாள்' என்ற கதையின் விமரிசனம் அது தானே! அவன் ஏன் வெறுந்தாளைத் தந்தான். வெறுந்தாள் என்ன விடைத்தாள் தான் தரட்டுமே. அது பசித்தாளுக்குச் சோறு போடாது. இந்தக் கல்வித் திட்டம் நாட்டுக்குப் பயன் படாது. படித்த பிறகு அவர்களிடம் தரப்படுகின்ற தாளுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுகிறது என்பதுதான் இன்றைய உணர்வு. அந்த வெறுந்தாள் பசித்தாளுக்குச் சோறு போடாது; போடவில்லை என்ற கருத்தையாவது எழுதி வைக்க வேண்டும் என்ற துடிப்பை எனக்கு எழுப்பி யதே அந்த வெறுந்தாள் கதைதானே.

அவன் தன் கடமையை உணரவில்லை. சோர்வு அவனை வேதனைக்குள் ஆக்கிவிட்டது. அவனால் படிக்க

முடியவில்லை. படிக்க முடியாதவர்கள் எல்லாம் படிக்க வருகிறார்கள். ஏன்? படித்தால் முன்னுக்கு வரலாம் என்று. எப்படியோ இந்தக் கருத்து நாட்டில் பரவிவிட்டது. அதை இன்னும் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் வியப் பாக இருக்கிறது.

பல்கலைக் கழகப் பட்ட விழாக்களில் படிக்கப்படும் பேச்சுரை என்ன? கல்வியின் பெருமையைக் கூறுகிறது. ஒழுக்கத்தின் சீலத்தைப் பற்றிப் பேசுகிறது. அதனால் வேலை கிடைக்கும் என்பதை மட்டும் கூற மறுத்து விடுகிறது. இனிமேல் பட்டங்களைப் பின்னால் போட்டுக் கொள்ள இளைஞர்கள் வெட்கப்படும் நாள் தூரத்தில் இல்லை என்ற எண்ணம் எப்படியோ எழுந்துவிட்டது. வேலை தர இயலாத தாள். அது எதற்குப் பயன்படும். அழகாக அச்சிடப்பட்டுள்ளது. வாழ்க்கையை அழகு படுத்தப் பயன்படலாம். போட்டோக்கள் எடுக்கலாம். 'கல்வி அழகே அழகு' என்று அதை வைத்து அழகு பார்க்கலாம். ஆனால் அது அடுப்பு எரிக்கவும் பயன் படாது என்ற உணர்வு இந்த நாட்டில் எழத் தொடங்கிவிட்டது; 'பத்து வருஷமா! பன்னிரண்டு வருஷமா! பருவத் தேர்வா! முழுத் தேர்வா! இந்த ஆராய்ச்சியில் தான் மண்டையை உருட்டிக் கொள்கிறார்கள் தவிர படித்த பிறகு அவர்களுக்கு வாழ்க்கை என்ன என்று யார் சிந்திக்கிறார்கள்? ஏன் சிந்திப்பதில்லை. இந்த எண்ணங்களை அந்த 'வெறுந்தாள்' எழுப்பியது.

இன்று பல திரைப்படங்கள் விமரிசிக்கப் படுகின்றன. இலக்கியங்களுக்கு விமரிசனம் இல்லை. திரைப்பட விமரிசனம் எதைச் சுற்றிச் சுழல்கிறது? நடிப்பு, ஒலி, ஒளி, டைரடக்டர்; கதை என்று வரும்பொழுது கைவிரிப்பு; விட்டு விடுகிறார்கள். 'கதை என்றால் என்ன? வாழ்வின் விமரிசனம் தான் கதை. பிரச்சனைகளுக்கு விடைதான். அதை யாராலும் சொல்ல முடிவதில்லை.

குறைகளைக் காட்டி விடலாம். எது வழி? முடிவு என்ன? அதைப் பற்றிச் சொல்பவன் தான் எழுத்தாளன். புவனா ஒரு கேள்விக் குறி; அதற்கு விடை என்ன? திரைச் சீலை வெறுந் திரையைத்தான் காட்டுகிறது. வெறுந்திரை எனக்கு வெறுந்தாளை நினைவுபடுத்துகிறது.

ஞானம் சொல்கிறாள்! இலக்கியத்தை விமரிசனம் செய்யலாம்; வாழ்கையை விமரிசிக்கக் கூடாது என்று. அதாவது கணவனைப் பற்றி விமரிசிப்பது குடும்பப் பெண் களுக்கு அழகு அல்ல என்பது அவள் கருத்து. விமரிசிக்கப் படுகிற பொருள் எல்லாம் இலக்கியத்தில் படைக்கப் படுகின்றன. மனிதர்களும் விமரிசனத்துக்கு உள்ளாக வேண்டியவர்கள் தானே. வாழ்க்கை வேறு இலக்கியம் வேறு என்ற வேறுபாட்டை என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை.

வானம்பாடியிடத்தில் ஒரு துடிப்பு இருக்கிறது. பழமையை அடியோடு இடித்துத் தள்ளுகிறான்; புதிய பிரச்சனைகளைக் காட்டுகிறான். ஆனால் அவனும் விடை தர முடியவில்லை. வினாக்களை எழுப்புவதுதான் புதுக் கவிதை.

'கடற்கரையிலே கண்ணகிக்குச் சிலை; நடை பாதை யிலே பெண்ணுக்கு விலை' இப்படி ஒரு கவிதை. அவன் ஏன் அதை எழுதிக் கெண்டு வந்து தருகிறான். அவன் என்ன நினைக்கிறான்.

''உங்கள் முயற்சி, படிப்பு, பாராட்டு இதெல்லாம் ஏன் பழமைக்குச் செல்கிறது? செத்து மடிந்தவர்களுக்குச் சிங்காரச் சிலை வைத்தால் என்ன பயன்? வாழத் துடிப் பவர்க்கு வழி வகுக்காத நாட்டில் செத்தவர்களுக்குச் சிலை. சிலை வைப்பதிலேயும் பொருள் இருக்கிறது. அது மனிதனைப் போலச் சோறு கேட்காது. அது கல்லாகவே

நின்றுவிடுகிறது. அதனால்தான் வைக்கிறீர்களா'' இத அவன் கேள்வி.

அந்தப் புதுக் கவிதையில் நான் ஆழ்ந்து கிடந்தேன்; என் கற்பனையைக் கலைக்க வழக்கம் போல் என் நிகழ் காலம் என் அறைக்கு வாந்தாள். அதுதான் என் மனைவி ஞானம்.

அவள் இந்தச் சமுதாயத்தின் நிகழ் காலமாகக் காணப் பட்டாள். குடும்ப உணர்வால் ஞானத்தோடும் ஒன்றினேன். சமுதாய உணர்வால் வேறுபட்டேன். அவளை எவ்வாறு இழுத்தாலும் மேலே வரமாட்டாள். அதே போல் சரசுவதி யைக் குடும்பத்துள் அடைத்து வைக்க முடியாது என்பதை அவள் பலமுறை வெளிப்படுத்திவிட்டாள்.

'கடற்கரையைக் கடக்கச் செல்லும் சுரங்கம் பகலில் நடைபாதை; இரவில்?'' இப்படி ஒரு கேள்வி கேட்டு வைக்கிறான் புதுக்கவிஞன்.

இது இந்த உலகம் காண முடியாத காட்சி; அடி உலகில் என்ன இருக்கிறது என்று யாரும் காண முயல் வதில்லை. அதை அவன் காண முயல்கிறான். வெளிச் சாயம் பூசினால் போதுமா? இதுதான் அவன் எழுப்பும் கேள்வி 'தாஜ்மகால்' ரசித்துக் கொண்டிருந்தால் பசித்துக் கொண்டிருப்பவனுக்கு யார் ரொட்டித் துண்டு கொடுப்பது? காந்தியின் புன்னகையில் ஏழையின் அழுகையை ஒழிக்க முடியுமா. இது அவன் கேட்கும் கேள்வி. அவனும் எங்கள் வட்டத்தை அணுகுவது ஏன்? சரசுவதியின் அழகைக் கண்டு அல்ல; அவன் அவளைத் தலை எடுத்தும் பார்க்க மாட்டான். அவளும் இலக்கியம் என்ற கண்ணாடியைத் துடைக்கிறாள். வாழ்க்கையின் அர்த்தம் என்ன என்ற கேள்வியைக் கேட்கிறாள்.

டாக்டர் அவரால் நோய்தான் காண முடிகிறது. அவர் ஆரோக்கியத்தை எப்பொழுதும் கண்டது இல்லை.

இலக்கியம் நோயைக் காட்டுகிறது. அதோடு நிற்பதில்லை, ஆரோக்கியமாக வாழ வழிவகையும் செய்கிறது' இதுவரை தனி மனிதன் எப்படி ஆரோக்கியமாக வாழ்வது என் பதற்குத் தான் பதில் சொல்லி வந்தது. அதைத்தான் அவர் "Too much morality' என்று மேற் போக்காகக் குறிப்பிட்டார். சமுதாய நலனைப் பற்றி எண்ண வேண்டும் என்பதுதான் அவர் சுட்டிக் கூறியதன் கருத்து. சமுதாயத்தில் நொண்டி, முடம், கூன் எல்லாரும் தான் வாழ்கிறார்கள். அதனால் அவர்களை ஒதுக்க முடியுமா! வெறும் தனிமனிதரின் குறைகளைச் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? சமுதாய உணர்வு பெறுவதில் தான் எங்கள் இலக்கிய வட்டம் செயல்படத் தொடங்கிவிட்டது என்பதை உணரத் தொடங்கினேன். இந்த அடிப்படையில் தான் சரசுவதியும் தன் கணவனை விமரிசனம் செய்தாள். ஏதாவது எழுதிப் பரிசு பெறும் எழுத்தாளனை அவள் மதிக்க மறுந்து விட்டாள். அதில் சமுதாய நலனைத்தான் எதிர்பார்க்கிறாள். நோயாளியின் நோயைக் குணப்படுத்தட்டும்; அதற்கு வாங்கும் கட்டணத்தைப் பற்றி ஏன் பேசுகிறாய் என்ற கேள்வியின் அர்த்தம் அது தான். கதை எழுதிய உடனே அது அழகாக இருக்க வேண்டும்; பரிசு பெறவேண்டும் என்று நினைப்பது தவறு என்பது அவள் கருத்து.

பரிசு பெற்றவுடன் எழுத்தாளனின் தொண்டு மங்கி விடுகிறது. டாக்டர் Fees ஐப் பற்றிக் கவலைப் படக்கூடாது; நோயைத் தீர்ப்பதில் தான் கவனம் செலுத்த வேண்டும் என்பது அவள் செய்த விமரிசனம். தன் கணவனுக்குச் சமுதாய உணர்வு இருக்க வேண்டும் என்று நினைக்கிறாள். அவள் லட்சியப் பெண். அவர் அவளைக் குடும்பப் பெண்ணாக ஆக்க முயற்சி செய்கிறார். வாழ்வின் சுக போகங்கள் என்ற மாயையைக்காட்டி அவள் பார்வையை மட்டம் தட்டப் பார்க்கிறார். அவள் சமுதாயத்திடம் கொண்ட பாசம் மகத்தானது. உயர்ந்த கருத்துகளால் இந்த நாட்டிலே ஒரு புதிய எழுச்சி உண்டாக வேண்டும் என்று

துடிக்கிறாள். அதை இலக்கிய விமரிசனம் என்று கூறு கிறாள். வெறும் விமரிசனம் போதாது படைப்பும் வேண்டும் என்றும் வற்புறுத்துகிறாள். என் கதைப் படைப்புத் திறனைக் கண்டு வியக்கிறாள். நொண்டியின் கதையை வைத்து மனித சமுதாயத்தைச் சித்திரித்துக் காட்டிய கதையைப் படித்து அவள் என்னைப் பாராட்டி னாள். என் எழுத்தாற்றலைத் தட்டி எழுப்ப வேண்டும் என்ற ஆவலால் தான் அவள் என்னிடம் பாசம் கொண்டாள். அதனால் அவள் என் ரசிகை ஆனாள்; அவள் என் சிந்தனையைத் தூண்டுவதால் நான் அவள் ரசிகன் ஆனேன். இதை இந்த 'ஞானத்தால்' அறிய முடியவில்லை. அவள் அழகாக இருப்பதால் அவளுக்கும் எனக்கும் உறவு ஏற்பட்டுவிடும் என்று இந்த ஞானம் அஞ்சுகிறாள். ஞானத்தின் எல்லை அது. நான் என்ன செய்ய முடியும்? அவர்கள் போன பின்பு என் நினைவுகள் இவ்வாறு அலைமோதித் தெளிவு பெற்றன.

## [5]

நான் இலக்கியம் படைக்க வேண்டும் என்பது சரசுவதியின் விருப்பம். கலைமகள் அவ்வாறு நினைத்தால் நாம் என்ன செய்ய முடியும். புதுக் கவிதை படைக்க வேண்டும் என்பது வானம்பாடியின் ஆசை; அவள் எப் பொழுதும் தன் பக்கத்தில் இருக்க வேண்டும் என்பது டாக்டரின் ஆசை; நிலையான பத்திரிகைத் தொழிலை விடக் கூடாது என்பது என் மனைவியின் பிடிவாதம்.

எழுத்தாளனுக்கு எழுதுவதற்குப் புதிய அனுபவங் கள் தேவை; புதிய பிரச்சனைகள் தேவைப் படுகின்றன. பிரசுரிக்காத கதைகளும் எழுதிக் கிழித்த குப்பைகளும் தான் என் அறையில் இருந்தன என்பதை முன்னர்க் குறிப்

பிட்டேன். பத்திரிகை ஆசிரியர் என்பதால் பிரசுரிக்காத கதைகளும், எழுத்தாளர் என்பதால் குப்பைகளும் தான் நிறைந்தன.

பத்திரிகைத் தொழிலை ஏன் விடவேண்டும். இது ஒரு பக்கம்; அதைவிட்டால்தான் முழு எழுத்தாளன் ஆக முடியும். இது மறுபக்கம்; பத்திரிகைக்கு எழுதுவது வேறு; கதைக்கு எழுதுவது வேறு. இன்றைய தினம் எழுத்து திசை மாற வேண்டும். கதையை எடுத்துப் போடுவது எப்படி என்பதில் ஆழாமல் கதையை இயக்குவதில் ஆழ வேண்டியிருக்கிறது, என் எதிர்காலத்தில் எழுத்தில் எதை எடுத்து எழுதுவது? 'வெறுந்தாள்' தீட்டிய மாணவர் பிரச்சனையையா? 'பிறவிக் குருடன்' தீட்டும் உணர்வுப் பிரச்சனையையா? 'சிரிப்புத்' தீட்டிய சமூகப் பிரச்சனையையா? 'விமோசனம்' தீட்டும் ஒழுக்கப் பிரச்சனையா? எந்தக் கதையை வெளியிட்டாலும் விமரிசனங்கள் ஆதரவாக வருவது இல்லை. கடுமையாக விமரிசிக்கிறார்கள். 'பிறவிக் குருடன்' கதையை வெளியிட்டால் இது ஒரு கதையா என்ற கேள்வி எழும், அவன் பிறக்கும் போதே குருடன்; அவன் இந்த உலகத்தின் ஒளியையே கண்டது இல்லை. அவனுக்கு இந்த உலகம் ஒரே இருட்டு மயமாகத் தென்பட்டது. ஒளி என்றால் என்ன என்பதை அறியாமல் வாழ்ந்துவிடுகிறான். அந்தக் கதை உருவகமாக ஓர் உண்மையைத் தீட்டித் தந்தது. இந்த உலகத்தில் இன்பம் என்பது என்ன என்றே தெரியாமல் கோடிக் கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். வாழ்க்கை அவர்களுக்கு ஒரே இருட்டாக இருக்கிறது. அவர்கள் எங்காவது ஏதாவது தட்டுப்படுமா என்று பார்க்கிறார்கள். வறுமை ஒரு கொடிய நோய் என்பதை உணர்கிறார்கள். அதிலே இருந்து விடுபட முடியாது என்பதை நன்றாக உணர்ந்தவர்கள். அவர்கள் யாரையும் நோவது இல்லை. எல்லாம் விதி என்று கூறி அமைதி கொள்கிறார்கள். அவர்கள் பிறவிக் குருடர்கள் என்ற கற்பனையை எனக்குத்

தந்தது. சமுதாயத்தில் பலர் எதையும் எதிர்க்காமல் இவ்வளவுதான் என்று எடுத்துக் கொண்டு வருகிறார்கள். கண் பெற்று வாழ்கிறார்கள் என்றால் அவர்கள் அதிருஷ்டவாதிகள் என்பது இந்தக் குருடர்களின் சித்தாந்தம்.

'வெறுந்தாள்' அது இன்றைய சமுதாயப் பிரச்சனை! மாணவனுக்கு எதிர்காலம் நம்பிக்கை தரவில்லை. அவன் தேர்வில் எழுதும் விடைத்தாள்கள் வெறுந்தாள்கள் ஆகின்றன. அந்த அறிவுத் தேர்வு வெற்றி தோல்வியைத் தருகிறது. ஆனால் வாழ்க்கையில் ஒளி காணவில்லை. படித்தால் வேலை கிடைப்பது என்பது பழங்கதையாகப் போய்விட்டது. இன்று அது முயற்கொம்பாகிவிட்டது. இதைத்தான் அந்த வெறுந்தாள் காட்டுகிறது. அது இன்னும் சிறப்பாக எழுதப்பட்டிருக்கலாம். அவன் தவறைக் சுட்டிக் காட்டி அவன் வெறுந்தாள் தந்தான் என்று கூறுவதை விட அவன் கஷ்டப்பட்டுப் படித்தான். இரவும் பகலும் படித்தான். போட்டி போட்டுக் கொண்டு படித்தான். நகையை விற்றுப் படித்தான் அல்லது மார்வாடிக் கடையில் வைத்துப் படித்தான் என்று எழுதியிருக்கலாம். ஆனால் அந்த சர்ட்டிபிகேட்டை வைத்து யாரும் நம்பிக் கடன் கூடத் தர மறுத்துவிட்டார்கள். ஏன் படித்தோம். என்ற கேள்வியைத்தான் அவன் கேட்டுக் கொண்டிருந்தான். வாங்கும் போது அது நீண்டு கிடந்தது. பிறகு அதைச் சுருட்டி வைத்தான். பின் அதைப் பிரித்துப் பார்க்கத் தேவையே இல்லாமல் போய்விட்டது. "சுருட்டி வைத் தான் மறுபடியும் பிரிப்பதற்கே வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அது வெறுந்தாளாக ஆகிவிட்டது" என்று எழுதி இருக்கலாம். அழகான தலைப்பைத் தவறாகப் பயன்படுத்திவிட்டதைப் போன்ற உணர்வு தான் எழுகிறது. அதனால் தான் அதைப் பிரசுரிக்க முடியாமல் போய் விட்டது.

அது தனிப்பட்டவன் செய்த தவறைச் சுட்டிக்காட்டி எழுதப்பட்ட கதை; அது சமூகத்துக்குப் பயன்படாததால்

அது 'வெறுந்தாள்' என்று குப்பையில் போட்டு வைத்தேன். அதில் சமூகப் பிரச்சனை அடங்கி இருக்க வேண்டும் சமூக உணர்வைத் தட்டி எழுப்பும் கதையாக அமையவில்லை. இது இப்பொழுது பிரசுரிக்க முடியாத வெறுந்தாளாகத் தான் நின்றுவிட்டது.

'சிரிப்பு' என்பது ஓர் அவல உணர்வைத் தீட்டும் அழகிய கதை. அது இன்றைய மணமாகாத கன்னிகளின் சோக வாழ்வைத் தீட்டும் அதி அற்புதமான கதையாகப் பட்டது. பெண் இன்று புதுமைக்கும் பழமைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருக்கிறாள். அவள் ஆடவர்களைப் போலப் படிக்க, தொழில் செய்ய உரிமை பெற்று இருக்கிறாள். ஆனால் வாழ உரிமை பெறவில்லை. உழைக்கத்தான் வழி பிறந்திருக்கிறது. அவள் தன் விருப்பப்படி ஒருவனைத் தேடிப் பெறும் உரிமையைப் பெறவில்லை. அந்த உரிமையைக் கொடுத்தாலும் அந்தச் சுமையைப் பெற்றோர்களுக்குத் தள்ளிவிடுகிறார்கள். அவள் குடும்பப் பெண்ணாகவே தன்னை நினைக்க வேண்டி இருக்கிறது. சமூக உணர்வு அவளுக்கு முழுவதும் மறுக்கப்படுகிறது. அவள் ஆடவரிடமிருந்து முற்றிலும் பிரிக்கப்படுகிறாள். இது அவளை முன்னுக்குச் செல்ல விடாமல் தடுக்க வழியாக அமைகிறது. அவள் தன் வாழ்வைத் தானே அமைத்திருக்க முடியும். தன் மண வாழ்விற்குப் பெற்றோர்களை நம்புகிறாள். அதனால் அவள் தன் வாழ்வுப் பாதையை அமைத்துக் கொள்ளத் தவறிவிட்டாள். இதை ஒரு நாவலாகவே எழுதியிருக்கலாம். என்பது சரசுவின் கருத்து, அதை அவள் எழுத விரும்பினாள். ஆனால் அதன் கரு அவளுக்குச் சொந்தமில்லை. அவ்வாறு பிறர் கருவை வைத்து எழுதுவது கலைப்படைப்பு ஆகாது என்பது அவளுக்குத் தெரியும். அதை அவள் தன் வாழ்வில் கண்டிருக்க வேண்டும். அந்தச் சோகம் அவளைத் தொட்டிருக்க வேண்டும். அவளைத் தொட்டதில்லை; அதனால் அதை எழுத அவள் விரும்பவில்லை. அவளுக்குப் பிடித்த

கதை 'ஆசை, அன்பு, பாசம்'தான். அது தன் சொந்தக் கதை போல அவளுக்கு இருந்தது. இந்த மூன்றிலும் அவள் முழு வெற்றியைக் காணவில்லை.

எங்கள் பேச்சில் ஒரு தத்துவத்தைப் படைத்தோம். மனிதன் சந்தோஷமாக வாழ வேண்டும். எது சந்தோஷத் தைக் கெடுக்கிறதோ அது தவிர்க்கப்பட வேண்டும். இது புதிய தத்துவம். இதை வைத்து எழுதுவது தான் எனக்கும் பிடித்து இருந்தது. இது விவாதிக்கப்பட வேண்டிய விஷ யம். சந்தர்ப்பவாதிகளின் தத்துவத்துக்கும் இலக்கியவாதி யாகிய நான் புகுத்தும் தத்துவத்துக்கும் வித்தியாசம் இருக் காமல் போய்விட வாய்ப்பு இருக்கிறது. இதைத் தலைப்பாக வைத்து ஓர் இலக்கியச் சிறுகதைப் போட்டி வைக்கலாம் என்று எங்கள் வட்டத்தில் தீர்மானம் செய்தோம்.

'கவலை ஒரு நோய்' என்ற தலைப்பைத் தந்து வைத்தோம். அது அவசியம் என்றும் வாதிடலாம். அது கூடாது என்றும் வாதிடலாம். அதற்கு ஒரு வாய்ப்புத் தருவது என்பது எங்கள் திட்டம். பத்திரிகையில் இது புது அம்சமாக இடம் பெற வேண்டும் என்று பேசி முடித்தோம்.

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற தலைப்பைக் கொடுத்து ஒரு தொடர் கதை எழுதச் சொல்லி விளம்பரம் தந்தோம். இந்தத் தத்துவத்தை எப்படி விமரிசிக்கிறார்கள் என்பதைக் காண விரும்புகிறோம். இது என் தத்துவம், இதை வைத்து ஒரு நாவல் எழுதுவது என்று தீர்மானித் தேன். வாழ்வைக் கண்டு அஞ்சி ஓடுபவன் கோழை; போராடி வெற்றி பெறவேண்டும். 'சமுதாய நினைப்பு' என்ற நனவோட்டத்தில் வாழ வேண்டும்; வாழ்க்கைக்கு அஞ்சி வெறுப்பது தவறு என்பது என் கொள்கை. தவறுக்கு அஞ்சித் தற்கொலை செய்து கொள்பவனைவிடத் தவறு செய்துவிட்டு அது நியாயம் என்று சொல்லுகின்ற முற் போக்கு வாதியைத்தான் என் எழுத்துப் படைத்துத் தரும். சமுதாயம் சிந்திக்கட்டும்.

சமுதாயக் கட்டுகளை எவன் தேவைப்பட்டால் துணிந்து களைந்து எறிகிறானோ அவன் முன்னோடி. அவன் இந்த உலகை வாழத் தகுதியுடையதாக ஆக்குபவன் என்பது என் சித்தாந்தம்.

தான் அழுது மற்றவர்களின் இரக்கத்தை எழுப்பு பவனைவிட மற்றவர்களை அழச்செய்து அவர்களுக்காக இரக்கம் காட்டுபவனே வீரன் என்பது புதிய சிந்தனை; இந்தப் புதிய சிந்தனைகள் தோன்ற என் எழுத்து உதாரண மாக வேண்டும் என்பது என் ஆசை.

எப்படிச் சந்தோஷமாக வாழ்வது? தனிமனிதன் எப்படிச் சந்தோஷமாக வாழ முடியும். அப்படித்தான் இது வரை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அது மாறிச் சமு தாயம் சந்தோஷமாக இருக்கப் பாடுபடவேண்டும். அது தான் நான் எழுப்பிய தத்துவத்தின் விளக்கம்.

இலக்கியம் அறத்தை உணர்த்த வேண்டும்; அழகைத் தோற்றுவிக்க வேண்டும்; இறுதியில் இன்பத்தைப் படைக்க வேண்டும். ''எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது அல்லால் வேறு ஒன்று அறியேன் பராபரமே'' என்று ஒரு பிரபல வாரப் பத்திரிகை தன் நோக்கத்தை உயரிய கொள்கையாக வெளியிடுகிறது. ''தமிழ்த் திருநாடு தன்னை பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா'' என்று மற்றும் ஒரு பத்திரகை தன் நோக்கத்தைக் குறிப்பிடுகிறது. எல்லோரும் இன்புற்று இருப்பது என்பது பத்திரிகை படிக்கின்றவர் சுவைத்து இன்புறுவதைக் குறிப்பிடுகிறது. அது பத்திரி கைக்கு எப்படிப் பொருந்தும்? மனித இனம் இன்பம் அடைய வழிவகை என்ன என்று ஆராய்ந்து வழி சொல்ல வேண்டும். அதுதான் கதையின் முடிவு. முடிவு சரியாக அமைய வேண்டும்.

இன்றைய தினம் சமூகக் கொடுமையில் சிக்குண்டு தவிப்பவர் பெண்களே! 'நனவோட்டம்' என்ற நாவலைப்

படித்தேன். அது ஒரு நாவல் விமரிசகன் எழுதிய கதை. 'பெண்' எப்படி அலைக்கழிக்கப்பட்டாள். அவள் அழுது கொண்டே இருக்கிறாள் பிறர் இரக்கத்துக்கு; அவள் இந்தச் சமூகத்தை அழவைத்தாள்; கட்டிய கணவனைச் சிந்திக்க வைத்தாள். அவளிடத்தில் அமைந்திருந்த வீரத்தைத் துணிவை நான் பாராட்டுகிறேன். அந்தக் கதை சரியா இல்லையா என்பதைப் பற்றி விமரிசனங்கள் வந்தன. எப்படியாவது கணவனோடு அவள் வாழ்ந்திருக்க வேண் டும். அவனைத் திருத்தப் பாடுபட்டு இருக்க வேண்டும். மற்றொருவனை மணந்து இருக்கக் கூடாது என்று சொல்லுகிறார்கள். அந்தக் கதைத் தலைவி உஷா கேட்கும் கேள்வி இதுதான். என் எதிர் காலம் என்ன? இப்படியே அழுது அழுது நான் சாக வேண்டுமா? சாவுதான் முடிவு என்றால் அதற்காக நான் பிறந்தபோது என் பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டியதில்லை; நான் வளர்ந்த போது என்னை எடுத்துச் சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்திருக்க வேண்டியதில்லை. நான் பருவம் அடைந்தபோது அதை யே விழாவாக நடத்திப் பலருக்குத் தெரிவித்து அவர்கள் பூரிப்பு அடையத் தேவையில்லை. என் பூப்பில் இந்த உலகம் மகிழ்ச்சி பூத்தது. என் மணவிழாவில் உலகம் மகிழ்ந்தது. இந்த அரிய வாழ்க்கையைச் சாவிலே சந்திக்க நான் விரும்பவில்லை. வாழ்ந்து காட்டுகிறேன்'' என்று ஒரு அறை கூவல் விடுத்தாள் அந்தக் கதைத் தலைவி உஷா. அவர்களால் மற்றவர்களும் கெட்டுவிடுவார்கள் என்று விமரிசித்தவர்களும் இருக்கிறார்கள். முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தான் எழுதினார்கள். சமூகத்துக்கு அடிபணிந்து அவள் செத்திருந்தால் ஆகா கதை எவ்வளவு அழகாககச் சோகத்தில் முடிந்திருக்கிறது என்று பாராட்டி இருப்பார்கள். மீண்டும் இந்தத் தத்துவம்தான் என் நினை வுக்கு வருகிறது.

''மற்றவர்கள் தன் அழுகையைக் கண்டு இரக்கப் படுவதைவிட மற்றவர்களை அழவைத்து அவர்களுக்காக

இரக்கப்படுவதுதான் உயர்ந்தது'' என்ற தத்துவம் அந்த கதையிலிருந்து எழுந்தது. சமூகம் இந்த முடிவை ஏற்காது தான். ஏற்காவிட்டால் போகட்டுமே. அதற்காக நாம் ஏன் கவலைப்பட வேண்டும். சமூகத்தின் சிந்தனையைத் தூண்டி னால் போதும். அந்த அளவில் அந்த முடிவு தக்கது என்றே பட்டது.

ஏன் திடீரென்று அந்தக் கதைத் தலைவி உஷாவைப் பற்றி எண்ண வேண்டும். அந்த நாவல் படித்த நினைவு; நனவோட்டமாக அமைந்த அந்த நாவல் ஒரு புதிய திருப்பு நிலையைக் காண்கிறது. 'சம உரிமை, சம அந்தஸ்து, சம உடைமை' 'இம்மூன்றும் அடங்கியதுதான் சமதர்மம். அது தான் இந்தச் சமுதாயம் அடைய வேண்டிய இன்ப வாழ்வு. அதைத்தான் 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது' என்று அந்தப் பத்திரிகை கூறுகிறது.

சந்தர்ப்பவாதிகள் அடைகிற சந்தோஷத்தை வாழ்வின் லட்சியம் என்று கூறமுடியாது. லட்சியவாதிகள் உயர்ந்த லட்சியத்தைக் கடைப்பிடித்து அடையும் வெற்றியே சந் தோஷம் என்பது. இந்த நினைவுகள் அவர்கள் நீங்கியதும் என் நினைவில் எழுந்தன.

இலக்கிய விமரிசனம் முடிந்தது. ஞானத்தின் விமரி சனம் தொடங்கியது நான் அந்தக் கூட்டத்தை அவ்வப் பொழுது கூட்டுகிறேன் என்பது பற்றியது; ''கதை எழுது வதாக இருந்தால் நீங்கள் பாட்டுக்கு எழுதுவதுதானே! மற்றவர்களிடம் ஏன் படித்துக் காட்ட வேண்டும்?'' என்று கேட்கிறாள்.

பத்திரிகையில் எந்தத் தொடர் கதையும் வராவிட்டால் ஏதாவது புனைபெயரில் அவ்வப்பொழுது எழுத வேண் டிய அவசியம் ஏற்பட்டது. உரிமையாளரும் ''பத்திரிகை ஆசிரியர் என்றால் ஏதாவது நீங்களும் எழுதவேண்டும்'' என்று கட்டளையிடுவார். ஆனால் அவர் ஒரு விதி

வகுத்திருக்கிறார். எங்கள் சொந்தப் பெயரை வெளியிடக் கூடாது; கற்பனைப் பெயர்தான் போடவேண்டும். என்பார். புது ஆசிரியர்கள் எழுதுகிறார்கள். என்றால்தான் வாசகர்கள் படிக்கிறார்கள். அதற்காகவே நான் ஒவ்வொரு கதையிலும் ஒரு புதிய உத்தியைக் கையாள்வேன். பாத்திரமே கதை சொல்வது போலத் தொடங்குவேன். அல்லது டயரிக் குறிப்புச் செய்திகளை வெளியிடுவது போல வெளியிடுவதும் உண்டு. சில சமயம் இரண்டு மூன்று பாத்திரங்கள் பேசுவதைப் போலவும் எழுதுவது உண்டு. பெண் எழுத்தாளர்கள் பெயர்களையும் வைத்து எழுதுவது உண்டு. சினிமா நடிகர்களுள் புதுமுகத்திற்குக் கிராக்கி இருப்பதுபோல் எழுத்தாளர்களுக்கும் புதியவர் களுக்கு எப்பொழுதும் வரவேற்பு இருந்து கொண்டுதான் இருக்கிறது.

என்னிடம் ஒரு கெட்ட பழக்கம். கதை வெளியிடு வதற்கு முன் என் கதையைப் பிறரிடம் படித்துக்காட்டி அவர்கள் 'எதிரொலி' என்ன என்பதைக் காண முயல்வது உண்டு. நான் எழுதியது என்று சொல்வது இல்லை. பத்திரி கைக்கு வந்த கதைகள் என்று சொல்லி விமரிசிப்பது உண்டு. அதனால் ஒரு பெரிய நன்மை உண்டு. வெளி வந்ததும் வாசகர்களிடையே தோன்றும் வெறுப்பையும் ஒதுக்கீட்டையும் தவிர்க்க முடிகிறது. அதற்காகவே சரசுவதி யின் வருகையை நான் விரும்பினேன். ஒரு பெண் எப்படி விமரிசிக்கிறாள் என்பதை அறிவதற்காகவே அவள் விமரி சனத்தைக் கேட்பது எனக்கு வழக்கமாக விட்டது. ஞானத்துக்கு அந்த ஞானம் இல்லாததால் அவள் பாஷை யில் சொன்னால் நான் சச்சுவைத் தேடவேண்டியிருந்தது.

இப்படி என் பெயரை மறைத்துவிட்டு எழுதுவது என் மனச்சான்றிற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் பத்திரிகை ஓடவேண்டுமே. பத்திரிகையில் புதிய அம்சங் கள் எழுந்தால்தான் அதற்கு வரவேற்பு ஏற்படுகிறது. அதுவும் மிகவும் கவனமாகச் செய்ய வேண்டி இருக்கிறது.

நிறுவனங்களில் வேலை செய்யும் எந்தத் தொழிலாளியும் தனித்தன்மையோடு இயங்க முடியாது. அந்த வகையில் எங்கள் பத்திரிகைத் தொழிலும் அப்படித்தான். 'வாசகர்களைத் திருப்திப் படுத்துவது' என்பது அவசியம் ஆகிறது. எங்கள் விருப்பம்போல் எதையும் எழுத முடியாது. சமுதாயச் சிந்தனையோடு ஒட்டி இயங்கினால்தான் அதற்கு வரவேற்பு ஏற்படுகிறது. இதிலே இருந்து மாறி நான் வெளியில் வந்துவிட வேண்டும் என்று நினைக்கிறேன். அது முடியவில்லை. பத்திரிகையின் உதவி இல்லாமல் எந்த எழுத்தாளனும் முன்னுக்கு வரமுடியாது. தனித்துவம் மிக்க எழுத்தாளனைப் பத்திரிகை ஏற்றுக் கொள்ளாது. ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு வகையில் இயங்கிக் கொண்டு வருகிறது. அது அதன் பாணி என்று கூறுவர்.

அந்தப் பாணியை உருவாக்குவதும் அதன் வாசகர் தான். அந்தப் போக்குக்கு இதை எழுதாவிட்டால் அவன் எழுத்து அந்த வாசகர்களிடையே எடுபடாது. அவர்கள் விரும்பும் விஷயங்களைத்தான் எழுத வேண்டும். சமுதாயத்தை மாற்ற முயல்க கூடாது. மாற்றாமல் இருக்க என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் பத்திரிகை எழுத்து செய்யும்.

எங்கள் வாசகர்களை மகிழ்விக்க வேண்டும். எதிர் பாராத முடிவுகள். திடீர்த் திருப்பங்கள், காதல் கட்டங்கள், சஸ்பென்ஸ், அடுத்த இதழில் அவர்கள் எதிர்பார்க்கும் நிலையில் சம்பவங்களைக் கொண்டு செல்வது இந்த உத்திகளை எடுத்தாள வேண்டும்.

இந்தப் போக்கு எனக்கு வரவரப் பிடிக்கவில்லை. நான் முழு எழுத்தாளனாக என் தனித்தன்மையோடு வெளி வர வேண்டும். என்று போராடிக் கொண்டிருக்கிறேன். இது என் உள் மனப் போராட்டம். ஞானம் அஞ்சுகிறாள். பத்திரிகையை விடக்கூடாது என்கிறாள். அதிலே இருக்கிற நிம்மதி வேறு எதிலும் இல்லை. என்கிறாள். மாதச் சம்பளம்

உறுதி; எதுவும் எழுதாவிட்டால் முடியாவிட்டால் வெறும் நகைச் சுவைத் துணுக்குகளைப் போட்டு நிரப்பிவிடலாம். அவர்களால் எழுத முடியாவிட்டாலும் போட்டி ஒன்று வைத்தால் நிறையத் துணுக்குகள் வந்துவிடும். அதைக் கொண்டு சுலபமாக ஓட்டிவிட முடியும் என நம்புகிறாள்.

அவள் ஏதோ ஒரு பிரபல பத்திரிகையின் போக்கைப் பார்த்து இவ்வாறு பேசுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

''வெறும் நகைச் சுவையை வைத்தே எந்தப் பத்திரிகையும் ஓடாது. பிறகு அந்த பத்திரிகையே நகைச் சுவைக்கு இடமாகிவிடும்'' என்று அவளோடு வாதித்தேன்.

''எழுத்தாளன் விமரிசகர்களை உருவாக்குகிறான். விமரிசகர் எழுத்தாளர்களைப் படைக்கிறார்கள்'' என்று நான் அவளிடம் விளக்கினேன்.

எழுத்துத் தனிக் கவர்ச்சி உடையது. உண்மை மனிதர் கள் எப்படி வாழ்ந்தாலும் கவலைப்பட மாட்டார்கள். எழுத்து மாந்தர்கள் சரியாகப் படைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் வாசகர்கள் மனமுடைந்து போவார்கள். ஏற்றுக் கொள்ளத்தகாத கருத்தைச் சொன்னால் தப்பித்துக் கொள்ள முடியாது. கடுமையான விமரிசனத்துக்கு ஆளாக வேண்டியது தான். படைக்கப்படும் பாத்திரங்கள் விரும்பத் தக்கவர்களாகப் படைக்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் வேதனை அடைகிறார்கள். உயர்ந்த பாத்திரங் களுக்கு ஏதாவது தீமை நிகழ்ந்தால் அதை வாசகர்கள் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். தாம் அந்தப் பாத்திரங் கள் ஆகிவிடுகிறார்கள்; அதனால் எழுத்து பயங்கரமான கலை. பொழுதுபோக்கு எழுத்தாளர்கள் எப்படி வேண்டு மானாலும் எழுதிவிட முடியும். வாழ்க்கையை விமரிசனம் செய்யும் எழுத்தாளர்கள் நல்லது வாழ வழி செய்ய வேண் டும். எப்படியும் நல்லது வாழ வேண்டும். 'எது நல்லது'

என்பதில் தான் வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கருத்து வேறுபாடு உண்டாகிவிடுகிறது.

என் எழுத்து இந்தச் சமுதாயத்துக்கு ஒரு புதிய சிந்தனையைத் தோற்றுவிக்க வேண்டும் என்பது என் ஆசை. இதுவரை எழுதியதையே எழுதுவது பிடிக்க வில்லை. எதையும் எழுதாமலும் இருக்க முடியாது. புதிய சிந்தனைகளைப் புகுத்தாவிட்டால் இந்த வாசகர்கள் பழைய எழுத்தாளர்களையே காரணம் இல்லாமல் புகழ்ந்து கொண் டிருப்பார்கள். புகழட்டும். நல்லதுதான் அந்தக் கருத்துகள் காலத்தோடு ஒட்டாவிட்டால் அவற்றைப் புகழ்வதால் சமுதாயம் தேக்கம் அடைந்துவிடுகிறது. அந்த வகையில் புதுக் கவிதை படைப்பாளி வானம்பாடியை எனக்குப் பிடித்து இருக்கிறது. அவனது பார்வை, சிந்தனை என் னிடத்தில் புக வேண்டும் என்பது என் ஆசை; எழுத்தாளன் பல உருவங்களைப் பார்த்துக் கூட்டிக் குறைந்து ஒரு புதிய உருவத்தைப் படைக்கிறான். சரசுவதி எனக்குப் பேசும் பொற்சித்திரமாக விளங்குகிறாள். அவள் குறிபிட்ட ஐந்தாவது பசி அவளிடம் இருக்கிறது. அது அவள் தனித் தன்மை. என்னுள் பல கேள்விகளை எழுப்பி வருகிறாள். அவற்றிற்கு என் எழுத்தில் விடை காண முயல்கிறேன். எனக்கு அந்த வகையில் ஆசிரியையாக விளங்குகிறாள். ஆசிரியர்கள்தானே வினாக்களை எழுப்புவார்கள்.

“அவளிடத்தில் ஏன் அப்படிப் பேசுகிறாய். அவ ளிடத்தில் என்ன இருக்கிறது?” இது என் ஞானத்தின் கேள்வி.

“அவளிடம் கண்ணில்படும் அழகு இருக்கிறது. என் கருத்தில் படும் அறிவும் இருக்கிறது. புதுமைப் பெண்ணின் சிந்தனை ஓட்டம் இருக்கிறது” என்று சொன்னேன்.

‘படித்த பெண்கள் அவர்கள்தான் பயப்படுகிறார்கள்.’ இந்த அருமையான கருத்து என் சிந்தனையைத் தூண்டி யிருக்கிறது. ஏன் ஒவ்வொருவரின் சிந்தனையையும் தான்

தூண்டும் என்று நினைக்கிறேன். "படித்த பெண்தான் பயப் படுவாள். அவளுக்குத்தான் எது நல்லது எது கெட்டது என்பது தெரியும். Boy friend டோடு பழகலாம், பேசலாம். ஆனால் அவனோடு திரைப் படத்திற்கு உடன் போவதற்கு அஞ்சுகிறாள்! அவள் அஞ்சக் கூடாது" என்கிறாள். அதை முழுவதும் ஏற்றுக் கொள்ள முடியாது. என்றாலும் படித்த பெண்ணைப் பற்றி அழகான சொல் ஓவியத்தை அவள் தந்திருக்கிறாள்.

இன்று படித்த பெண்கள் அஞ்சித்தான் வாழ வேண்டி யிருக்கிறது. படிக்க; அறிவை வளர்த்துக் கொள்ள; சரிநகர்ச் சமானமாக வாழ உரிமை கொடுத்துள்ள சமுதாயம் அவர் களுக்கு நிகராகத் தவறு செய்ய உரிமை கொடுக்கவில்லை. அதனால் விளையும் பிரச்சனைகளை அவர்களால் ஏற்றுச் சமாளிக்க முடியாது. அதனால்தான் அஞ்சுகிறார்கள். இந்த அச்சம் அவசியமாகிறது. தற்காப்புக்காகச் சமுதாயம் அவர் களை அஞ்ச வைக்கிறது. இது இன்றைய நிலைமை. அவர்கள் துணிவு பெற்றுவிட்டால் நாளைய சமுதாயம் அஞ்சும் நிலை வந்துவிடும். வரத்தான் போகிறது. அவள் அவ்வாறு தன் நண்பனோடு திரைப் படத்திற்குப் போவது தவறு இல்லை என்று சமுதாயம் உணரத்தான் போகிறது. சரசுவதி போன்றவர்களின் சிந்தனையால்தான் அத்தகைய நிலை உருவாக வேண்டும்.

கற்பு என்பதைப் பற்றி பயங்கரமான கற்பனைகள் இந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அன்று 'ஒரு பாட்டும் விளக்கமும்' என்ற பகுதியில் ஒரு சிறு இலக்கிய நிகழ்ச்சி தரப்பட்டிருந்தது. அது பிரசுரத்திற்கு என்று அனுப்பியிருந்தார்கள். அது பழைய இலக்கியப் பாட்டு. அதனை விமரிசித்துப் பாராட்டி எழுதி இருந்தார்கள்.

இருபதாம் நூற்றாண்டு இலக்கியப் பேராசிரியர் களுக்கு இந்தப் பண்பாட்டுச் சித்திரம்தான் விமர்சனத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஏதோ ஒரு நூலில் இருந்து எடுத்துக்

காட்டியிருக்கிறார்கள் இதெல்லாம் என் நினைவிற்கு எங்கே வருகிறது.

ஒரு தாய் தன் மகளைத் தேடிக் சென்றாளாம். அவள் காதலனோடு வெளியேறி விட்டாளாம். வழியில் புதிய அறிமுகமில்லாத இளம் காதலர்கள் எதிரே யாரோ வந்தார் களாம். அவர்களைப் பார்த்து, "என் மகளும் மற்றொரு மகனும் இந்த வழியில் செல்லக் கண்டிருக்கிறீரா?" என்று அந்தத் தாய் கேட்டாளாம். அவன் சொன்னானாம் "நான் ஒரு காளையைக் கண்டேன். கன்னியைக் காணவில்லை. அவன் அடையாளம் மட்டும் நான் சொல்ல முடியும. அவளைப்பற்றி எனக்குத் தெரியாது. என் துணைவியைக் கேள். அவள்தான் பார்த்திருப்பாள்" என்றானாம்.

என்ன அழகான கற்பனை. அதாவது அந்த ஆடவன் அந்தப் பெண்ணை ஏறெடுத்துப் பார்க்கவில்லை. நேரிய உள்ளம் படைத்தவனாக இருந்தான் என்பது அந்தக் கதை. தன் மனைவியைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் கண்டதில்லை என்பது அந்தக் கற்பனை.

இது இருபதாம் நூற்றாண்டு; இது ரசனைமிக்க காலம்; எந்த அழகியையும் யாரும் பார்க்கத்தான் செய்கிறார்கள். அழகுக்கு அந்த ஆற்றல் உண்டு. அது யாரையும் இழுக்கும்; இளையவர் ஆயினும் சரி முதியவராயினும் சரி அதற்கு விலக்காக முடியாது.

ஒரு எழுத்தாளன் ஒரு கதையில் எழுதியிருந்தான். ஒரு பெண் தன் இளமையைப் "பிறர் பாராட்டினால் அவள் மெத்த மகிழ்வாள்" என்று. அதற்கு வந்த விமர்சனம் இளம் பருவத்துக் கன்னியையுமா என்று கேள்வி கேட்டு வைத்தது. நினைத்துப் பார்க்க வேண்டிய கேள்வி இது. கன்னியைக் கூட இளமையாய் இருக்கிறாய் என்று சில சமயம் சொல்ல வேண்டியிருக்கிறது. அது அவள் மறந்து விடுவதால்; அவளுக்கே சில சமயம் தெரியாமல் இருக்

கிறது. இளமையைக் குறிப்பிட்டால் அவள் உணர்வு தூண்டப்படுகிறது. அழகைப் பாராட்டினால் அது அவளுக்குப் பெருமையைச் சேர்க்கிறது.

அழகை ரசிப்பது இயற்கை; கற்பு என்ற போர்வை போட்டு அதை இலக்கியம் மூடிவைக்க நினைக்கிறது. அந்தப் பாட்டையும், விமர்சனத்தையும் சரஸ்வதி ஏற்க மறுத்துவிட்டாள். "இன்று பெண்கள் ஆடைகளைக் குறைத்துக் கொள்கிறார்கள். உடம்பு தெரிய உடுத்துகிறார்கள்" இது இன்று விமர்சிக்கப்படும் செய்தி. இரண்டாவது பரிசு பெற்ற துணுக்காக ஒரு பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. "அவள் ஆபீஸுக்குப் போகப் புறப்படுகிறாள். ஏதோ மறந்துவிட்டதாக அவளுக்கு நினைப்பு, தன் சிநேகிதியிடம் இதைக் கூறுகிறாள். அதாவது அவள் ஜாக்கெட்டைப் போட மறந்துவிட்டாள்; என்பது அந்தக் கேலிச் சித்திரம். இன்றைய கார்ட்டூன் நாளை வாழ்க்கையாக மாறினால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்று பெண்கள் தம் அழகைப் பலரும் ரசிக்க இடம் தருகிறார்கள். இது இன்றைய போக்கு என்கிறாள் சரசுவதி. "பெண் தன் அழகால் பிறரை மயக்கக் கூடாது. மகிழ்விக்கலாம்" என்பது சரசுவதியின் சித்தாந்தம்.

"அழகு மனிதர்களின் மனத்தைத் தூய்மைப்படுத்துகிறது. அவர்களின் தவறான எண்ணங்களை ஒழிக்கிறது" என்பது அவள் விளக்கம். "அந்தப் பழைய பாட்டும் விமர்சனமும் ஏற்கத்தக்கது அல்ல" என்று கூறிவிட்டாள்.

"தோட்டத்துப் பூ உரியவர்க்குத்தான் சொந்தம்; இல்லையென்று மறுக்கவில்லை. அதைப் பறிப்பதற்கு மற்றவர்களுக்குச் சொந்தமில்லை. பார்ப்பதற்குக் கூடவா தடை" இது வானம்பாடியின் வாதம். அவன் எப்போதும் எதையும் உருவகத்தில்தான் விளக்குவான். இந்த இருபதாம் நூற்றாண்டுப் போக்கை அறிய நிச்சயம் எனக்கு ஒரு

சரஸ்வதி தேவைப்படுகிறாள். ஒரு வானம்பாடியின் விமர்சனம் உதவுகிறது. ஞானம் என்ன சொல்வாள். ''உங்களுக்குத் தான் சொல்கிறேன். அந்தப் பாட்டு உணர்த்தும் நீதி நீங்கள் பிற பெண்டிரைப் பார்க்க கூடாது. அதுதான் இலக்கியம்'' என்பாள்.

''அதற்குத்தான் 'சச்சின்' ரசனை உங்களுக்கு வேண்டாம் என்று சொல்வது'' என்று அடித்துப் பேசுவாள். நான் அந்தப் பாட்டை அவளிடம் காட்டியதில்லை. விமரிசித்ததும் இல்லை. அப்புறம் அது அவளுக்கு ஒரு இலக்கியச் சான்றாக அமைந்துவிடும்.

'மது'வால் விளைந்த தீமையை விட அதற்கு இது வரை அரசாங்கம் வாங்கும் வரிகளும் ஏலத் தொகைகளுமே உண்மையில் மக்களை வாட்டுகின்ற. குடிப்பது கெட்ட பழக்கம்தான். அதை விடமுடியாது என்பதற்காக அதற்கு அதிக வரி போட்டு நிறைய பணத்தை அரசாங்கம் கஜானாவில் சேர்க்கிறது. அதைக் கல்வி, மருத்துவம் முதலிய பொதுத் துறைகளுக்குப் பயன்படுத்துகிறது; இது எவ்வளவு பாவமான செய்கை. குடிப்பவனை அவன் செய்யும் குற்றத்துக்காக வரிகள் என்ற பெயரால் நிறைய கொள்ளை அடிக்கப்படுகிறது. அதே போலத்தான் பெர்மிட்டுகள் வசதி உடையவர்களுக்குத் தரப்படுகின்றன. இல்லாதவர்கள் பெர்மிட்டு வாங்க முடியாமல் கலங்கலைக் குடிக்கிறார்கள். அந்தக் குடும்பங்களைக் கலங்க வைக்கிறார்கள்.

இப்பொழுதும் அதே நிலை தொடரத் தான் செய்கிறது. அவனுக்கு அது வேண்டும். அது தணிக்கப்பட வேண்டியதுதான். அவனைக் கட்டுப்படுத்தினால் அவன் தவறு செய்கிறான். சமுதாயத்தின் முன்னால் அவன் குற்றவாளியாகிறான். இப்படி ஒவ்வொருவரையும் ஏதாவது குற்றம் சார்த்தி உள்ளே தள்ளினால், பிறகு யார்தான் வெளியே இருக்க முடியும்.

இது முக்கியமாகத் தொழிலாளியைப் பாதிக்கும் பிரச்சனை. குடித்துப் பழகிவிட்ட அவனைத் தடுக்க முடியாது. அது அவன் பழக்கம். அதற்காகத் தண்டிப்பது நியாயமாகப் படவில்லை. 'குடி' தடுக்கப்படலாம், ஆனால் தனி மனிதன் பழகிவிட்ட காரணத்தால் குடிக்க வேண்டும் என்றால். அவர்களைத் திருத்த முடியாது. திருத்த முடியாது என்பதற்காக அவர்களைத் தண்டிப்பது தவறு.

கள்ளச்சாராயம் ஒரு குடிசைத் தொழிலாகப் பெருகி விட்டது. இதைத் தடுக்க அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கிறது. ஊழல் பெருகுவதற்கு இது வழி செய்கிறது என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. இதையே தொழிலாகப் பலர் நடத்துகிறார்கள். அவர்கள் அரசாங்கத்துக்கு எந்த வரியும் செலுத்துவதில்லை. தனிமனிதர் ஒழுக்கப் பிரச் சனையில் அரசாங்கம் தலையிடுவதால் நாட்டில் சமுதாய ஒழுங்கு கெட்டுவிடுகிறது. 'மதுவிலக்கு' கொண்டு வரலாம் என்றாலும் தனிவிலக்குகளும் அளிக்கப்பட வேண்டும். சிகரெட்டுக் குடிப்பது பொது இடங்களில் தவிர்க்கப் படுகிறது. அதே போலப் பொது இடங்களில் குடிப்பதைத் தவிர்க்கலாம். அவர்கள் இல்லங்களில் கொண்டு சென்று குடிக்கலாம் என்ற நிலைமை உருவானால் அவன் யோக் கியமாக மாறுவான். மனைவி அவனைத் திருத்த முடியும். குடும்பம் அவனைத் திருத்தும். அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைத்துக் குடிப்பதால்தான் கெடுதல் செய் கிறான். போகட்டும். இதைப் பற்றி அதிகம் சிந்தித்து என்ன பயன். இது இன்றைய அரசியல் பிரச்சனையாகிவிட்டது. அதில் தலையிட்டுத் தனிமனிதன் சிந்தனை எதைச் சாதித்துவிட போகிறது.

என் பத்திரிகையில் இதைத் தனியாக நான் எழுத முடியாது; எழுதினால் அரசாங்கத்தை எதிர்ப்பதாகக் கருது வார்கள். அரசாங்கத்தை எதிர்த்துக் கருத்துகளைச் சொல்லத் தான் பத்திரிகைகள் இருக்கின்றன. அந்தத் துணிவு என்

முதலாளிக்கு இல்லையே. விளம்பரங்கள் தரமாட்டார்கள் என்று அஞ்சுகின்ற பத்திரிகைகள் எவ்வள வோ இருக் கின்றன. பத்திரிகை என்றால் விற்பனை ஆகவேண்டும். எப்படி எழுதினால் நல்லது எதை வெளியிட்டால் 'சர்க்கு லேஷன்' அதிகம் அதைப் பற்றித்தான் கவலைப்படுகிறது. அத்தனை பத்திரிகைகளும் 'திடீர்' என்று 'பல்டி' அடிக் கின்றன. தனிமனிதர் திடீர் என்று கட்சிகளிலிருந்து மாறி விடும்பொழுது பத்திரிகைகள் எந்த அளவுக்குத் தாக்குப் பிடிக்கும்.

இதையெல்லாம் பார்க்கும்பொழுது என் கருத்து களைச் சொல்லமுடியாது என்று நினைக்கிறேன். அதற்குப் பத்திரிகை ஆசிரியர் தொழில் முடியாது. அதற்கு நானே ஒரு சொந்தப் பத்திரிகையைத் தொடங்க வேண்டும். அதுதான் சரி என்று பட்டது.

இலக்கிய வட்டம் இப்பொழுது கூடுவதே இல்லை. என் உள்ளத்தில் ஒரு சூனியம் இடம் கொள்ள ஆரம் பித்தது. இலக்கியப் பிரச்சனைகளை விவாதிக்கும்பொழுது எவ்வளவு கலகலப்பாக இருந்தது.

எங்கள் வீட்டு அறையில் டாக்டரைச் சந்தித்தேன். எதிர்பாராத விதமாகச் சிரித்துக் கொண்டே வந்தார். "She is in the family way' என்று கூறினார். அவள் மாற்றத்துக்குக் காரணத்தை அறிந்தேன். அவள் குடும்பப் பெண் ஆகிறாள் என்பதைத்தான் இந்த ஆங்கிலத்தில் சொன்னார். அதாவது அவள் குழந்தைக்குத் தாயாகப் போகிறாள் என்ற செய்தி யைச் சொன்னார். இனி அவள் பாசம் என்பதற்கு விடை காணப்போகிறாள். இனி, அவளுக்குக் குழந்தைதான் பிரச்சனைப் பொருள் ஆகப்போகிறது. அவளது விமரிசனம் எல்லாம் அந்த பூவும் பிஞ்சும் பற்றித்தான் சுற்றப் போகிறது. அவள் இனி எங்கே காய் கனிகளைப் பற்றிப் பேசப்போகிறாள். சமுதாயத்துப் பிரச்சனைகளைப் பற்றி அவள் எங்கே எண்ணப் போகிறாள். எனக்கு

எதையோ பறிகொடுத்தது போன்ற உணர்வு தோன்றியது. அது ஏன் என்று தெரியவில்லை. அவளைப்பற்றி நினைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது. வெறும் விமரிசிகை தானே. ரசிகர்கள் எல்லாம் நீண்டநாள் தொடர்பு கொள்வார்கள் என்பதை எப்படிக் கூறமுடியும். அவர்கள் ரசனை மாறி னாலும் போச்சு; என் எழுத்து மாறினாலும் போச்சு. எதுவுமே நிரந்தரம் அல்ல. ஆனால் என் எழுத்து நிரந்தரம் என்பதை எண்ணத் தொடங்கினேன். அதுதான் சாகா இலக் கியம். சமுதாயம் நினைத்துப் பாராட்டிப் பின்பற்றுவது. அதை யாரும் என்னிடமிருந்து பிரிக்க முடியாது. என்பதை உணர்ந்தேன்.

டாக்டர் மாற்றல் ஆகப்போகிறார் என்று வேறு கேள்விப்பட்டேன். அந்தப் பிஞ்சு முகத்தையும் நான் பார்த்துக் கொஞ்சி விளையாட முடியாது. அவளைத் தாயாகப் பார்த்து என் வாழ்த்தையும் கூறமுடியாது.

அவர் சொல்கிறார் "இங்கே திறமைசாலிகளுக்கு வாழ்க்கை இல்லை" என்று. வெளிநாடு செல்ல இருப்ப தாகச் சொல்லிச் சென்றார். ஆம் அதை நினைக்கும்போது வேதனையாகத்தான் இருக்கிறது.

இந்த நாட்டிலே பலர் அப்படித்தான் பேசுகிறார்கள். பிறந்த மண்ணில் பாசம் வைக்க முடியாமல் அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டி இருக்கிறது. இங்கே எங்களுக்கு எங்கே வேலை இருக்கிறது என்று கேட்கிறார் கள். டாக்டர்கள் பலர் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். பட்டம் பெற்ற இளைஞர்கள் வேலை தேடித் திரிந்து அலைகிறார்கள்.

எங்கள் பத்திரிகை அலுவலகத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். ஏதாவது வேலை கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்கள். கையில் சர்ட்டிபிகேட்டுகளை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அந்தத் தாளை நம்பி

னார்கள். அது என் பார்வையில் வெறுந்தாளாகக் காட்சி அளித்தது.

இனி அந்தத் துருதுருப்பான விழிகளை நான் சந்திக்க முடியாது. என் பேனாவுக்கு அழகுணர்ச்சியை ஊட்டிக் கொண்டிருந்த அந்த உருவம் என்னைவிட்டுப் பிரிகிறது. என்னால் அதை ஒன்றும் தாங்க முடியாதுதான். அவள் இதுவரை 'குழலினிது, யாழினிது என்று சொல்லிக் கொண் டிருந்தாள். இனி தன் குழந்தையின் மழலைச் சொல்தான் இனிது என்று பேசப் போகிறாள். பாசம் என்பது மூன்றாவது எல்லை, அந்த எல்லையை அவள் தொட்ட பிறகு மறுபடியும் இந்த இலக்கியம் அவளை இழுக்காது. இலக்கியம் ஒரு கருவியே தவிர முடிவு இல்லை.

வாழ்க்கையை அறிய இலக்கியம் துணை செய்கிறது அவள் வாழ்வின் பயனை அறியும்பொழுது, இனி அவள் மனம் இலக்கியப் பிரச்சனையில் எப்படி இறங்கும். சரி. இனி அவளை நான் ரசிகையாக்குவது என்றால், ஒரே வழிதான் இருக்கிறது. குழந்தைகள் வளர்ப்பது எப்படி என்று ஒரு புதிய அம்சத்தை என் புதிய பத்திரிகையில் சேர்க்க வேண்டியதுதான்.

இனி அவள் அதைப் போன்ற இலக்கியங்களைத் தான் படிப்பாள். இனி நானும் குடும்பப் பத்திரிகைதான் நடத்த வேண்டும். எந்தப் பத்திரிகை நடத்துவது என்ற ஆராய்ச்சியில் என் மனம் சுழன்று கொண்டிருந்தது. குடும்பப் பத்திரிகைகள் ஏராளம் பெருகிவிட்ட இந்த நாட்டில் சமூகப் பத்திரிகை ஒன்று கட்டாயம் வேண்டும். இளைஞர்களின் புதிய சிந்தனைகளைப் பதிவு செய்ய வேண்டும். அதுதான் இந்தச் சமூகத்திற்குச் செய்யும் மாபெரும் பணி என்று எண்ணிக் கொண்டிருந்தேன். வானம்பாடியின் கவிதைகள் தொகுப்பு ஒன்று என் மேசைமேல் இருந்தது. அது மிக அழகாக அச்சிடப்பட்டு

இருந்தது. இப்பொழுது அச்சு எவ்வளவு வேகமாக முன் னேறி இருக்கிறது. அதற்கு ஓவியம் முகப்பை அழகு செய் தது. நடைபாதைச் சித்திரம். அங்கே 'ஒரு பிளாட்பாரம்' அதுதான் கண்ணகிக்கு எதிரே புரட்சி செய்யும் அவள் சித்திரம் தீட்டப்பட்டிருந்தது. அவளை ஒரு இளைஞன் கைப்பிடித்து இழுக்கிறான். மற்றொரு கையில் பத்து ரூபாய் நோட்டை அவளிடம் தருகிறான்.

“பெண்ணே நீ வாழ்க” என்பது அந்தக் கவிதை களின் தொகுப்பு.

இன்று பெண்கள் எவ்வளவு சீரழிகிறார்கள் என்பதை அவன் புதிய கவிதைகள் படம் பிடித்துக் காட்டின. இந்த இலக்கிய வட்டத்தில் அவன் ஒருவன்தான் உருப்படியாக ஒரு நூலைக் கொணர்ந்திருந்தான். அதைப் படிக்கும் பொழுது எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது. இத்தகைய புதுக் கவிஞர்களால்தான் இந்தச் சமுதாயம் புத் துணர்வு பெறப் போகிறது என்று மகிழ்ந்தேன். புரட்சி மிக்க கருத்துகளை அவர்கள் இந்தப் புதுக் கவியில் தீட்டித் தருகிறார்கள். இந்த எழுத்துகள் தாம் இனி வாழப் போகின்றன என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இனி என் பத்திரிகையில் வானம்பாடியின் கவிதைகள் தான் இடம் பெறப் போகின்றன என்பதில் மகிழ்ச்சி கொண்டேன.

எதிர்பாராத விதமாக வானம்பாடி என் அறைக்கு வந் தான். இலக்கிய வட்டம் அரை வட்டமாகக் காட்சி அளித் தது. கொஞ்சம் நேரத்திற்கெல்லாம் டாக்டர் ஒரு பத்திரிகை கொண்டு வந்தார். குழந்தையைத் தொட்டிலில் இட்டு ஆட்டப் போகிறார்களாம். அதற்கு ஒரு தனி பத்திரிகை. சம்பிரதாயப் படிகளில் அது முதற்படி. அந்தக் குழந்தை ஆடி அசையப் போகிறது. அதற்கு எங்கள் இருவரையும் அழைக்க வந்திருந்தார். பூவையும் பிஞ்சையும் பற்றிப் பேசிய என் அஞ்சுகத்தைக் அழைக்க விரும்பினேன்.

அவள் காலதாமதம் செய்யாமல் இந்த முறை வந்தாள்.

"எல்லாம் அவர் சொன்னார்" என்று என்மேல் பாரத்தைப் போட்டுவிட்டுப் பத்திரிகையைக் கைநீட்டி வாங்கினாள்.

"என்ன குழந்தை"

"பெண் குழந்தை?"

"பெயர் வைத்துவிட்டீர்களா?"

"ஆசிரியர் வரவேண்டும். அவர்தான் நல்ல பெயரை வைப்பார் என்று எதிர்பார்க்கிறாள்" என்று கூறி முடித்தார்.

என் மனைவிக்கு ஒரு மகிழ்ச்சி, இனி 'சச்சு' இங்கு வரமாட்டாள். வீண் பிரச்சனைகளைப் பேசிக் கொண்டிருக்க வேண்டியதில்லை. வருகிறவர்களை வா என்று வரவேற்கும் சடங்கு; இருக்கிறவர்களுக்குக் காப்பி, டீ தந்து அனுப்ப வேண்டி வேலை அவளுக்கு இல்லை.

சரசுவதியின் பேரில் அபாரமான பாசம், பரிவு எல்லாம் பாயத் தொடங்கியது. குழந்தையைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் அவளிடம் நிரம்பியது. பரிசு ஏதாவது கொண்டு செல்ல வேண்டும் என்று நினைத்தாள். அந்த நினைப்பில் அவள் ஆழ்ந்தாள். எந்த விளையாட்டுப் பொருள் வாங்குவது என்பதில் அவள் கவனம் சென்றது.

"வீட்டில் இருக்கிற பழைய பொம்மைகள் ஏதாவது"

"புதிதாக வாங்கவேண்டும்" என்று சொல்லி 'நவீனப் பெண்' என்ற சித்திரம் வடித்த பொம்மையை வாங்கி வந்தாள்.

அந்தப் பெண் பொம்மை இடுப்பு தெரியச் சேலையும், உடல் தெரிய ஜாக்கட்டும் போட்டு இருந்தது.

'என்ன இது' என்று கேட்டேன்.

'இதுதான் உங்கள் சரசுவதி காணும் புதுமைப் பெண்' என்று கிண்டல் செய்தாள்.

அதைப் பற்றிப் பிறகு யோசனை செய்து கொள்ள லாம் என்று விட்டு வைத்தேன்.

அதற்குள் என் மனைவியின் எதிரொலியில் சென்று விட்டேன் வந்தவர்களை விட்டுவிட்டு.

"கட்டாயம் வருகிறோம் டாக்டர்! என் வாழ்த்துக் கள்" என்று சொல்லி அவரை அனுப்பினேன்.

இப்பொழுது தன் மனைவி மாறிவிட்டாள் என்று கூறினார். நான் கேட்காமலேயே அவர் பேசத் தொடங் கினார். "Fees வாங்காமல் நோயாளிகளைக் கவனிப்பதை அவள் ஒப்புக் கொள்ளவில்லை. அவள் எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படுகிறாள்"

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் கடந்தகால அனுபவங்களின் சுமை எண்ணிப் பார்க்க முடிந்தது. பிறந்தது பெண் குழந்தை. அதற்கு ஒரு எதிர்காலம் அமைத்துத் தரவேண்டும். அவள் கற்பனை எங்கோ சென்றுவிட்டது என்பதை உணர முடிந்தது. அவள் அவ் வளவு சீக்கிரம் முழுக் குடும்பப் பெண்ணாக மாறிவிட்டாள் என்பதை உணர முடிந்தது.

நிச்சயம் அவள் கற்பனை தன் மகளை எந்த boy friend டோடு அனுப்ப இடம் தராது என்பதையும் உணர முடிந்தது. சம்பிரதாயம் கெடாத வகையில் அக் குழந்தை யைப் படிக்க வைத்து அவளை முன்னுக்குக் கொண்டு வருவாள் என்று எண்ணத் தோன்றியது.

"நீங்கள் தான் வந்து பெயர் வைக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். அவர் சென்ற பிறகுதான் வானம்பாடியிடம் பேச முடிந்தது.

அந்த நூலைப்பற்றி விமர்சிக்கலாம் என்று நினைத்தேன்; அதில் தானே நாங்கள் ஒன்றுபட முடியும்.

அவனுக்கு அதில் கவனம் செல்லவில்லை. தனக்குத் திருமணம் என்று சொல்லிக் கொண்டு பத்திரிகை ஒன்று நீட்டினான். அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. என் மனைவியின் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். இதுவரை அவன் அவ்வாறு பார்த்தது இல்லை. நல்ல மாற்றம் என்று நினைத்தேன். அவனுக்கும் அந்தச் செய்தியில் நிறைய மகிழ்ச்சி வெளிப்பட்டது.

அவளுக்கு நல்ல செய்தி என்றால் இதைப் போன்ற பத்திரிகை விளம்பரங்களே தவிர நான் நடத்தும் பத்திரிகை கள் அல்ல. முகூர்த்தப் பத்திரிகைகள், அழைப்புகள் இதில் அவள் ரசனை சென்றதே தவிர வாரப் பத்திரிகைகள் மாத வெளியீடுகள் அவற்றில் அவள் கவனம் செலுத்தியது இல்லை. எல்லாம் அவள் விரும்பும் செய்திகளே வீட்டில் வந்து குவிந்து கொண்டிருந்தன.

இப்போது அவள் கேள்விகள் கேட்கத் தொடங்கினாள்.

''பெண் சொந்தமா''

''இல்லை. தூரத்து உறவு''

இவன் கலப்புத் திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

''ஏதாவது சொத்து''

''பரவாயில்லை. எல்லாம் சேர்ந்து ஐம்பதினாயிரம் கிடைக்கும். அறுபது சவரன்; அது வேறு''.

இவன் புதுமைக் கவிஞர் அல்ல என்பதைத் தெரிந்து கொண்டேன்.

''அவள் விதவை ஒன்றும் இல்லையே'' என்று சந்தேகத்தோடு ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

ரொம்ப புத்திசாலித்தனமாகக் கேள்வி கேட்டதாக நினைப்பு.

அதாவது சரஸ்வதியைப் போல யாராவது இவனுக்குக் கிடைத்திருக்க வேண்டும் என்று நினைத்தாள். மேலும் அவன் புதுக் கவிதை பாடும் புதுயுகம் புரட்சிக் கவிஞர் அல்லவா. அதனால் அந்த மாதிரி ஏதாவது இருக்குமென்று அவள் நினைத்ததில் எந்தத் தவறும் இல்லை.

"சே! அப்படி ஒன்றும் நான் மோசமாக நடந்து கொள்ளமாட்டேன்" என்று ஆறுதல் கூறினான்.

"அதுதான் பார்த்தேன்; இந்த மாதிரி ஏதாவது. இது தான் இங்கு வருகிற கதைகள் பெரும்பாலும்" என்று என்காற்று அவளுக்குப் பட்டு இவ்வாறு பேசினாள்.

"சே! அதெல்லாம் கதை எழுதுவதற்கு நன்றாக இருக்கும், போயும் போயும் விதவையையா கட்டிக் கொள்வார்கள்."

அவன் 'விதவையின் கண்ணீர்' என்று பாடிய புதிய கவிதை என் மேசை மேல் கண்ணீர்விட்டுக் கொண்டிருந்தது.

"சீர்திருத்த மணம் என்று நினைக்கிறேன்" என்றாள். அதில் அவளுக்கு ஆர்வம் இருந்தது. மறுபடியும் என்னை மணமேடையில் உட்கார வைத்து அவளுக்குத் தாலி கட்டினால் சம்மதிக்க மாட்டாள் என்று தெரிந்தது. ஐயரே கூடாது என்று அறிவிப்பாள் போல இருந்தது.

"என்ன பதிவுத் திருமணமா?" என்று தொடர்ந்து கேட்டாள்.

"அப்படி எல்லாம் இல்லீங்க. அந்தப் பெண்ணின் அப்பா அப்படிப் பண்ணுவதுதான் நல்லது என்றார். நான் தான் முடியாது என்று கூறிவிட்டேன். 'வக்கு' இல்லாதவர்கள் தாம் அப்படிச் செய்வார்கள்" என்று விளக்கம் தந்தான்.

''பெண் எப்படி; கருப்பா சிவப்பா''

''சே கருப்பு என்றாலே எனக்குப் பிடிக்காதுங்க''

'சேரிப் பெண்' என்ற கவிதை பரிசு பெற்ற கவிதை யாக இருந்தது.

''உன் கருப்பு நிற அழகில் என் கருத்தை இழந்தேன்'' என்று பாடிய பாட்டின் அடிகள் என் கவனத்திற்கு வந்தன.

''பரவாயில்லையே' எல்லாம் எந்தக் குறையும் இல்லாமல் பொருந்தி இருக்கிறது.''

''மொழி விலக்கு தானே?''

'அது எப்படிங்க விலக்க முடியும். பல பேருக்கு வருத்தமாக இருக்கும். கல்யாணப் பரிசைத் தவிர்ப்பது அவர்களை அவமானப்படுத்துவது போல இருக்கும்'' என்றான்.

என் மனைவியின் வட்டத்தில் இந்த மாதிரி பேச்சு அடிபடுவதைக் கேட்டு இருக்கிறேன். அவர்கள் மொழி விலக்கி இருக்கிறார்கள். கவிஞர் விலக்கவில்லை. முன் னேற்றம் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

''எல்லாம் கைத்தறி ஆடைகள்தானே கல்யாணப் பெண்ணுக்கு''

''எட்டாயிரம் ரூபாயில் தகடு சேலைங்க. நான்தான் ஒற்றைக் காலில் நின்றேன். அதுக்குக் குறைந்து வாங்கக் கூடாது என்று சொல்லிவிட்டேன். எனக்குச் சூட்டுத் தைக்கச் சொல்லி ஐந்தாயிரம் தந்தார்கள். எல்லாம் உயர்ந்த ரகம் தானுங்க''.

'அரை மனிதன்' என்ற கவிதையை எழுதியிருந்தான்.

''ஆடை என்ற சொல்லை எங்கோ கேட்டான்.
அது பாலாடையில் தான் இருக்கிறது
ஆடைக்கு அவன் எங்கே போவான்?
அவன் அரை மனிதன்தானே''

'கந்தல்; கிழிச்சல்; கட்டும் புடவைகள்;
புடவையைவிட ஒட்டுகள் தாம் மிகுதி;
ஒட்டிய வயிறும் கட்டிய கந்தலும்
இந்த நாட்டுக் குடிமகளின் சின்னம்'

என்று பாடிய கவிஞர், பட்டுப் புடவை மட்டும் கட்டும் பகட்டான வாழ்வு பெற்றுள்ளதைக் கண்டு எனக்குள் பெரு மகிழ்ச்சி உண்டாயிற்று.

"நீங்களும் உடன் போனீர்களா?"

"நான்தான் 'செலக்ட்' பண்ணித் தந்தேன். "அவர் எடுத்துக் கொடுத்தால் அதுவே போதும்" என்று அவள் திருப்தி அடைந்தாள். என் செலக்ஷன் அவளுக்கு நிரம்பப் பிடித்திருந்தது. அவள் கடைக்கே வரவில்லை. நான் போனால் போதும் என்றாள்".

"பட்டிக்காடு போல இருக்கிறது"

"இல்லைங்க அவ்வளவு நாணம்; வெட்கம்; அச்சம். அதிலே அவள் சம்பிரதாயப் பெண்,"

அதற்கு மேல் அவள் கேள்வி தொடர்ந்து கேட்பதை நான் விரும்பவில்லை.

"கட்டாயம் வருகிறோம்" என்று கூறி அவன் தந்த பத்திரிகையைப் பெற்றுக் கொண்டேன். உடனே சென்று குங்குமப் பேழை கொண்டு வருவது அவள் வழக்கம். ஆனால் அங்கு அழைக்க எந்தப் பெண்ணும் வராததால் வெறுங்கையோடு திரும்பிச் சொன்றாள்.

"ஏழையின் கண்ணீர்" என்று அதில் இருந்த புதுக் கவிதை ஒன்று எங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண் டிருந்தது.

அவன் என் நினைவு அலைகளில் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டான். சரசுவதி எனக்கு இந்த நாட்டுப் பெண்

எப்படி இருப்பாள் என்பதைக் காட்டினாள். அவளைக் கண்டு நான் வெறுப்பு அடையவில்லை. அவள் 'மனோ நிலை' அது என்று மகிழ்ந்தேன். என் எழுத்துக்கு அவள் உரம் ஊட்டினாள். அந்த வகையில் அவள் என் நினைவில் நல்ல மதிப்பைப் பெற்றாள்.

இலக்கியம் முக்கியம் அல்ல; வாழ்க்கைதான் முக்கியம்.

ஒரு பெண் குழந்தையைப் பெற்றவுடன் தன் கொள்கைகளை எல்லாம் காற்றில் விட்டுவிட்டாளே என்று நினைக்கும் பொழுதுதான் எனக்கு வருத்தம் உண்டாயிற்று. நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகி விட்டது. அதற்காகவே வெளிநாடு போகத் துணிந்து விட்டாள். தன் கணவனைத் தூண்டியிருக்கிறாள். நிச்சய மாக என் மனைவி தந்த பொம்மையின் வடிவத்தில்தான் அவள் மகள் வருவாள். அவள் கற்பனை எவ்வளவு பொருத்தமாக அமையப்போகிறது என்று நினைக்கும் பொழுது எனக்கு வியப்பாகவே இருந்தது.

அந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது? உண்மையில் என் கற்பனையில் அழகிய உருவகம் இடம் பெறவில்லை. உருவகம் தான் பெண்ணுக்குப் பெயராக அமைகிறது. 'விடிவெள்ளி' என்ற பெயர் வைத்தால் நன்றாக இருக்கும். அந்தப் பெண்ணவாது லட்சியப் பெண் ணாக வாழட்டும் என்பது என் கற்பனை 'பெண்ணே நீ வாழ்க' என்று கூறி என் வாழ்த்துரையைத் தெரிவித்தேன்.

ஞானம் தாஜ்மகால் படத்தைத்தான் பரிசாகக் கொண்டு தர வேண்டும் என்று சொன்னாள். அதுதான் அவளுக்குப் பிடித்து இருந்தது. "ஏன், 'பெண்ணே நீ வாழ்க' என்ற அட்டைப் படத்தை அழகுபடுத்திப் பெரி தாக்கித் தரலாமே என்றேன். அதை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. "நாலுபேர் நம்மைப் பார்த்துச் சிரிப்பார் கள் என்றாள்."

ஒரு திக்கற்ற கிழிச்சல் புடவையின் படம்; வாழ வழி யின்றி வழிப் பாதையில் நெளிகிறாள்; அவளை வழிமறித்து இராப் பிச்சை கேட்கிறான் ஒரு வாலிபன்; கையில் பத்து ரூபாய் நோட்டை நீட்டுகிறான். எவ்வளவு உயிர்த் துடிப்புள்ள சித்திரம் இது. அக்கவிஞர் தீட்டிய கவிதை ஓவியத்தையே வண்ண ஓவியமாக எழுதித் தந்தால் அவர் உள்ளம் மகிழ்வார் என்று சொன்னேன்.

அவள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. 'தாஜ்மகால்' படம் தான் அழகாக இருக்கிறது. செத்தவருக்கு எழுப்பிய சமாதிதான், இல்லை என்று சொல்லவில்லை. இன்று வாழும் மனிதன் மட்டும் என்ன? செத்த கொள்கைகளின் மீது தானே கட்டிடங்கள் எழுப்புகின்றான். நீங்கள் இது வரை பேசிவந்த சீர்திருத்தம் புதுமை ஏதாவது ஒன்று அந்த இளைஞனின் குருதியில் கலந்து இருக்கிறதா. பாருங்கள்; கவிதை அவனுக்குத் தொழில் அதை எழுதினால் அவ னுக்குப் பாராட்டுக் கிடைக்கிறது. கவிதை வேறு; வாழ்க்கை வேறு என்று விமரிசிக்கித் தொடங்கினாள்.

நான் சற்று அவள் முன் தோல்வியை ஒப்புக் கொண் டேன். போகட்டும் அதைவிட காந்தியின் படம் தான் நல்லது; தக்கது. அதைத்தான் இன்று காலையும் மாலையும் ஜெபம் செய்கிறார்கள், அவரைப் பின் பற்றுவதாக இந்த நாட்டில் எல்லோரும் சொல்லிக் கொள்கிறார்கள். அந்தப் படத்தைக் கொடுத்தால் நம் மதிப்பாவது உயரும். அரசியல் செல்வாக்கும் கிடைக்கும் என்றேன்.

"இரண்டையும் கொடுத்து விடலாம். நான் விரும்பும் தாஜ்மகால் ஓவியம் சித்திரம் என்பதற்காக. உயர்ந்த லட்சியம் என்பதற்காக நீங்கள் குறிப்பிடும் காந்தியின் படம்" என்று ஒப்புக் கொண்டாள்.

புத்தகம் ஏதாவது கூடப் பரிசு தருவது நல்லது என் றேன். அதற்குத் தகுந்த பரிசு திருக்குறள்தான் என்றேன். அதற்குத் தெளிவுரையும் உடன் தந்தால் நல்லது என்றாள்

அவள். அவளுக்கு ஞானம் என்ற பெயர் வைத்தது மிகப் பொருத்தம் என்று எனக்குப் பட்டது. ''உண்மையில் நீ தான் ஞானம், நீயே தான்'' என்றேன்.

''அதைக் கொடுத்தால் அக்கவிஞரின் மதிப்பு உயரும்; இனி இந்த மாதிரிப் புதுக் கவிதைகளை அவர் எழுதிக் கொண்டிருக்கமாட்டார்கள்'' என்று கூறினாள்.

''சரி'' என்று இந்த மூன்று பொருள்களையும் பரிசுப் பொருள்களாக வாங்கிக் கொண்டேன். அவர்கள் இருவரும் இப்படி மாறுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அவர்களை நொந்து பயன் இல்லை. இன்னும் இந்த நாட்டில் புதுமை கால் கொள்ளவில்லை. சீர்திருத்தம் வாயள வில்தான் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டேன்.

அத்றகாக நான் மனம் சோர்வு அடையவில்லை. ஒரு வானம்பாடி மாறிவிட்டான் என்பதாலோ ஒரு சரசுவதி குடும்ப உணர்வோடு மட்டும் ஒன்றிவிட்டாள் என்பதாலோ இந்த நாட்டு எதிர் காலத்தில் நான் நம்பிக்கையை இழக்க வில்லை. பத்திரிகையிலும் சரி இலக்கியப் படைப்பிலும் சரி ஒரு புதுப் பார்வை வேண்டும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை இருந்தது. இதுவரை இந்த நாட்டுப் பத்திரிகைகள் எழுத்துகள் தனிமனிதப் பிரச்சனைகளில் ஈடுபட்டு அதையே இலக்கியமாக அமைத்துவிட்டன. அரசியல் சிந் தனைகளும் தனி மனிதர் நல்வாழ்வுக்கே திட்டம் வகுத்தன. நிச்சயமாக இந்த நிலை மாறத் தான் போகிறது; மாற்றத்தான் போகிறோம் என்ற சிந்தனை உண்டாயிற்று.

என் எதிர் காலத்தை எண்ணிப் பார்த்தேன். 'விமரி சனம்' என் எழுத்தாக அமையப் போகிறது என்பதை உணர்ந்தேன்.

அது பத்திரிகையானாலும் சரி கதைப் படைப் பானாலும் சரி அது பொது வாழ்வைப் பற்றிய விமரிசன

மாகத்தான் அமையும். விமரிசனம்தான் இலக்கியம்; இலக்கியம்தான் விமரிசனம் என்ற கொள்கை என்னுள் உருவாகியது. படைப்பு வேறு விமரிசனம் வேறு என்று எண்ணுவது தவறு என்று நினைக்கத் தொடங்கினேன். விமரிசனத்தில் தான் படைப்பே இருக்கிறது என்பதை உணரத் தொடங்கினேன்.

தனிப்பட்டவரின் விமரிசனமும் சிந்தனையும் மட்டும் பயன் தராது. சமுதாய பேதங்களுக்குக் காரணம் என்ன என்ற விசாரணையும் வேண்டும்.

மக்களை நல்லவர்களாக மட்டும் ஆக்கினால் போதாது. அவர்கட்டு அழகுணர்ச்சி மட்டும் உண்டாக்கினால் தீராது. வாழ்வில் மலர்ச்சியையும் உண்டாக்க வேண்டும். மகிழ்ச்சியும் மனிதப் பிறப்பு உரிமை. அதைப் பங்கிட்டுத் தருவதில்தான் சமுதாயம் முனைய வேண்டும். சமதர்மப் பாதையை வகுப்பதில்தான் இந்தச் சமுதாயத்துக்கு விமோசனம் ஏற்பட இருக்கிறது என்று என்னையும் அறியாமல் ஒரு முடிவுக்கு வந்தேன்.

நான் தொடங்கப் போகும் விமரிசனம் என்னும் பத்திரிகை இந்தப் பார்வையில் தான் அமையப் போகிறது. சமுதாயத்தின் வரலாற்றைப் புதிய அத்தியாயம் போட்டுத் தொடங்கப் போகிறேன் என்ற உள்ளுணர்வு ஏற்பட்டது.

என் மேஜை மேல் வானம்பாடி விட்டுச் சென்ற 'பெண்ணே நீ வாழ்க' என்ற நூலைப் புரட்டினேன், அதையே என் முதல் விமரிசனப் பொருளாக ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது. அந்த எழுத்து வெறும் சொல்லடுக்குகளாகக் காணப்பட்டது. கொள்கைப் பற்று இல்லாத ஓர் எழுத்தாளன் தீட்டிய படைப்பு அது. வெறும் சொற்களாகவே எனக்குப் பட்டன.

சொற்கள், சொற்கள் வெறும் சொற்கள். அர்த்தமில்லாத சொற்களாக இருந்தன. இந்தச் சொற்களுக்கு

அர்த்தமே இல்லை என்று பட்டது. தொடக்கத்தில் குறிப் பிட்டேனே வாழ்க்கையில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று கேட்டேன். வாழ்க்கையில் பொருள் இருக்கிறது. இந்த எழுத்தில்தான் அர்த்தம் இல்லை என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

'பெண்ணே நீ வாழ்க' என்பது வெறுந்தாளாகப் பட்டது அதையே தலைப்பாக வைத்து ஏன் ஒரு நாவல் எழுதக் கூடாது என்ற எண்ணம் தோன்றியது' என் முன்னால் எழுதுவதற்கு வெறும் தாள்கள் காத்துக் கிடந்தன. பசித்தாளுக்குச் சோறு போடும் வழி வகைகளைத் தீட்டும் கதைத்தாள்களைத் தீட்டுவது என்று முடிவுக்கு வந்தேன். இனி என் எழுத்து வெறுந்தாளாக அமையாது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

'வாழ்க நீ எம்மான்' என்று மட்டும் சொல்லிக் கொண் டிருக்க மாட்டேன். 'வாழ்க இவ்வையகம்' என்று தான் இனி எழுதப் போகிறேன். இன்று எழுத்தாளன் ஓரமாக ஒதுங்கிக் கொண்டு வாழ முடியாது. அவன் சமுகத்துக்காகச் சிந்தனை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு ஓய்வு இல்லை. நினைத்துப் பார்க்க நேரம் இல்லை. அவரவர்கள் ஒரு சில கட்டுகளுக்குள் அடங்கிவிட்டு இருக்கிறார்கள். எழுத்தாளன்தான் உரிமையாகச் சிந்திக்க முடியும்.

இன்று எழுத்தாளர்கள் எழுதி ஓய்ந்து விட்டார்கள் போல் காணப்படுகிறார்கள். சரசுவதியைப் போல அவரவர் வாழ்வுப் பிரச்சனைகளில் இறங்கி ஆழ்ந்துவிடுகிறார்கள். வானம்பாடி போல எழுத்து வேறு வாழ்க்கை வேறு என்று இயங்கிவிடுகிறார்கள்.

இந்நினைவில் ஆழ்ந்த வண்ணம் என் முன்னால் இருந்த 'பெண்ணே நீ வாழ்க' என்ற கவிதை நூலைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

அவள் அதுதான் என் 'ரியலிஸம்' அன்று சிரித்துக் கொண்டே வந்தாள். அவள் சிரிப்பதில் அன்று மட்டும் புதிய அர்த்தம் இருந்தது. அது குடும்ப எல்லையைக் கடந்து நின்றது. சமூகச் சிந்தனையை வெளிப்படுத்தியது. அதில் ஒரு விமர்சனமே அடங்கி இருந்தது. அதை நான் கேட்டு அவமானப்பட நினைக்கவில்லை.

"இது என்ன புத்தகம்?" என்று கேட்டாள்.

"வெறுந்தாள்" என்று கூறினேன். கொள்கையில்லா தவன் படைக்கும் படைப்பு வெறுந்தாள் என்றேன்.

☆ ☆ ☆